Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 22 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மே 04-10, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 509



## மே தினம்

தொழிலாளர்களின் ஏமாற்றங்கள்!

## மீளப் பேசுவார்களா புலிகள்?



## விடைபெறும் சிம்ரன்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## ஆணவம் நீக்கி அமைதியடை



குழம்பிய நிலையிலிருந்த அர்ஜுனனிடம் ஸ்ரீபகவான் பின்வருமாறு கூறுகிறார்:-

உண்ணாவிரதம் இருக்கின்ற மனிதன் உணவை ஒதுக்கி வைக்கிறான். ஆனாலும், அந்தச் சுவையை அவன் மறந்து விடுவதில்லை. ஆனால், பரம்பொருளைக் கண்டு கொண்டால், அந்தச் சுவை பற்றிய ஞாபகமும் ஓடிவிடும். தவம் செய்யும் ஞானியிடம்கூட, ஐந்து புலன்களும் வரம்பு கடந்து சென்றால், அவை தம்மோடு மனத்தையும் இழுத்துச் செல்கின்றன. அவற்றை எல்லாம் நன்றாக அடக்கி, என்னையே அடைக்கலமாகக் கொண்டு, புலன்களைத் தன் வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனது அறிவே நிலையானது. கோபத்தால் மயக்கம் வருகிறது; மயக்கத்தால் நினைவு தடுமாறுகிறது. நினைவு தடுமாறுவதால் அறிவு கெட்டுப் போகிறது. அறிவு கெடுவதால் அவன் அழிந்து போகிறான். கடலில் எவ்வளவுதான் தண்ணீர் வந்து விழுந்தாலும் கடல் நிரம்பி விடுவதில்லை. இன்னும் விழட்டும், விழட்டும் என்று அது அசையாமல் இருக்கிறது. அது போல், எவ்வளவு ஆசைகள் தமக்குள்ளே புகுந்தாலும், வரட்டும் வரட்டும் என்று அதை உள்ளே போட்டுக் கொள்கிறவன் அமைதியடைகிறான். எல்லாவற்றையும் விரும்புகிறவன், அதனையடைய முடியாது. "இது என்னுடையது" என்று சொல்லிக்கொள்ளாதவன், "நான்" என்னும் ஆணவம் இல்லாதவன் எவனோ, அவனையே அமைதி சரணடைகிறது. அவன் "பிரம்ம நிர்வாணம்" எனும் தெய்வீக நிலையை எய்துகிறான்.

"கண்ணன் அருளிய பகவத்கீதை" கவிஞர் கண்ணதாசன் விளக்க உரையிலிருந்து.

அன்யதா சரணம் நாஸ்தி

ச.சோமசுந்தரி-வத்தளை.

## தீர்ப்பிடாதே! தீர்ப்புக்குள்ளாவாய்!

மனித வாழ்க்கையில் தவறுகள் நடப்பது இயல்பானது. தவறு செய்யாதோரையும் சில சமயம் தவறு செய்தவர்களாகக் குற்றம் சாட்டுகிறோம்.

ஆனால் இறைவன் இயேசு கூறுகிறார், "யார் மீதும் தீர்ப்பிடாதே. நீ தீர்ப்புக்குள்ளாவாய்" மற்றவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தும் அளவிற்கு நாம் பலமுறை தீர்ப்பிட்டிருக்கிறோம். அவர்களைத் தீர்ப்பிடும் தகுதி எமக்குக் கிடையவே கிடையாது. ஒருவருடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் சுட்டு விரல் மட்டும் அவன் குற்றத்தை உணர்த்தும்பொழுது மிகுதி ஏனைய விரல்கள் எம் குற்றத்தைச் சாடி நிற்கின்றன! இந்தத் தத்துவத்தை உணர்ந்து நாமும் மற்றவர்களின் வாழ்விற்குத் தீர்ப்பிடுபவர்களாக இருக்காது, அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டி ஆறுதல்படுத்துபவர்களாக விண்ணகத் தந்தையின் சித்தத்தின்படி வாழக் கடவோமாக, ஆகவே "உன்னைப் போல் உன் அயலானையும் நேசித்து புனித மான மக்களாக என்றும் வாழக் கற்றுக்கொள்வோம்.

ஆ.பிரம்மியா.

## ஈமானில் உறுதிகொள்வோம்

ஒருவருடைய வாழ்வில் இன்பத்தைக் கொடுப்பதும் துன்பத்தைக் கொடுப்பதும் அல்லாஹ்தான் என்ற ஈமான் எனும் நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்வது மிகவும் இன்றியமையாதது. இந்த அழிந்து போகக்கூடிய நிலையற்ற பூமியில் எத்தனையோ செல்வங்கள் நம்மை வந்து சேரும். அதே போல் நம்மை விட்டுப் பிரியும். அதெற்கெல்லாம் நாம் மனம் தளர்ந்துவிடக் கூடாது என்பதையே பின்வரும் இறைவசனம் எடுத்தியம்புகிறது.

"மனிதர்களே! பயம் மற்றும் பசியிலிருந்து, ஏதாவதிலிருந்து ஒன்றைக் கொண்டும், செல்வங்கள், உயிர்கள், விளைச்சல் நிலங்கள் ஆகியவற்றில் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்; மேலும், நபியே! இவற்றைப் பொறுத்துக்கொள்பவர்களுக்கு நன்மாராயங் கூறுவீராக!

அவர்கள் எத்தகையவர்கள் என்றால், தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் பிடித்தால், "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம்; நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பச் செல்பவர்களாக இருக்கிறோம்" என்று கூறுவார்கள். அத்தகையோர்தான் அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நல்லாசிகளும், நேர்வழியும் பெற்றவர்கள். (அல்குர் ஆன்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.505


### பரிசுக்குரிய கவிதை

### யாருக்குண்டு அதிகாரம்?

பாலைவன நிலத்தில்
பகலிரவாய் நடக்குது யுத்தம்
உலகத்தின் காதுகளில்
ஓங்கி ஒலிக்குது அதன் சத்தம்
காணும் படங்களிலெல்லாம்
காயம்பட்ட மக்களின் கூடாரம்
இந்தப் போரை நிறுத்த
யாருக்கு உண்டு அதிகாரம்?

எஸ்.இந்திரன்-வவுனியா.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### ஆக்கிரமிப்பு!

பலநாள் போர் செய்தோம்
ஒருநாள் ஏனும் சதாம்
இரசாயன ஆயுதங்களை
பாவிக்கவில்லை!
இருந்தால் தானே பாவிக்க
இல்லாததைத் தேடிக் கொண்டு
ஈராக்கில் இருக்கும்
எண்ணெய்க் கிணறுகளை
ஆக்கிரமிக்க அல்லவா-நாம்
வந்திருக்கிறோம்!

சி.நாகேந்திரன்-
ஆரையம்பதி-03.

### இவர்கள்-போர் வீரர்

மண்ணின் மகிமையினை மாற்றிடவே
மாந்தர்கள் அழிவு அழுகையுமுடனே
மின்னலாய் தொடரும் இந்த
மீளா போர்த்தொடுகைக்கு
முனைந்துவிட்ட இவர்கள்.

போடைஸ் திலகேஸ் சிவஞானம்,
டிக்கோயா.

### எங்கே பார்ப்போமே?

மண்ணோடு மண்ணாக...
மாண்டுவிடும் மனிதா!
மதிகெட்டுப் போராடி...!
நாட்டினைக் கைப்பற்றி...!
மனிதத்தை இங்கு
மண்ணுக்குட் புதைத்துவிட்டு
சந்தோஷத்துடன் இங்கு
சரித்திரம் படைத்திடுவாயா?

ஹப்புத்தளையூர்-மனோ
கோபாலன்.

### புரியவில்லை..

போராடுவது...
மண்ணுக்காகவும்..
மக்களுக்காகவும்-என்றால்
போராட்டத்தில்...
மண் சிதைந்து
மக்களும் மடிந்தபின்...
போராட்டம் யாருக்காக...?

எஸ்.ஜெகதீஸ்வரன்-
நானாட்டான்.

### தலைக்கனம்

படைத்தவன்
பார்த்திருக்கிறான்
படைக்கலம் முன்னேற...
நினைக்கத்தான்
உன்னால் முடியும்-உயிர்
எடுப்பதெல்லாம்
நானேயென்று.

ஏ.ராசேந்திரன்-
கீளியன்குடியிருப்பு.

### எம்மை நசுக்காது

ஏவுகணைகள் எந்திரத் துப்பாக்கி
காவி வரும் குண்டலைகள்
எம் மண்ணில் குவிந்தாலும்
எம்மை நசுக்காது என்றறிவாய் புஷ்ஷே
உம்மை நசுக்கி உயிரைப் பலிகொள்ள
எம்மவர்கள் தயங்கிவிடார்
என்றறிவாய் இன்றே உன்
எண்ணம் விடுத்து ஏறுமையா
கப்பலிலே

எஸ்.எச்.அஸ்மியா-நிந்தவூர்-11.

### 'தயங்கமாட்டோம்'

தன் கருவை வயிற்றில் சுமந்து
தாயாக வேண்டிய பெண்ணே
வெடிகுண்டை மடி சுமந்து-உமக்கு
விருந்து வைக்கக் காத்திருக்கிறாள்
நாம் 'எண்ணெய்', 'தண்ணீர்' என்று
தப்புக் கணக்குப் போட்டு எங்கள்
பங்கருக்குள் நீங்கள் வந்தால்-உம்மை
பந்தாடத் தயங்கமாட்டோம்

த.சங்கீதா-திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.509



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.05.2003

கவிதைப் போட்டி இல.509
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### போதனை எமக்கல்ல!

"பிறர் பொருளை
அபகரிக்காதே"-இது
பைபிளின் போதனை
பாலை வனத்தில்
பைபிளுடன் அமெரிக்க வீரர்கள்
ஈராக்கின் எண்ணெய்
வளத்தை அபகரிக்க!

அ.சந்தியாகோ-கண்டி.

### உயிர்

இரண்டு போர் வீரர்களின்
விஞ்ஞான ஆராய்ச்சியின்
மத்தியில்-உனது உயிர் மட்டுமல்ல
கள்ளங் கபடமற்ற எத்தனை
ஜீவன்களின் இரத்தக்கறை
படியுமோ...?

பத்மாநதி-ஹாலி-எல.

### போராட்டம்

நீர் நிலைகளில்
நீந்தும் மீன்களாய்
பாலைவனச் சோலையில்
பாரத்துடன் ஒட்டகமாய்
கடும் வெயிலில்
கழுவிய ஆடைகளாய்
ஜெயிக்கப் போராடியும்-இந்த
ஜென்மத்தில் முடியவில்லையே.

எஸ்.எம்.ரமீஸ்-அப்புத்தளையூர்.

### வாழ்ந்து பார்

கரும்புக்கு
கசப்பில்லை
வேம்புக்கு
இனிப்பில்லை
வாழ்வு வளம்பெற
பாரினில்
போரின்றி
வாழ்ந்து பார்!

புஹாரி நபீஸா,
வஹமல் கொள்ளாவ.

# உங்கள் பக்கம்

## சமுர்த்தி உதவியைத் துரிதப்படுத்துக!

திருகோணமலையில் சமுர்த்தி சமூக நலக் காப்புறுதிக் கொடுப்பனவு உரிய காலத்தில் கிடைக்க வழி செய்தல் வேண்டும்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச பிரிவுக்குள் சமுர்த்தி உதவி பெறுவோருக்கான சமூக நலக் காப்புறுதிக் கொடுப்பனவு உரிய காலத்தில் கிடைப்பதில்லை என சமுர்த்தி உதவி பெறுவோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையில் சமுர்த்தி உதவி பெறுவோரிடம் இருந்து அவர்களின் சமுர்த்தி உதவ தொகையில் மாதம் ஒன்றில் 30/ ரூபாவைக் காப்புறுதிக்காக சமுர்த்தி அதிகாரசபை பெறுகிறது. ஒவ்வொரு சமுர்த்தி உதவி பெறும் குடும்பமும் வருடம் ஒன்றிற்கு 720/= ரூபாவைச் செலுத்தி இந்தக் காப்புறுதித் திட்டத்தில் இணைகின்றனர். இவர்களின் குடும்பத்தில் ஏற்படும் திருமணம், குழந்தைப் பேறு, இறப்பு, நோய் போன்ற நிகழ்வுகளுக்காக இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

சமுர்த்தி உதவி பெறும் குடும்ப அங்கத்தினர் ஒருவருக்குத் திருமணம் நடைபெற்றால் 1000/= ரூபாவும், குழந்தை கிடைத்தால் முதல் குழந்தையாயின் ரூபா 3000/=மும் சுகவீனம் அடைந்து வைத்தியசாலையில் தொடர்ந்து 7 நாட்களும் அதற்கு மேலும் அனுமதிக்கப்பட்டால் ஒரு நாளைக்கு 50/ரூபா வீதமும், இறப்பு சம்பவித்தால் ரூபா 5000/=மும் என சமுர்த்தி அதிகார சபை வழங்குகிறது. அதிலும் இறப்பு நிகழ்வுடன் 75% வீதமான கொடுப்பனவை உடனடியாகவே வழங்க வேண்டும் என சுற்றறிக்கை கூறுகிறது.

ஆனால் திருகோணமலை பட்டினமும் சூழலும் சமுர்த்திப் பிரிவினர் உரிய காலத்தில் இக் கொடுப்பனவை வழங்குவதில்லை என மக்கள் குறை கூறுகின்றனர்.

எனவே வறுமையானவர்களுக்காக ஆற்றும் மேற்படி கருமத்தை அவர்களின் நிலையறிந்து துரிதமாக்கும்படி சமுர்த்தி உதவி பெறுவோர் கோருகின்றனர்.

அ.இ.முகமட் சாலி-திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசக[ர்] சாலை

**என் உளம் கவர்ந்த முரசே!**

காத்திருந்து உன்னை என்னுள் பிணைப்பதில் எத்தனை கிளர்ச்சி. அத்தனைக்கும் காரணம் உன் வளர்ச்சி. உனை நினைத்தபோது வார்த்தைகள் எங்கோ இடப் பெயர்ச்சி.


வாழ்க நீ! வளர்க எம் முரசகம்! (நூலகம்)

மலர்க்கவி, றிபாஹிம்.

**தினமுரசு ஆசிரியர் அனைவருக்கும்**

உங்கள் ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் நன்றாகவே இருக்கின்றன. இது என் கருத்து மட்டுமல்ல. இங்கு அதாவது கட்டாரில் தொழில் புரியும் அதிகமான நெஞ்சங்களின் ஆசை. என் சார்பாகவும் என் நண்பர்கள் சார்பாகவும் தினமுரசு ஆசிரியர், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, நன்றி.

கி.கிருஷ்ணபவான்-
டோகா, கட்டார்.



**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,**

வாரா வாரம் முரசு வழங்கும் அம்சங்கள் யாவும் அற்புதமே. 'நாட்டுப்புறப் பழமொழிகள்' தலைப்பில் இடம்பெற்ற பழமொழிகளும் கருத்துக்களும் 'ஞானம் பெறின் யாதும் ஒன்றே' ஆக்கமும் அருமை. மேலும், 'நெஞ்சினில் என்ன காயமோ' உள மருத்துவம்' தொடர் கட்டுரையும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மற்றும், 'விடிவுக்காக காத்திருக்கும் நண்பனுக்கு' 'தவறு' சிறுகதைகள் சிறப்பாக இருந்தன.

மங்களா வாமவேன்-
தங்களா வாமதேவன்-
மட்டக்களப்பு.

### முகப்பில் ஒரு வியப்பு

முரசின் முற்பக்கம் உள்ளே உள்ளதைச் சொல்லும் விதம் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. இதன் பக்கங்களைப் புரட்டினால் மூக்கின் மேல் விரலை வைக்க வைக்கிறது.

எதை விடுவது, என எதைப் படிப்பது என வாரா வாரம் வாசகர்கள் திண்டாட்டம்தான். முகப்பில் ஒரு வியப்புத் தந்து சூடு,சுவை, சுவாரசியம் என்று சும்மா சொல்லவில்லை முரசு.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

**கனம்! ஆசிரியர் அவர்களுக்கு,**

தினமுரசு வாசகர்களில் நானும் ஒருவன். பல வகையான ஆக்கங்களை நாளுக்கு நாள் பிரசுரிக்கும் தங்கள் சேவைக்கு என் நன்றிகள்.

சென்ற 507வது முரசில் 'தேடிப்பெற்றவை' பகுதியில் 'நாட்டுபுற பழமொழிகள்' என்ற பகுதியை பிரசுரித்திருந்தீர்கள் உண்மையாகவே என்னைப் போன்ற உயர்தரத்தில் தமிழ்ப் பாடம் கற்கும் மாணவர்களுக்குத் தேவைப்படும் ஒன்று. இவ்வாறான தமிழ்ப் பற்றை வளர்க்கக்கூடிய பல ஆக்கங்களைப் பிரசுரிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

க.பிருதிவிராஜன்-பதுளை.

**என் அன்பிற்கினிய முரசே!**

வாரம் ஒரு முறை என் கரம் சேர்ந்தாலும் ஆண்டுகள் பல சென்றாலும் உன் ஒவ்வொரு இதழும் என்னை மகிழ்ச்சி பூக்க வைக்கத் தவறுவதில்லை. என்றும் தளராமல் வளர வாழ்த்துகிறேன்.

ஜே.பிரபாகரன்-கண்ணகிபுரம்-03.

# எமது பேரம்பேசும் பலத்தை பிரயோகிக்க ஆரம்பித்தால்

# புலிகளுக்கு நெருக்கடி தோன்றும் - டிரோன் எச்சரிக்கை!

சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு புலிகள் முடிவு செய்ததை விட்டு அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றும், தமது உறுப்பினர்களை ஆதரவாளர்களை திருப்திப்படுத்தும் தேவை புலிகளுக்கு இருப்பதாகவும், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

புலிகளின் தாளத்திற்கு ஏற்ப ஆடுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. தங்களது பேரம் பேசும் பலத்தை அதிகரித்துக் கொள்ள அவர்கள் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்திருக்கலாம். பேரம் பேசும் பலம் புலிகளுக்கு மட்டுமல்ல அரசாங்கத்திற்கும் இருக்கிறது, நாம் அதனை பயன்படுத்த முனைந்தால் புலிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரும், என்று பத்திரிகை பேட்டி ஒன்றில் டிரோன் பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர கடுமையான சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

புலிகள் இயக்கம் இலங்கை ஒரே நாடு என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டது. இனிமேல் அவர்களால் அதனை மறுக்க முடியாது. சர்வசன வாக்கெடுப்பொன்றின் பின்னர், பிரிந்து செல்வதற்கான சுய நிர்ணய உரிமையைக் கூட விட்டுக் கொடுக்க அவர்கள் உடன்பட்டிருக்கிறார்கள். சமஸ்டி அமைப்பின் கீழ் தீர்வொன்றைக் காணவும். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேர்தலை நடத்தவும் புலிகள் சம் மதித்திருக்கிறார்கள். இந்நிலையில் மீண்டும் போரை ஆரம்பிப்பது இயலுமான காரியமல்ல, என்றும் டிரோன் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகளில் எதிர்க்கட்சியின் பங்களிப்பு அரசாங்கத்திற்கு அவசியம் என்பதை வலியுறுத்தியிருக்கும் அவர், ஜனாதிபதி தொடர்ந்தும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். பொ.ஐ.மு., ஜே.வி.பி.யுடன் இணைந்து அதனது எதிர்காலத்தை வீணாக்கிக் கொள்ளாது என்று தான் நம்புவதாகவும் வெளிநாட்டமைச்சர் கூறியிருக்கிறார்.

## இசை நிகழ்ச்சிகளுடன் தொழிலாளர் சுதந்திர தினம்

இசை நிகழ்ச்சிகள், சினிமா நட்சத்திரங்களின் கலை விழாக்களுக்கு முக்கியத்துவமளித்து இம்முறை மே தினக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தலை நகரிலும், அதற்கு வெளியிலும் பிரதானமாக மே தினக் கூட்டங்களும் 6 ஊர்வலங்களும் நடத்தப்படவுள்ளன.

ஐ.தே.க.வின் மேதினக் கூட்டம், கொழும்பு நகரசபை மைதானத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். இதில் இரவு முழுவதும் இசை, நடன நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

பொ.ஐ.மு.யின் மேதினக் கூட்டம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் பொரளை கெம்பல் 'மைதானத்தில் நடக்கவிருக்கிறது.

ஜே.வி.பி.யின் மேதின ஊர்வலம், தெஹிவளை எஸ்.டி.எஸ்.ஜயசிங்க மைதானத்தில் ஆரம்பமாகி பி.ஆர்.சி மைதானம் வரை சென்று அங்கு நடைபெறும்.

## பளையில் கொண்டாட்டங்கள்

ஆனையிறவு படைமுகாமை கைப்பற்றி மூன்றாண்டுகள் நிறைவுறுவதை முன்னிட்டு விரிவான கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. பளையில் முக்கிய நிகழ்வு இடம்பெற்றது இதில் புலிகள் இயக்க தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## புலி தளபதிகள் வேண்டுகோள்!

சமாதான காலத்தில், தமது உறவினர்களின் வீடுகளுக்கு விடுப்பில் சென்ற போராளிகளை உடனடியாக விடுப்பிலிருந்து முகாம்களுக்கு வந்து தமது பணிகளை பொறுப் பேற்றுக் கொள்ளுமாறு, புலிகளின் முக்கிய தளபதிகள், தத்தமது படைப் பிரிவுகளுக்கு அவசர அழைப்பு விடுத்துள்ளது.

சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவதென புலிகள் அறிவித்ததன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையை கருத்திற் கொண்டு இராணுவம் எம்மைத்தாக்கக்கூடும். நாம் எமது எல்லைகளை பலப்படுத்துவது அவசியம். எனவே தமது உறவினர்களை பார்க்கச் சென்ற போராளிகள் அனைவரும் பாசறைகளுக்கு திரும்புவது அவசியம் என்று புலிகளின் இராணுவப் பிரிவைச் சேர்ந்த தமிழ்வாணன் கேட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் கூறுகின்றன.

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பலம் இங்கேயே உண்டு

'மீண்டும் ஒரு யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதை நாம் எதிர்கொள்ள தயாராகவே உள்ளோம். அதைவிட முக்கியவிடயம் என்னவெனில் யாழ்ப்பாண மக்களை பாதுகாப்பதற்கென சிங்கள அரசுகளால் தக்கவைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண குடாநாட்டையும் எம்மால் மீண்டும் கைப்பற்ற முடியும். அதற்கு எமது படைகளை வன்னியிலிருந்து அனுப்பி போரிட வைக்கத் தேவையில்லை. யாழ் குடாநாட்டிற்குள்ளேயே எமது படை பலம் தற்போது உள்ளது' என புலிகளின் அரசியல் துறை பிரமுகரான தமிழினி தெரிவித்துள்ளார்.

சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற "சமகால அரசியலும் வரிவசூலிப்பும்" என்ற கருத்தரங்கின் பின்னர் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது, கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலே மேற்கண்டவாறு அவர் கூறினார். இதன்போது தமது வரி வசூலிப்புகளை நியாயப்படுத்தி தமிழினி கருத்து வெளியிட்டார்.

## 'தேவராசாவின் நடமாட்டம் குறித்து தகவல் கசிந்தது எப்படி?'

தெஹிவலை பெபிலியான வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ உளவுப்பிரிவு அதிகாரி லிங்கசாமி தேவராசா கொல்லப்படுவதற்கு 45 நிமிடங்களுக்கு முன்பு வரை படையினரின் பாதுகாப்பில் இருந்ததாகவும் அதன் பின்னர் அவரது நடமாட்டம் குறித்து விரைவான தகவல் கொலையாளிகளுக்கு எப்படிக் கிடைத்தது என இராணுவ புலனாய்வுப் பிரிவிடம் அரசாங்கம் கேட்டிருக்கிறது.

தேவராசா, கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் 'பயன்மிக்க' தகவல்களை படைத்தரப்புக்கு வழங்கியவர் என கூறப்படுகிறது. இவருக்கு உயிரச்சுறுத்தல் இருந்தும் இராணுவம் இவரது பாதுகாப்பு குறித்து அசமந்தமாக நடந்துகொண்டதென கொல்லப்பட்டவரின் மனைவி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இதேவேளை படையினருக்கு தகவல் வழங்குவோர் தொடர்ச்சியாக கொல்லப்படுவதை தடுத்து நிறுத்தும் வழிவகைகள் குறித்து ஆராய பிரதமர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

## தேசிய லொத்தர் சபையை நோர்வே அரசுக்கு விற்க முடிவு!

இலங்கையின் சமாதான முயற்சியில் ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வே அரசாங்கம் தேசியலொத்தர் சபையை வாங்கவுள்ளது.

இலங்கை தேசிய லொத்தர் சபையை நோர்வே அரச நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பது குறித்து கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முறையான கேள்விப் பத்திர நடைமுறைகளை பின்பற்றாமல், நோர்வேயிற்கு லொத்தர் சபையை விற்க அமைச்சர் மிலிந்த மொறகொட ஏற்பாடு செய்துள்ளதாக, அமைச்சர் ரவி கருணாநாயக அமைச்சரவை கூட்டத்தில் குற்றஞ் சாட்டினார்.

மேலும் பல உள்ளூர் அரசாங்க நிறுவனங்களை கொள்வனவு செய்வதன் மூலம், இலங்கையில் நோர்வே தனது முதலீடுகளை அதிகரிக்கவுள்ளது.

## ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் மீது மிலிந்த அதிருப்தி

வாஷிங்டன் மாநாட்டுக்கு புலிகளை அழைத்துச் செல்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டதாக தமிழ்ச்செல்வன் கூறியதையடுத்து பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்த அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் அன்டன் பாலசிங்கம் மன்னிப்புக் கோரியதையடுத்து மிலிந்த மொறகொட தனது முடிவை மாற்றிக் கொண்டது தெரிந்ததே.

ஆனால், தமிழ்ச்செல்வனின் இந்தக் குற்றச்சாட்டுக்கு முன்னதாகவே, புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்போதைக்கு விலகுவதாக அறிவித்தது தொடர்பில், அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளும், விமர்சனங்களும் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச தரப்பு பிரதிநிதிகள் தங்களது சுய பிரபல்யத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கி செயற்படுவதாகவும் பயன்மிக்க முடிவுகளை எடுக்கவில்லை என்றும், குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன. மலிக் சமரவிக்ரம உட்பட ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் பலர் இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக ஏற்கனவே மிலிந்த மொறகொட அதிருப்தியில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## மூதூர் மக்களின் அவதி தொடர்கிறது கொழும்பில் உலருணவு சேகரிப்பு

மூதூர்ப்பகுதியில் அண்மையில் இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இயல்பு வாழ்வுக்கு திரும்பி வருவதாக பிரசாரம் செய்யப்படுகின்ற போதிலும், ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் மரங்களுக்கு கீழேயும், பொது இடங்களிலும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இவர்களுக்கான உணவு, குடிநீர் வசதிகளும் போதியளவு கிடைக்கவில்லை.

மூதூர் பகுதியில் சுமூக சூழ்நிலை நிலவுவதாக அரசியல் தலைமைகளால் கொழும்பில் அறிவிக்கப்படுகின்ற போதிலும், அகதிகளாகியுள்ள முஸ்லிம்களுக்காக உலர் உணவுகளை தந்துதவுமாறு, தென்னிலங்கை முஸ்லிம் பகுதிகளில் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவி தேவை என கொழும்பு உட்பட பல இடங்களில் பள்ளிவாசல்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப்ஹகீம் கூறிவரும் பின்னணியிலேயே இந்த வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

பதற்றம் ஓரளவு தணிந்துள்ள போதிலும் இரவு நேரத்தில் தமது சொந்த இடங்களில் சென்று தங்க மக்கள் அச்சப்படுகின்றனர்.

## காணி வரி அறிமுகம்

காணிகளை வாங்குதல் விற்றல் தொடர்பாக புதிய விதிமுறைகளை புலிகள் அறிமுகஞ் செய்துள்ளனர்.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் காணி சொந்தமாக வைத்துள்ளோர், அதனை விற்கும் போது ஒவ்வொரு காணி துண்டுகளுக்கும் வரி கட்ட வேண்டும் எனவும், அத்துடன் தங்களிடம் விண்ணப்பப் படிவம் வாங்கி பூர்த்தி செய்து தங்களிடம் அனுமதி பெற்ற பின்புதான் காணிகளை விற்க முடியும் என புலிகளால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே மாதம் முதல் யாழ் குடாநாட்டிற்கும் இது விஸ்தரிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## தற்கொலைப் படையை அமைக்க தயாராகிறது சிஹல உறுமய கட்சி

நாட்டை உடனடியாக யுத்தச் சூழ்நிலைக்கு தயார்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கும் சிஹல உறுமய தாங்கள் தற்கொலை படையொன்றை போருக்கு அனுப்ப தயாராக உள்ளதாக தெரிவித்திருக்கிறது.

சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன கருத்து வெளியிடுகையில், நாட்டைத் துண்டாடி புலிகளிடம் ஒப்படைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றஞ் சாட்டியதுடன், அதனைத் தடுத்து நிறுத்த தேசப்பற்றுள்ள அனைவரும் அணிதிரள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

புலிகளுக்கு எதிரான முழு அளவிலான யுத்தத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வழியுறுத்தியிருக்கும் திலக் கருணாரத்ன, தற்கொலைப் படையொன்றை தயார்ப் படுத்துவதற்கு தமது கட்சி தீர்மானித்திருப்பதாகவும், அதற்காக முயற்சி செய்து வருவதாகவும் கூறியிருக்கிறார். சமாதான முயற்சியில் அரசாங்கம் புலிகளிடம் நாட்டைத்தாரை வார்த்து விட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# முரசம்

## மேதினம்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

உலகெலாம் ஒருமித்துக் கொண்டாடும் தொழிலாளர் தினம் மேதினம்!

தொழிலாளர் வர்க்கம் சிக்காக்கோ நகரில் தங்கள் 8 மணித்தியால வேலை நேரத்துக்காக அன்று அத் தொழிலாளர் ரத்தம் சிந்திய அத்தினம் என்றென்றும் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைத்தினமாக அனுஷ்டிப்பதாகவே உலகம் முடிவெடுத்தது. தொழிலாளர் ஒற்றுமையைக் காண்பிப்பதற்கும், தங்கள் மீதுள்ள சுரண்டலுக்கும் அடக்கு முறைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் தங்கள் தொழிற்சங்கக் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்குமாகவே இத்தினம் உலகெங்குமுள்ள தொழிலாளர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.
இலங்கையிலும் இத் தினம் மிக முனைப்புடன் தொழிலாளர்களாலும் இடதுசாரிக் கட்சிகளாலும் கொண்டாடப்பட்டு வந்தது.
இலங்கையில் ஒருகாலத்தில் தொழிற்சங்கங்கள் மிகுந்த பலம்பெற்றும் விளங்கியிருந்தன.
ஆனால் இப்போது நிலைமை மாறிச் சென்றுகொண்டிருக்கிறது. இப்போது இங்கே இது உண்மையில் தொழிலாளர் தினமென்பதாக அல்லாமல் முதலாலித்துவ அரசியல் கட்சிகள் தங்கள் செல்வாக்கை வெளிப்படுத்தும் ஒரு பலப் பரீட்சைக்கான தினமாகவே ஆகிப்போயுள்ளது. இத் தொழிலாளர் தினம் ஒரு பண்டிகை தினமாக வெறும் களியாட்ட களமாக மாற்றம் கண்டு செல்கிறது.
தென்னிந்தியாவிலிருந்து பாடகர்களையும் நட்சத்திரங்களையும் தருவித்து கொண்டாட்டங்கள் நடத்தி மகிழும் நிகழ்வாக ஆக்கப்பட்டுள்ளது.

இங்கே தொழிலாளர் வர்க்கத்தின் நிலை எப்படியிருக்கிறதென இவர்கள் சிந்திப்பதில்லை. இன்னமும் எட்டடிக் காம்பறாக்களான லயன்களில் ஆட்டுப்பட்டிகள்போல அடைபட்டு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் வானத்தைத் தொடும் விலைவாசிக்கு மத்தியில் அரைப்பட்டினியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.
இன்னொருபுறம் நிலமிருந்தும் பல விவசாயிகளுக்கு பயிர் செய்ய இயலாத நிலைமை. ஏனெனில் அவை ஆயுதந் தாங்கிய ஏதோ ஒரு தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

மீனவர்களும் இன்னும் தங்கள் கடற்பரப்பை முழுமையாகப் பயன்படுத்த முடியாத யுத்த வரையரைகள். வடக்குக் கிழக்கில் பொருட்கள் மீதான செயற்கை விலையால் சுரண்டப்படும் பரந்த மக்கள். இன்னும் சிதைந்த நிலையில் வீடு வாசல்கள். தொழிலாளர் தினத்தில் இவற்றையெல்லாம் எடுத்துரைக்க வழியற்ற நிலை.

தொழிலாளர் வர்க்கம் இதிலிருந்து விடுபட வேண்டும். அது இன மத பேதங்களைக் கடந்து சுரண்டலுக்கு எதிராகவும் உழைப்புக்கான உண்மையான மதிப்பை நிலைநாட்டுவதற்காகவும் ஒன்று திரள வேண்டும். இன்னும் அது உலகளாவிய அளவில் விஸ்தரித்த பிரம்மாண்டமான சக்தியாக உருவெடுக்க வேண்டும். உலகத் தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# புலிகளை வழிப்படுத்தும் எண்ணம் பலிக்குமா?

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து இடைநிறுத்தம் செய்வதாக அறிவித்ததையடுத்து நாட்டில் பலதரப்பட்ட விடயங்கள் நிகழ்ந்தேறி வருகின்றன.

ஒருபுறம் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோள்கள்.

இன்னொருபுறம் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தியது சரியேயென்ற சுருதியிலான ஒத்தூதல்கள்.

மறுபுறம் பேச்சுக்களை இடைநிறுத்தியது மகா தவறென்ற குற்றச் சாட்டுக்கள்.

மற்றொருபுறம், பேச்சுக்களை இடைநிறுத்துவது மேலும் அழுத்தம் கொடுக்கவேயன்றி முறித்துக் கொள்ளவல்லவென்ற வியாக்கியானங்கள்.

இவையெல்லாம் வெளிவந்துகொண்டிருக்க,

புலிகளை வழிக்குக் கொண்டுவருவது பற்றிய ராஜதந்திர வியூகங்கள் இன்னொரு அரங்கில் நிகழ்ந்தேறி வருகின்றன.

புலிகளைக் கோபப்படுத்தாது, மாறாக அவர்களின் கோபத்தில் நியாயமுள்ளதாக உணர்வதாகப் பாவனை செய்துகொண்டு, புலிகளைத் தாமாக இறங்கிவர தாஜா பண்ணுகின்ற வகையான முயற்சிகள் ஒருவலத்தில்...

இதேவேளை புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வராவிட்டால் பாரிய நட்டத்தை ஈட்டிக்கொள்ளப் போகிறார்களென்றும், அதனால் கொடையாளி நாடுகளின் நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விடக் கூடாதென்றும் ஆசைகாட்டும் முயற்சிகள் இன்னொரு வலமாக....

புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிச் சென்றால் சர்வதேச நாடுகளின் அதிருப்திக்குள்ளாக நேரிடுமென்ற விதமான மிரட்டல்கள் இன்னொரு வலம்....

இருக்கிறது.

இத் திட்டத்தில் அரசாங்கத்தை ஆட்டம் காணவைக்கும் சக்தி உள்ளதென்பதும் உண்மை.

அதனாலேயே அரசாங்கம் எவ்விதப் பட்டும் புலிகளை மேலும் ஆத்திரமுற வைக்காமல் தாஜா பண்ணி ஒருவாறு பேச்சுவார்த்தைக்குத் திருப்பியழைத்துவர முனைகிறது.

அதன் பிரகாரமே, பாலசிங்கம் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் இருந்து ஒரு வரியை எடுத்துக்காட்டி, புலிகள் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளதாக அக் கடிதத்தில் பாலசிங்கம் தெரிவித்தது தனக்கு மகிழ்ச்சியளிக்கிறதென அசடு வழியும் விதத்தில் ரணில் உடனடியான பதிலில் தெரிவித்தார்.

அத்தோடு புலிகளின் குற்றச்சாட்டுகளுக்கான அரசாங்கத்தின் பதிலை மிகக் கவனமாக ஆராய்ந்து வரைந்து இப்போதுதான் பூர்த்தியாக்கியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் தெரிவிப்பவற்றால் புலிகள் திருப்தியடைவார்களா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியது.

இதேவேளை புலிகளின் பல குற்றச்சாட்டுக்களில் ஏதாவது ஒரு சிலவற்றுக்கான உடன் நடவடிக்கை எடுப்பதாகக் காட்டி புலிகளின் சினத்தைத் தணிக்க முனையும் வகையில் புலிகள் வலியுறுத்திய விடயமான யாழ் இராணுவ முகாம்களை பொது இடங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான முடிவை புலிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

ஆஷ்லி வில்ஸ் தனது முதலாவது பதிலின் ஆரம்பத்திலேயே, பாலசிங்கத்தால் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் உண்மையை மறைத்துக் கூறிய காரணங்களை நாம் கவனமாக ஆராய்ந்தோம் என்றே ஆரம்பிக்கிறார்.

அதில் அவர் Ostensible reasons - உண்மையை மறைத்துக் கூறும் காரணங்கள் - என்ற பதத்தை அழுத்திப் பாவிக்கிறார்.

புலிகளை அவர்களின் சொந்த எல்லை மீறிய செயற்பாடுகளை எடுத்து நோக்கும்படி கூறி, அவர்களின் போட்டியாளர்கள் மீதான படுகொலைகள், முஸ்லிம்கள் மீதான துன்புறுத்தல்கள், பிரதிநிதித்துவமில்லாத வரிவிதிப்புகள், கடற்புலிகளின் வில்லங்கமான நடத்தைகள், தொடரும் சிறுவர் திரட்டல்கள் என்பன புலிகள் நோக்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவனவாக இல்லையென்று தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கு கிழக்கு புறக்கணிக்கப்பட்டதற்காக கொழும்பு அரசாங்கங்களின் தவறான நிர்வாகத்தின் மீது மட்டுமே பழிபோடுவது நகைப்புக்கிடமானதெனவும் புலிகளுக்கும் அதில் பெரும் பங்கு உண்டெனவும், அதன் வன்முறைக்கூடான அதிதீவிர பிரிவினைவாத நிகழ்ச்சிநிரல் ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்து 20 வருடகால அபிவிருத்தியைத் தடுத்தும் உள்ளதென ஆஷ்லி வில்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தோடு புலிகளின் பொருளாதாரத் தத்துவம் என்ன? அது சகலவற்றையும் தானே கட்டுப்படுத்த முனையப் போகிறதாவென்று கேள்வியெழுப்பியுமுள்ளார்.

ஏப்ரல் 14ம் திகதி வாசுிங்டனில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப் படாததையடுத்தே புலிகளின் இடைநிறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், இவ்வாறு அழையாமை புலிகளின் இடைநிறுத்தலுக்கு ஒரு காரணமாக இருந்தாலும் இலங்கை அரசாங்கம் பொது இடங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறாமை, மீள் குடியேற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கையேதும் எடுக்காமை, வடக்கு கிழக்கு வறுமை நிலையை பிரத்தியேகமாகக் கருதி அபிவிருத்திக்கான உதவிகளைக் கோரும் அறிக்கையில் அதற்கு முன்னுரிமை கொடுக்காமை போன்ற விடயங்களை முன்நிறுத்தியிருந்தனர்.

அத்துடன் புலிகள்,. கடலில் நிகழ்ந்த சம்பவங்களையடுத்து தமது கடற் புலிகளுக்கு அங்கீகாரமளித்து, தமக்கான ஒரு கடல் வலயத்துக்கும் எல்லை வகுக்குமாறு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யும்படி நோர்வே மத்தியஸ்தர்களிடம் வலியுறுத்தியிருந்தனர்.

அவர்களும் அவ்வாறான ஒரு திருத்தத்தை முன்வைக்க விளைந்து, இலங்கையின் இறைமையாண்மைக்குப் பங்கம் விளைவிக்க முனைவதாக, எதிர்க் கட்சியினரது சீற்றத்துக்கு ஆளாகியிருந்தனர்.

இந்நிலையில் இவ் விடயம் உணர்ச்சிகரமானதாக மாறிப்போயுள்ளதால் அரசாங்கம் இதற்கு இணங்க முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளது.

ஆனாலும் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவதாயின் இவற்றுக்கு அரசாங்கம் சாதகமான பதில் தரவேண்டுமென்றே வலியுறுத்தி நிற்கின்றனர்.

இவ் விடயம் அரசாங்கத்துக்கும் சுலபமானதல்ல.

அதேவேளை புலிகள் நினைத்ததுபோல் அவர்கள் வழிக்கு விடயங்களைத் திருப்பிக் கொள்ளக் கூடியதானதுமல்ல.

புலிகள் இவ்வாறு பேச்சுவார்த்தையை இடைநிறுத்தி, எதிர்வரும் முக்கியத்துவம் வாய்ந்த ஜப்பான் கொடையாளி நாடுகளின் மாநாட்டைப் பகிஷ்கரித்தால், புலிகள் நினைப்பதுபோல் இலங்கைக்கு அந் நாடுகள் வழங்கும் நிதியைத் தடுத்து விட முடியுமா என்பது கேள்விக்குரியது.

இலங்கையில் சமாதானம் நிலவும் என்ற உத்தரவாதத்திலேயே அந் நாடுகள் இம்முறை அதிகளவு நிதியுதவி செய்ய முன்வந்திருந்தன.

அவ் உத்தரவாதம் புலிகள் யுத்தத்துக்குச் செல்ல மாட்டார்கள், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காண முன்வந்துள்ளார்களென்ற நம்பிக்கையால் ஏற்பட்டதே.

ஆனால் புலிகளே அம் மாநாட்டைப் பகிஷ்கரித்தால் உதவி வழங்கும் நாடுகள் முன் அரசாங்கத்துக்கு எவ்வித நம்பிக்கையைக் காட்ட முடியும் என்ற ஒரு இக்கட்டு நிலையை ஏற்படுத்துவதும், அதன் மூலம் தனது முக்கியத்துவத்தை அரசாங்கத்துக்கு உணர்த்துவதும் இங்கு புலிகளின் நோக்கமாக

இதற்காக யாழ், சுபாஷ் மற்றும் ஞானம்ஸ் ஹொட்டேல்களில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரை கொட்டடிப் பகுதியிலுள்ள அரச காணிக்கு குடிபெயர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கும் புலிகளின் உடன்பாடு இன்னமும் கிடைக்கவில்லை.

ஆனால் இவை, புலிகளின் பிரதான கோரிக்கையான உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களைக் குடியமர்த்தும் விதமாக இராணுவம் வாபஸ்பெறும் விடயத்துக்கு அப்பாற்பட்டவை.

இது உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியிலுள்ள இராணுவ முகாம்கள் தொடர்பான விடயம்.

உயர்பாதுகாப்பு வலயம் குறித்து அரசாங்கம் கோரியிருந்த இந்திய இராணுவ நிபுணர் நம்பியாரின் அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை.

படைத்தரப்பும் அதை விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தில் இல்லை.

அதனால் அரசாங்கம் தெரிவித்துள்ள இம் முடிவு புலிகளின் மொத்தமான கேள்விக்குப் பதிலாக அமைய முடியாது.

எவ்வாறெனினும் அரசாங்கம், புலிகளை இயன்ற மட்டும் பேச்சுவார்த்தைக்குத் திருப்பியழைத்துவந்து ஜப்பான் உதவிவழங்கும் மாநாட்டில் தான் எதிர்பார்த்த பெருமளவு நிதியுதவிகளை ஈட்டிக்கொள்ளவே முனையும்.

எனினும் புலிகளை வழிக்குக் கொண்டுவர முடியாது போனால் ஜப்பான் மாநாடு பிசுபிசுத்துப் போய்விடும் என்று கூறிவிட முடியாது.

இலங்கையைக் காப்பாற்ற அமெரிக்கா இதில் முன்னின்று செயற்படும்.

அமெரிக்க மாநாட்டையொட்டியே புலிகள் இவ் இடைநிறுத்தத்தைச் செய்துள்ளதால் அது அமெரிக்காவுக்கு ஒரு கடப்பாட்டை ஏற்படுத்தி விட்டுள்ளது.


இலங்கையைத் தத்தளிக்க விடமுடியாது என்பதே அது.

ஒருபுறம் பொருளாதார உதவிகள், மறுபுறம் புலிகளால் விளையக்கூடிய யுத்த அபாயம் என்ற இரு பக்கத்திலும் அமெரிக்கா இலங்கையைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

இது-புலிகளின் பாரிய இராஜதந்திரத் தவறாகி விடவும் கூடும்.

அமெரிக்கத் தூதுவர் ஆர்ஷ்லி வில்ஸ் புலிகளின் இப் பின்வாங்கல் குறித்து ஏப்ரல் 24ம் திகதி ராய்ட்டர் செய்திநிறுவனத்துக்கு கொடுத்த பேட்டியில் இதன் பாரதூரத் தன்மை மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

தமிழ்ப் பத்திரிகைகள் இதனை அமெரிக்காவின் 'வேண்டுகோள்' என்பதாகத் தொனியிறக்கி எழுதியிருந்த போதிலும் இது அதற்கு மேலான சில திட்ட வட்டமான எச்சரிக்கையொன்றாகவே தொனிக்கிறது.



மேலும், புலிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் பாத்திரத்தை வகிக்க வேண்டுமென்றால் அவர்கள் வன்முறையையும், பயங்கரவாதத்தையும் கைவிடவேண்டும். உண்மையில் வீரமான செயல் அதன் தலைமை வன்முறையையும் அதையும் விட வன்முறைக்கான அச்சுறுத்தலையும் கைவிட்டு நிரந்தர சமாதானத்துக்கு தற்போது வருவதுதான் என்கிறார்.

அத்தோடு,

"சில தமிழர்கள் புலிகளின் தந்திரோபாயங்களைத் தாங்கள் விரும்பவில்லை ஆனால் தம்மைப் பாதுகாக்க புலிகள் தேவை எனக் கூறுவதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் நினைக்கிறேன் அது முற்றிலும் தவறான கருத்து. தீர்வுக்கான வெளிவரைவுகள் 90ம் ஆண்டுகளிலிருந்தே தெளிவாகத் தெரிகின்றன..... புலிகளின் ஆயுதங்களும் ஆயுதபாணிகளும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை, மாறாக, பிரச்சினையை நீடித்து தமிழர் உண்மையாக நிம்மதியுடன் வாழும் நாளைத் தாமதித்தே வந்துள்ளனர் என அவர் சாடுகிறார்.

இப் பேட்டி தமிழ்ப் பத்திரிகைகள் தெரிவித்ததுபோல் புலிகளுக்கான வேண்டுகோளா, அல்லது கண்டிப்பு நிறைந்த எச்சரிக்கையா என்பதை இப்போது புரிந்து கொள்ளலாம்.

இதற்கு பாலசிங்கம் தமது படை பலத்தைக் கலைக்க முடியாதென்றும் தமது பொருளாதாரம் திறந்த பொருளாதாரமேயென்றும் பதிலளித்திருந்தாலும் வில்ஸ்ஸின் பிரதான நோக்கத்திற்கு இணங்கிப் பேச்சுவார்த்தைக்கு வர உடன்படவில்லை.

இதேவேளை புலிகளின் இந்தப் பகிஷ்கரிப்பையிட்டு ஆராய்ந்த எதிர்க் கட்சிகள், பேச்சுவார்த்தை தொடரவேண்டுமென்றும், ஆனால் கண்காணிப்புக் குழு பக்கச் சார்பாக நடக்கிறதென்றும், அது கோருவதுபோல் அரசாங்கம் புலிகளின் கடற்படையை அங்கீகரித்தால் நாட்டின் இறைமை சிதைந்துவிடுமென்றும் கூறுகின்றன.

இந் நிலையில் அரசாங்கத்தால் கடற் பிராந்தியம் பற்றிய புலிகளின் எதிர்பார்ப்புக்கு இணங்க முடியாத சிக்கல் தோன்றியுள்ளது.

எனவே, புலிகளை பேச்சுவார்த்தையின் வழிக்குக் கொண்டுவரும் எண்ணம்-அமெரிக்காவின் கண்டிப்புக்கு மத்தியிலும்-ஈடேறுமா என்பதுதான் இப்போதுள்ள சந்தேகம்? □

# மலையகக் கல்விக்கு புலிகள் வழங்கிய ஒரு கோடி ரூபாய்

**ம**லையகத்தின் கல்வித்தேவைக்காக ஒரு கோடி ரூபாவை வழங்க புலிகள் முன்வந்திருக்கிறார்கள் என கடந்தவாரம் வன்னி சென்று திரும்பிய அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் கூறியிருக்கிறார்.

மலையக மாணவர்களின் கல்விக்கு யார் மனமுவந்து உதவி செய்தாலும் வரவேற்கலாம். அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டு புலமைப் பரிசில்களுக்காக புலிகளிடம் பணம் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வது சரியா பிழையா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க மலையக கல்வி வளர்ச்சிக்கு ஏதாவது வழியில் உதவகிறார் என்ற அடிப்படையில் சந்திரசேகரன் பாராட்டுக்குரியவர்!

**மலையகத்தில் ஆறுமுகன் தொண்டமானுடன் நேரடி அரசியல் போட்டியில் ஈடுபட்டிருக்கும் சந்திர சேகரன் புலிகளின் அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் உத்தியை சில காலமாக கையாண்டு வருகிறார்.**

சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவதென புலிகள் அறிவித்த உடனேயே முதலாவதாக வன்னி சென்ற அரச உயர்மட்ட அரசியல் பிரமுகர் சந்திரசேகரன் தான். புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்காக வன்னி செல்வதாகவே ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் சந்திரசேகரனைத் தவிர ஏனையவர்கள் எதிர்பார்த்தது போலவே அவரால் தமிழ்ச் செல்வனைத்தான் சந்திக்க முடிந்தது.

மலையகத்தில் ஆறுமுகன் தொண்டமானுடன் நேரடி அரசியல் போட்டியில் ஈடுபட்டிருக்கும் சந்திர சேகரன் புலிகளின் அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் உத்தியை சில காலமாக கையாண்டு வருகிறார்.

மலையகத்தில் தங்களுக்கு ஆதரவான, தம் சொல் கேட்டு நடக்கக் கூடிய தலைவராக சந்திரசேகரனை வளர்த்தெடுப்பதில் புலிகளும் போதிய ஆர்வம் காட்டுகின்றனர். இதே ‘ட்ரக்கில்' சென்று தானும் அரசியல் செய்து பார்க்கலாம் என ஆறுமுகனும் ஆரம்பத்தில் முயற்சி செய்து பார்த்தார் மட்டக்களப்பு சென்று புலிகளின் அலுவலர்களை சந்தித்தார். ஆனால் இது சரிவரும் ‘வியாபாரம்' அல்ல என்று விரைவிலேயே புரிந்து போக பழையபடி தனது ‘தொழிற்சங்க' அரசியலிலே ஆர்வம் காட்டத் தொடங்கினார்.

திம்பு பேச்சுக்களின் பின்னர் புலிகளோ அல்லது வடக்கு கிழக்கு அரசியலோடு சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்களோ எந்தவொரு தீர்வு முயற்சியிலும் மலையக மக்கள் தொடர்பாக ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இலங்கையில் மற்றெல்லா சமூகங்களை விடவும் மிகுந்த வசதியீனங்களோடு, அடிப்படை வசதிகளின்றி நாடற்றவர்களாய் வாழ்ந்த மலையக மக்கள் குறித்து எந்தக் கவலையும் வடக்கு கிழக்கிற்கென செயற்பட்ட இயக்கங்களிடம் இருக்கவில்லை. ஆனால் எத்தனையோ மலையக இளைஞர்கள் தனித் தமிழீழத்திற்கான போராட்டத்தில் தற்கொலையாளிகளாக தங்களை வெடிக்க வைத்து மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலையக அரசியல் தலைமைகளால் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு காலாகாலமாக ஏமாற்றப் பட்டு வந்திருக்கிறார்களோ அதே போல வடக்கு-கிழக்கு அரசியல் தலைமைகளும் தங்களது ‘கால அட்டவணை' ஒன்றுக்காக மலையக மக்களை பயன்படுத்த முயன்றிருக்கின்றன என்பது தான் வரலாறு! புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் தங்களுக்கு ‘இலாபம்' இல்லாமல் எந்த அரசியல்வாதியையும் தூக்கி விடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

ஆறுமுகன் தொண்டமானுடன் போட்டியிட புலிகளிடம் மண்டியிட்டிருக்கும் சந்திரசேகரன் அதற்குக் கைமாறாக மலையகத்திலிருந்து புலிகளுக்கு என்ன பெற்றுத் தருவதாக உத்தரவாதமளித்திருக்கிறார்?

## அண்டை மண்டலத்திலிருந்து...

# மருத்துவ மாணவர் போராட்டம்

**நா**ற்பது லட்சம், அறுபது லட்சம் என்று மருத்துவக்கல்லூரி படிப்புக்கான சீட்டுகளை தனியார் மருத்துவக் கல்லூரிகள் விற்கத் தொடங்கியதைத் தொடர்ந்து தமிழக அரசு மருத்துவ கல்லூரி மாணவர்கள் "தனியார் மருத்துவ கல்லூரிகளை அனுமதிக்காதே" என்று போர்க்கோலம் காண ஆரம்பித்துவிட்டனர். தமிழகம் முழுமையிலுமுள்ள பனிரெண்டு அரசு கல்லூரிகளின் மாணவர்கள் கடந்த மூன்று நாட்களாக உண்ணாவிரதம், முகத்தில் கறுப்புத்துணிகட்டி போராட்டம் என்று போராடி வருகின்றனர்.

மாணவர்கள் முன்னதாக சுகாதாரத்துறை அமைச்சர் செம்மலை அவர்களை பல முறை சந்தித்து பேசினார்கள். அமைச்சர் மாணவர்களிடம், "உங்கள் கோரிக்கையைத்தான் அரசும் தனது கொள்கை நிலையாக அறிவித்துள்ளது. ஆகவே வேண்டாம் போராட்டம்" என்று கூறியுள்ளார். "அரசு கொள்கை என்று கூறினால் மட்டும் போதாது. கொள்கைக்கு சட்டவடிவம் வாங்க வேண்டும்" என்று மாணவர்கள் கூறுகின்றனர்.



**அரசு மாணவர்கள் குரலுக்கு மதிப்பளிக்குமா? பணமுதலைகளின் பார்வைக்கு பணியுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

ஏனென்றால் கொள்கை என்று அரசு ஒரு புறம் கூறினாலும் தமிழகத்தில் பெரும் பண முதலைகள் குறிப்பாக அதிக பணமுள்ள சாராய வியாபாரிகளும், சாமியார்களும் குறுக்குவழியில் மருத்துவக்கல்லூரிகளை நிறுவி மருத்துவத்துறையில் ஒரு சூறையாடலை நடத்தியே தீருவதென்று முடிவெடுத்துள்ளனர். அரசு மாணவர்கள் குரலுக்கு மதிப்பளிக்குமா? பணமுதலைகளின் பார்வைக்கு பணியுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### ஒன்றுபட முடியாத எதிர்க்கட்சிகள்

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக அனைத்துகட்சி எதிர்க்கட்சிகளையும் ஒரணியில் திரட்ட வேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்ட தி.மு.க. தலைவர் கருணாநிதியின் முயற்சி கைகூடவில்லை.

தமிழக சட்டமன்றத்தில் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்தும், ராணிமேரி கல்லூரி இடிப்பு தொடர்பாகவும் பேச முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்ட நிலைமையில் சாலையில் வந்து மறியல் செய்து எதிர்கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் கைதாகினர். இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக்க முயன்ற தி.மு.க.வுக்கு சறுக்கலே மிஞ்சியது. "மத்தியில் தி.மு.க. ஆதரித்துக் கொண்டிருக்கும் பா.ஜ.கவின் அரசுதான் மாநிலத்தில் தி.மு.க.வுக்கு எதிரான அ.தி.மு.கவை இடுப்பில் தூக்கி வைத்துக் கொஞ்சிக் கொண்டுள்ளது. ஆகவே பா.ஜ.கவின் தேசிய முன்னணி அரசிலிருந்து தி.மு.க வெளியேறினால்தான் தி.மு.கவின் அழைப்பை ஏற்க முடியும்" என்று காங்கரஸும், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் பின்வாங்கிவிட்டன. இது. தி.மு.க தலைவருக்கு அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஒரு சேர வரவழைத்துவிட்டது. அவரது ஆத்திரமும், அவசரமும் மேலும் எதிர்கட்சிகளை ஒன்று சேரவியலாமல் தனிமைப் படுத்திவிட்டது. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதாக வாழ்ந்து கொண்டிருக்கும் தி.மு.க.வுக்கு மத்திய அரசிலும் பதவிவேண்டும் மாநிலத்தில் அந்த மத்திய அரசை எதிர்க்கும் கட்சிகளின் உதவியும் வேண்டும்.

### முடிவுக்கு வந்த லாரி ஸ்டிரைக்


**லா**ரி ஸ்டிரைக்கால் இந்தியா பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல நாளொன்றுக்கு தொழிற்சாலைகள் சந்தித்த இழப்புத் தொகை ரூ.20,000 கோடி! லாரி உரிமையாளர்கள் சந்தித்த இழப்பு நாளொன்றுக்கு ரூ.1,500 கோடி! அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் கிடுகிடுவென்று உயர்ந்தன. பெட்ரோல் டீசல் கிடைக்காமல் வாகனங்கள் ஸ்தம்பித்தன பெட்ரோல், டீசல் உள்ள பெட்ரோல் நிலையங்கள் கூட்டத்தால் திணறின. சுமார் 30 லட்சம் லாரிகள் இயங்கமறுத்த நிலையில் ரத்த ஓட்டம் நின்றுபோன நோயாளியின் நிலைபோல இந்திய பொருளாதாரம் நிலைகுலைந்தது.

ஒரு வழியாக அரசாங்கம் இறங்கி வந்து லாரி உரிமையாளர்களின் கோரிக்கைகளை காது கொடுத்து கேட்டது. நினைத்தபோதெல்லாம் டீசல் விலையை தாறுமாறாக உயர்த்துவதற்கு முற்றுபுள்ளிவைக்க வேண்டும். நெடுஞ்சாலைகளில் சுங்கவரி என்று ஆங்காங்கே காசு பறிக்க கூடாது போன்ற லாரி உரிமையாளர்களின் முக்கிய கோரிக்கைகள் குறித்து முடிவெடுக்க கமிட்டி அமைக்க அரசாங்கம் ஒத்துக்கொண்டது.

இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இஷ்டப்பட்ட பெரும் தொகை வசூலிப்பதற்கு கடிவாளம் போட வேண்டும் என்ற கோரிக்கைக்கு, "இன்சூரன்ஸ் நிறுவனங்கள், இன்சூரன்ஸ் ஒழுங்கு நிலைய மேம்பாடு விதிமுறைகளை ஒழுங்காக கடைபிடிப்பது உறுதி செய்யப்படும் என அரசு உறுதி அளித்தது. இந்த வகையில் லாரி உரிமையாளர்களின் பத்து கோரிக்கைகளில் எட்டு கோரிக்கைகள் ஏற்கப்பட்ட நிலையில் பத்து நாள் ஸ்டிரைக் பட்டென்று முடிவுக்கு வந்துவிட்டது.

**கானகன்**

# அதிரடி அய்யாத்துரை



**சங்கரியன்னையைக்** கதிரையால இறக்கச் சொல்லிக் கூட்டணியாருக்கு அன்புக் கட்டளை பிறந்ததொல்லோ! எம்.பி மாரெல்லாம் காலாலிட்ட பணியைச் சிரசால் செய்ய வரிந்து கட்டி நிக்கினமாம். யாழ்ப்பாணப் பக்கம் சம்பந்தமே வைச்சுக் கொள்ளாத சம்பந்தகாரரெல்லாம் சண்டிக் கட்டோட களத்தில நிக்கினமாம். மே தினத்தை ஒரு கை பாக்கிறமெண்ட சாக்கில கட்சிக் கூட்டம் நடத்தி சூசகமாய்ச் செய்தி பரப்பினமாம்.

**கூட்டணிக்** கட்சிக் கூட்டத்தில நடந்த சங்கதியிது. கட்சி விசுவாசம் முத்திப்போன விதானையார் ஒருத்தர் எம்பிக் குதிச்சு ஒரு கேள்வி கேட்டாராம். கட்சிக்குள்ள நடக்கிற தகவல் தினமுரசுக்கு எப்பிடிப் போகுதெண்டு! ஐயோ பாவம். அவர் அப்பிடிக் கேட்டதே அடுத்த நிமிஷம் இங்க கிடைச்சிட்டுதெண்டு தெரியாமல் குதிக்கிறார். இந்தப் போக்கனத்தில மக்கள் எப்பிடி கட்சியை ஆதரிக்கினமெண்டதைப் புரிஞ்சு கொண்டால் சரி!

**மிலிந்த** குழம்பினது தமிழ் செல்வன் பேட்டியாலயா, அமைச்சு மாற்றத்தில அவற்ற கைக்குள்ள இருந்த செல்வாக்கான சபைகளை தலைமை மீளப் பெற்றுக் கொண்ட அதிருத்தியாலயா, எண்டு விளங்கேல்லை. என்னவோ, பீரிஸ் லண்டனுக்குத் தேடிப் போன நேரம் சந்திக்க மறுத்த பாலசிங்கம் மிலிந்தைக்கு மனக் குழப்பமெண்டவுடன விழுந்தடிச்சுப் போனெடுத்துக் கதைச்சு மொழி பெயர்பிலதான் தவறெண்டு ஒரு மூன்றாந்தரப்பில பழிபோட்டு நிலைமையைச் சமாளிச்சுப் போட்டார். எல்லாம் பேட்டி கண்ட பெற்றிகா ஜான்ஸ்ஸுக்குத்தான் வெளிச்சம். எதுவாகினும் பீரிஸை விட தன்ர செல்வாக்கு எப்பிடியெண்டு காட்டித்தான் போட்டார் மிலிந்த!

இரண்டெழுத்தார் தற்காலிகமாக பேச்சுவார்த்தையிலை கலந்து கொள்ளிறதில்லையெண்டு அறிவிச்சவையல்லோ! அதை அறிஞ்சவுடனை எங்கடை கூத்தமைப்புக்காரர் ஆளாளுக்கு ஒரு அறிக்கை விட்டிருக்கினம். வினாயகத்தாரும் சீறி விழுந்த காந்தரும் அட்டகாசமாக கொடுத்திருக்கினம் அறிக்கை. ரண்டெழுத்தாரின் நிலைப்பாட்டை ஆதரிக்கினமாம். ஏதோ தங்கடை அறிக்கையை பார்த்து சனங்கள் அதிர்ச்சியிலை ஆழ்ந்து போய்விடுவினம் என்ற நினைப்பாக்கும். ஆதரிக்காமல் பின்னை இவையலாளை எதிர்க்கமுடியுமே? ஏதோ வேறை விடயங்களிலை ரண்டெழுத்தற்றை நிலைப்பாட்டை எதிர்த்து அறிக்கை விட்டவை மாதிரியல்லோ கணக்கு விடுகினம்!

மே தினத்த முன்னைப்போல கொண்டாட கூட்டமைப்பாரெல்லாம் வேட்டி கட்டி நிக்கினம் நல்லதுதான். ஆனால் தங்கட தங்கட தலைவர்மார்ர தினங்களக் கொண்டாடுரதல்லோ இவைக்கு முழுசங்கடமாக் கிடக்கு. மே மே் திகதி சிறீ அண்ணாவின்ர நினைவு நாள். செல்வத்தார் கொண்டாடப்போறாரோ தெரியேல்லை.

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles

Sterling SERIES

மற்றும் **குளியலறை உபகரணங்களை**
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.


# 17ம் ஆண்டு நினைவஞ்சலி

மே 06



ஒளி நிறைந்த பாதையில்
தமிழ் மக்களின் விடுதலைப்
பயணத்தை
இட்டுச் சென்ற எம்
தலைவா! உன்னை
இருள் நிறைந்த
நாள் ஒன்றில்
இரத்த சாட்சியமாக்கிக்
கறைபடிந்த வரலாற்றைப்
படைத்தனரே கயவர்கள்!
உன்னைக் கொன்றவர்
ஒருமுறை கொன்றனர்
உன்னை மறந்தவர்

## சிறீ சபாரத்தினம் மறைந்த டெலோ இயக்கத் தலைவர்

மறுமுறை கொன்றனர்
உன்னை விற்றவர்
நிதமும் கொல்வரே!
எம் தலைவா!
உனது கொள்கைகளைக்
காற்றில் பறக்கவிட்டு
உனது கட்சிப் பெயரில் ஒட்டிக்கொண்டு
உனக்கே துரோகம் செய்யும்
நீசச் செயலை எண்ணி
நெஞ்சு வேகும்!

**நேசமிக்க தோழர்கள்**
**வெளிநாடுவாழ் டெலோவிஸ்டுகள்.**


## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani** 142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை,கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக **Tel: 074-519754**

## கொழும்பு–சென்னை சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு-சென்னை-சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட சாமான்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி. சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

**மேலதிக விபரங்களுக்கு:**
**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி
**அப்பு: 0065-975 14 941**

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553877

பிரதி புதன்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.



1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஒளடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.

### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை பரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.


### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்



மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஷ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிகள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமுமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரீகத்தின் சக்தியால் என் காதலி என்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.


உலக மாந்திரீக சக்கரவர்த்தி.

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 342464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy. @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. இலங்கை நேரப்படி
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலியா கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# புலிகளின் 'போய்க்கொட்' இராஜதந்திரம்'



அமெரிக்காவுக்கு புலிகளை அழைத்துச் செல்லாமல் விட்டது, இத்தனை பெரிய சிக்கலை தோற்றுவிக்கும் என்று தெரிந்திருந்தால், அந்த வாஷிங்டன் கூட்டத்தை வேறொரு நாட்டில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கக் கூடும்.

பேச்சுவார்த்தையில் இருந்து புலிகள் தற்காலிகமாக விலகிக் கொள்வதற்கு பிரதான காரணமாக, வாஷிங்டன் மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைக்காமல் போனமையே குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிரந்தர தீர்வு எட்டப்படும்வரை ஆயுதங்களை கைவிட முடியாது என்றும் அவ்வாறான ஒரு தீர்வின் பின்னர் ஆயுதங்களின் தேவை இயல்பாகவே அற்றுப் போய்விடும் என்றும், பாலசிங்கம் தொடர்ச்சியாக கூறிவருகிறார். தர்க்க ரீதியாக இதில் நியாயம் இருக்குமாயின் அதே நியாயம் தங்களுக்கும் பொருந்தும் என்று இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது.**

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நோக்கில், பொதுக் கட்டிடங்களில் இருந்து படையினர் வெளியேறுவதில் உள்ளதாமதம் மற்றொரு காரணமாகவும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது, வடக்கு-கிழக்கு பகுதி மக்கள் விஷயத்தில் விசேட கவனம் செலுத்தாமல், இதனை நாட்டின் பொதுவான பிரச்சனையாக கருதி செயற்படும் அரசின் பொருளாதார திட்டமும் பாலசிங்கத்தின் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

வாஷிங்டன் மாநாட்டில் புலிகளை பங்குபெறச் செய்ய அரசாங்கம் எந்த முயற்சியும் செய்யவில்லை என்பது உண்மைதான். புலிகள் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டிருப்பதும், அவர்களால் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என்பதும், மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அறியாததல்ல.

தங்களுக்கு வரமுடியாது என்று தெரிந்தும் வாஷிங்டனில் இந்த மாநாட்டை நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ததாகவும், அதனை வேறொரு இடத்தில் நடத்தியிருக்கலாம் என்றும் பாலசிங்கம் தனது கடிதத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஆனால், இப்போது இந்த குற்றச்சாட்டை வெளியிடும் பாலசிங்கம், மாநாடு நடைபெற முன்னர் இடத்தை மாற்றுமாறு எந்தக் கோரிக்கையும் விடுக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. உண்மை என்னவெனில், இம்மாநாட்டை அமெரிக்காவில் நடத்தச் செய்து அதில் கலந்து கொள்வதன் மூலம், அமெரிக்காவின் தடையை செயலற்றதாக மாற்ற வேண்டும் என்றுதான் புலிகள் சிந்தித்தனரே தவிர, பொருளாதார உதவி என்பது இரண்டாவது பட்சம்தான்.

புலிகளை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்வதாக அமைச்சர் மிலிந்த மொறகொட வாக்குறுதியளித்திருந்ததாக புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை மறுத்திருக்கும் அமைச்சர் மிலிந்த, புலிகள் தமது குற்றச்சாட்டில் திருத்தம் செய்யும் வரை சமாதானப் பேச்சிலிருந்து அவர் விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்திருந்தார்.

எனினும் பாலசிங்கம் மிலிந்தவுடன் நேரடியாகத் தொலைபேசியில் உரையாடி, அவ்வாறு மிலிந்த வாக்குறுதி எதுவும் அளிக்கவில்லை. தமிழ்ச் செல்வனின் பேட்டி மொழிபெயர்ப்புத் தவறால் திரிபுபட்டுவிட்டதெனக் கூறி மிலிந்தவைச் சமாதானப் படுத்தியுள்ளார்.

பேச்சுக்களிலிருந்து விலக புலிகள் கூறியிருக்கும் இரண்டாவது காரணம், பொதுக் கட்டிடங்களிலிருந்து இராணுவம் வெளியேறுவது தொடர்பிலானது.

போர் நிறுத்த உடன்படிக்கை பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 நாட்களுக்குள், பொதுக் கட்டிடங்களில் இருந்து படையினர் வெளியேறி இருக்க வேண்டும். அவ்வாறு வெளியேறும் இராணுவம் எங்கே மீள முகாம் அமைக்க வேண்டும் என்பதைத் தாங்களே முடிவு செய்ய வேண்டும் என்பதிலும் புலிகள் விடாப்பிடியாக இருந்தனர். யாழ்ப்பாணம், சுபாஷ், ஞானம், ஹோட்டல்களில் இருந்து வெளியேறும் படையினர் மாநகர சபை காணியில் முகாம் அமைக்கக்கூடாது என்று நேரடியாகவும், தமிழ்க் கூட்டமைப்பு ஊடாகவும் புலிகள் அழுத்தங்களை பிரயோகித்தனர். இது அரசாங்கத்துக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. இராணுவ முகாம் அமைய வேண்டிய இடத்தை புலிகள் தெரிவு செய்வதா என்ற சர்ச்சையைக் கிளப்பியது.

நிரந்தர தீர்வு எட்டப்படும் வரை ஆயுதங்களை கைவிட முடியாது என்றும், அவ்வாறான ஒரு தீர்வின் பின்னர் ஆயுதங்களின் தேவை இயல்பாகவே அற்றுப் போய்விடும் என்றும், பாலசிங்கம் தொடர்ச்சியாக கூறி வருகிறார். தர்க்க ரீதியாக இதில் நியாயம் இருக்குமாயின் அதே நியாயம் தங்களுக்கும் பொருந்தும் என்று இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது. நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை வட பகுதியை விட்டு வெளியேறுவதும், முக்கிய பாதுகாப்பு மையங்களில் இருந்து விலகுவதும், சாத்தியமில்லை என்று இந்த தர்க்கத்தின் அடிப்படையிலேயே இராணுவமும் வாதிடுகிறது.

உண்மையில் இது தற்போதைய சமாதான முயற்சியின் அணுகுமுறையில் உள்ள குறைபாட்டைத்தான் வெளிப்படுத்துகிறது. பேச்சுக்கள் முறிந்தால் மீண்டும் போர் வெடிக்கலாம் என்ற சூழ்நிலையில் இவ்வாறான பிரச்சனை எழவே செய்யும். இனப்பிரச்சனையின் அடிப்படை விடயங்கள் ஆராயப்பட்ட மூல வேர் சீர்படுத்தப்பட்ட நிலையில் புனர்வாழ்வு, பாதுகாப்பு கெடுபிடிகளை அகற்றுதல் என்று சமாதான முயற்சி நகர்ந்திருக்குமாயின், இத்தகைய சிக்கல்கள் தோன்ற வாய்ப்பில்லை. இங்கே எல்லாம் தலைகீழாகவே நடக்கின்றன.

பாலசிங்கத்தின் கடிதத்தில் உள்ள மூன்றாவது பிரதான குற்றச்சாட்டு, புனர்வாழ்வு மீள் குடியேற்ற செயற்பாடுகளின்போது வடக்கு-கிழக்கை விசேடமாக கவனத்தில் கொள்ளாது, இந்த விஷயத்தில் தென்னிலங்கையையும் அரசு சேர்த்துக் கொண்டுள்ளது என்பதாகும். அதாவது சமாதான முயற்சியின் பின்னர் கிடைக்கும் சர்வதேச நிதி உதவிகளை அரசாங்கம் தென்னிலங்கை அபிவிருத்திப் பணிகளில் செலவிடக் கூடாது என்பதே இதன் அர்த்தம்.

வழமையான மாநாட்டுக்கு புறம்பாக நிதி உதவி தொடர்பாக நடக்கும் மாநாடுகள், சமாதான முயற்சிகளின் பலனாக கூட்டப்படுபவை என்பது உண்மைதான். ஆனாலும், இந்த மாநாடுகளின் மூலம் கிடைக்கும் மொத்த நிதியையும் வடபகுதி புனரமைப்பில் பயன்படுத்த வேண்டும் என புலிகள் கூறுவது தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் சமாதானத்திற்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெறவே உதவும்.

வடபகுதி நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் பின் தங்கியுள்ளது என்பதில் எவ்வித விவாதத்திற்கும் இடமில்லை. வன்னி மக்கள் 19ம் நூற்றாண்டில்தான் இன்னும் வாழ்கிறார்கள். ஆனால் கிடைக்கும் முழு நிதியையும் புலிகள் கூறும் திட்டங்களில் செலவிட முயற்சித்தால், அரசாங்கத்தின் இருப்பும் சமாதானமும் பலத்த நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரலாம். சமஷ்டி முறையின் கீழ் தீர்வுகாண அரசும் புலிகளும் உடன்பாட்டுக்கு வந்தபோது 'சமஷ்டி' குறித்து தென்னிலங்கை மக்களை சாதகமான முறையில் அறிவூட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என பாலசிங்கம் சிலமாதங்களுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தார். இப்போது தென்னிலங்கை மக்களை ஆத்திரமூட்டும் வகையில் நிதி உதவிகளை கையாள வேண்டும் என்று அதே பாலசிங்கம் ஆலோசனை கூறுகிறார்.

எவ்வாறெனினும் இப்போது புலிகளோ அரசோ, சமாதானத்திலிருந்து விலகுவது அத்தனை சுலபமான காரியமல்ல. சர்வதேச சமூகத்தின் அதிக பட்ச அக்கறை இரண்டு தரப்பினரையும் பின்வாங்க முடியாதபடி இறுக்கி வைத்துள்ளது.

பேச்சுக்களிலிருந்து இப்போதைக்கு விலகும் முடிவை 'மிகுந்த வேதனையுடன்' எடுத்ததாக பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

புலிகளின் 'வேதனை மிக்க முடிவுகள்' முன்னைய சந்தர்ப்பங்களில் என்றால் யுத்தத்தில்தான் நிறைவு பெற்றுள்ளன.

இம்முறை அவ்வாறு நிகழக் கூடாது. குறிப்பிட்ட சில பிரச்சனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டால், அவற்றை சுமூகமாக தீர்த்து, விட்டுக்கொடுப்புகளுடன் பயணத்தை தொடர்வதே புத்திசாலித்தனமானது. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள படையினரை வேறு இடங்களுக்கு நகர்த்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், சிக்கலை தீர்க்கும் நடவடிக்கைகள் ஆரோக்கியமான திசையில் நகர்வதை அவதானிக்கலாம். புலிகளும் மென்மையான போக்கை கடை பிடிக்க வேண்டும்.




**தென்னாபிரிக்க சமாதான முயற்சியின் போது, ஒரு கொலைச் சம்பவத்தையடுத்து ஒன்றரை வருடங்கள் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இடைப்பட்ட காலத்தில் இரு தரப்பிலும் பேச்சு வார்த்தை குழுவில் இடம் பெற்றவர்கள், தனிப்பட்ட ரீதியில் தொடர்புகளை வலுப்படுத்தி மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தனர்.**

தென்னாபிரிக்க சமாதான முயற்சியின் போது, ஒரு கொலைச் சம்பவத்தையடுத்து ஒன்றரை வருடங்கள் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இடைப்பட்ட காலத்தில் இரு தரப்பிலும் பேச்சு வார்த்தை குழுவில் இடம் பெற்றவர்கள், தனிப்பட்ட ரீதியில் தொடர்புகளை வலுப்படுத்தி மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தனர்.

தற்போதைய நெருக்கடியில் தென்னாபிரிக்கா ஒரு சிறந்த முன்னுதாரணம். ●



சின்னஞ் சிறுகிளியே-கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே-உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்.
சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை


## முயன்றால் முடியும்!

அன்று வழக்கம் போல் பள்ளியில் காலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்து முடிந்ததும் தலைமை ஆசிரியர் பேச ஆரம்பித்தார். மாணவர்களுக்கு பொதுவாகப் பல அறிவுரைகளைக் கூறினார். "மாணவ மாணவிகளே! இந்த வருடம் காலாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவன் முத்து. இது போல் நீங்கள் அனைவருமே நல்ல மதிப்பெண் பெற்று தேர்வு செய்ய வேண்டும்" எனக் கூறினார்.

அந்த வகுப்பில் படிக்கும் அனைவரும் ஏதோ ஓரளவு படிப்பவர்கள். ராஜா, செந்தில், கார்த்தி மூவரும் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவர்கள். மூவரும் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டினார்கள்.

"அரையாண்டுத் தேர்வில் மூவரும் முதல் மதிப்பெண் பெற வேண்டும். முத்து இரண்டாம் இடமோ மூன்றாம் இடமோதான் பெற வேண்டும். இப்பொழுதே நாம் ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று செந்தில் கூறினான்.

"சரி, சரி, நாம் வழக்கமாகச் சந்திக்கும் இடத்திற்கு வந்துவிடுங்கள். அங்கே பேசி முடிவு எடுத்து விடலாம்!" என்று கார்த்தி கூறினான். அவர்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு விடை பெற்றுச் சென்றார்கள்.



அரையாண்டுத் தேர்வு நெருங்கியது. அன்று தனியே படித்துக் கொண்டிருந்த முத்துவிடம் நன்றாக மூவரும் பேசினார்கள். முத்துவோ படிப்பதில் கவனமாக இருந்தான். "சரி சரி முத்து படிக்கட்டும். நாம் செல்வோம்" என்ற ராஜா. "முத்து! நாளை காலை நாங்கள் உனக்கு உணவு வாங்கித் தருவோம்" என்றும் கூறினான்.

மறுநாள் அரையாண்டுத் தேர்வு ஆரம்பம். முத்துவை அழைத்துக் கொண்டு அந்த ஹோட்டலில் நுழைந்தார்கள் மூவரும். சர்வரை நோக்கி "அந்த டிபனை கொண்டு வாருங்கள்" என செந்தில் கூறினான். அதன்படி உணவு வரவழைக்கப்பட்டது. அனைவரும் உண்டு முடித்தனர்.

பின் பரீட்சை நடக்கும் அறையினுள் நுழைந்தார்கள் நால்வரும். முத்து தனியே சென்றவுடன் "ஏன்டா ராஜா, நாம் முத்துவுக்குக் கொடுத்தது வேலை செய்யுமா?" என்று கேட்டான் கார்த்தி. "கண்டிப்பாக வேலை செய்யும்" என்று கூறினான் ராஜா.

அன்று முத்து நல்ல முறையில் பரீட்சை எழுதி முடித்து வெளியில் வந்தான். முத்து வெளியில் சென்றவுடன் "ஏண்டா, அந்த சர்வர் நாம சொன்னதைச் செய்தானா, இல்லையா?" எனக் கேட்டான் செந்தில். "வாங்கடா அந்த சர்வரைப் பார்த்துவிட்டு வருவோம்" என்று கூறி மூவரும் புறப்பட்டார்கள்.

அங்கே சர்வர், "தம்பி! அந்த முத்து நல்லவன். அவங்க அப்பா அவனை கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார். நாம ஏன் தம்பி அவனைக் கெடுக்கணும்? நீங்கள் கஷ்டப்பட்டு படியுங்கள். நீங்கள் அவனுக்கு நிகராக வர முடியும். தம்பி நாம முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை!" என்று அறிவுரை கூறினார்.

சிறிது நேரம் சிந்தித்த அவர்கள் "ஐயா எங்களை மன்னித்துவிடுங்கள்! நாங்கள் ஏதோ ஒரு அகம்பாவத்தில் முத்துவுக்கு உணவில் தூக்க மாத்திரையைக் கலக்கச் சொன்னோம். எங்களை மன்னித்துவிடுங்கள்!" என்று கூறிவிட்டு மூவரும் நல்லவர்களாக மாறி வெளியில் வந்தனர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. நா எரியும். உடல் குளிரும். அது என்ன?
2. வேர்விட்டு வெளிச்சம் காட்டும். அது என்ன?
3. குண்டு கத்தரிக்காய் கொடியில் தொங்குது. அது என்ன?
4. கறுத்தக் கிளிக்குக் காவல் சிப்பாய்கள் நூறு பேர். அது என்ன?
5. வீட்டைக் கட்டும் சின்னானுக்கு, வாடகை கேட்கத் தெரியாது. அவன் யார்?
6. ஏழு கலர் சேலை. எடுத்து உடுத்த முடியாது. அது என்ன?
7. பட்டணத்துப் பனைமரம் வெட்ட வெட்ட வளருது. அது என்ன?
8. பல்லில்லா நாக்கனார், படபடவென்றே பேசுவார். அவர் யார்?
9. மழை போன பிறகு மாடசாமி குடை பிடிக்கிறான். அவன் யார்?
10. தொட்டால் உறங்கும் விட்டால் சிரிக்கும். அது என்ன?

### விடைகள்

1. நாடாவிளக்கு 2. மின்னல்
3. தலைப்பின்னல்-குஞ்சம்
4. கண்ணின் கருவிழி, இமைகள்
5. கறையான் 6. வானவில்
7. நகம் 8. மணி 9. காளான்
10. தொட்டாச் சிணுங்கி.

## அதிசய உலகம்!



மாம்பாஸ் எனப்படும் இவ்வகைப் பாம்புகள் உலகிலேயே மிகவும் வேகமாக நகரக் கூடியவை ஆகும். மணிக்கு 12 கி.மீ. வேகத்தில் செல்லும் இவை மரம் ஏறுவதிலும் மிகவும் திறமைசாலிகள். ஆபிரிக்காவில் வசிக்கிறது. மாம்பாஸ் பாம்புகள் 4 வகைப்படும். அவற்றில் கறுப்பு மாம்பாஸ் பாம்பு நாலரை மீட்டர் நீளமுடையது. இது தாக்கப்பட்டால் உடனே நம்மைக் கொத்திவிடும். இதன் விஷம் நரம்பு மண்டலத்தைத் தாக்கி இறக்க நேரிடும். சிம்பாப்வேயில் மூன்று வருடத்தில் பதினொரு மனிதர்கள் இப் பாம்பு கடித்ததால் இறந்துள்ளனர்.



நீல வண்ண வண்ணத்துப் பூச்சிகள் தங்கள் முட்டைகளை காட்டு மரங்களின் இலைகளில் இட்டு வைக்கும். முதல் மூன்று வாரத்திற்கு கம்பளி பூச்சி நிலையில் உள்ள வண்ணத்துப் பூச்சிகள், இலைகளைத் தின்று உயிர்வாழும். பிறகு நைசா மரத்திற்குக் கீழே இறங்கி தரையில் வந்து சிகப்பு எறும்புகளுக்காகக் காத்திருக்கும். அப்போ என்ன பண்ணும் தெரியுமா... தன் மீதிருந்து லார்வா நிலை எறும்புகள் போன்ற வாசனையை வெளியிடும். இவ் வாசனையை முகர்ந்து வரும் சிகப்பு எறும்புகள் ஏமாந்து போய் இவற்றை எடுத்துப் போய் தங்கள் வீட்டுக்குள் வைத்து உணவளித்துப் பாதுகாத்து வரும். இந்தச் சிகப்பு எறும்புகளின் கவனிப்பில் உருகி தங்களிடம் இருந்து தேன் போன்ற திரவத்தைச் சுரக்கும். அவற்றை இந்தச் சிகப்பு எறும்புகள் ருசித்துச் சாப்பிட்டுவிட்டு இந்தக் கம்பளிப்பூச்சி நிலை வண்ணத்துப்பூச்சிகளை வளர்க்கும். கொஞ்சம் கொஞ்சமாக பியூப்பா நிலைக்கு வந்து பிறகு வண்ணத்துப்பூச்சியாக மாறியதும் எறும்பு வீட்டைவிட்டுப் பறந்து போயிடும் நீலநிற வண்ணத்துப் பூச்சி.

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு எப்போது தொடங்கப்பட்டது? **1924-ம் ஆண்டு**
2. தாழ்வு மனப்பான்மை பற்றி உலகிற்குக் கருத்துரை வழங்கிய ஆஸ்திரிய மனோவியல் அறிஞர் யார்? **ஆல்பிரெட் அட்லர்**
3. வாட்டர் லூ போரில் நெப்போலியனைத் தோற்கடித்தவர்? **ஆர்தர் வெல்லெஸ்லி**
4. புகையிலையை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது? **அமெரிக்கா**
5. உடலின் இரத்த சுழற்சியைப் பராமரிக்கும் மனித உறுப்பு எது? **இருதயம்**
6. ஹோரோலாஜி என்பது எதைக் குறிக்கும் விஞ்ஞானச் சொல்? **நேரத்தை அளவிடுவதைக் குறிப்பதாகும்.**
7. கொள்ளையடிப்பதை அறிவிக்கும் கருவியான பர்கிளர் அலாரத்தில் பயன்படுத்தப்படும் செல் எது? **போட்டோ எலக்ட்ரிக் செல்**
8. மிகப்பெரிய துணைக்கோளைக் கொண்டிருக்கும் கிரகம்? **ஜூபிடர்**
9. மெர்குரி தெர்மாமீட்டரைக் கண்டுபிடித்தவர் யார்? **கேப்ரியல் டேனியல் பேரன் ஹீட்.**
10. ஆசிய கால்பந்துக் கோப்பையை முதன் முதலாக வென்ற அணி எது? **தென் கொரியா.**

## சிறந்த வர்ணத்திற்கு. பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.05.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: 494
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 491

பரிசுக்குரியவர்:
ஏ. ஜெயந்தி,
212, காந்தி நகர், அன்புவழிபுரம், திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வி. ராகுலன் பரமனைநார் கோவில் வீதி, அரையம்பதி-01. | ச. சிவமைந்தன், சுதுமலை வடக்கு, மானிப்பாய். |
| செல்வி கரிஸ்கா முரளிதரன், 101, அருணகிரி வீதி, திருகோணமலை. | வீ. தனோஜனா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| எ.ஃப். நிஸ்மா, 441/I, மாத்தறை வீதி, பலான, வெலிகம. | ஷதுர்ஷா கனகராஜ், இக்கொல் ஆங்கிலப் பாடசாலை, திகன. |
| வி. விமலிகா, 426/16-5/6, வி.ரி.வி., தொடர்மாடி, கொழும்பு-13. | மொஹமட் நிபாத் மொஹமட் அப்துல்லா, 50ஏ, அலுபொத, படல்கும்புற. |
| உ. ஜனார்த்தன், கொ/ கணபதி வித்தியாலயம், கொழும்பு. | வி. தப, மாட்டன் வீதி, மேற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். |

## அறிவுத் தேடல்


சென்ற வாரப் புதிரின் விடை:
20 முக்கோணங்கள்

## இந்த வாரப் புதிர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 4 | 3 | | | |
| 14 | 10 | 7 | | |
| 46 | 32 | 22 | 15 | |
| D | C | B | 46 | A |

மேலே உள்ள எண்கோலத்தை கவனமாக அவதானித்து ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்களை கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

# பயம்



ஈராக்கில் போர் நடைபெற்றாலும் தனது பழைய போர்க்களமான ஆப்கானிஸ்தானை அமெரிக்கா மறந்து விடவில்லை. இன்றைக்கும் அங்கே மலைக் குகைகளுக்குள் மீதமுள்ள தலிபான் வீரர்களைத் தேடி அமெரிக்கா வேட்டை நடத்திக்கொண்டுதான் இருக்கிறது.

ஆப்கானில் தங்கியுள்ள அமெரிக்க இராணுவத்தின் பெண் அதிகாரி காலையில் உடற்பயிற்சி செய்யும்போது கையில் துப்பாக்கியோடுதான் ஓட வேண்டியுள்ளது. இந்த எச்சரிக்கையுணர்வு இல்லாது போனால்... கதை முடிந்தது.

தலிபான்களின் துப்பாக்கிகள் ஆப்கானில் இன்னமும் விழித்துக்கொண்டுதான் இருக்கின்றன.



# ஆணி மருத்துவம்

இதென்ன தலையில் ஆணி அறைந்து கொள்ளும் வேண்டுதலோ... என்று நினைக்கத் தோன்றுகிறதா?

"அகியுக் பஞ்ச்சர்" தென்கிழக்காசிய நாடுகளில் மிகவும் பிரபலமான மருத்துவமுறை. நோயோடு சம்பந்தப்பட்ட இடங்களில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சிறிய ரக ஆணி வகைகள் அறையப்படுகின்றன.

இவர் நோயாளியல்ல. சீன 'அக்கியூ பஞ்ச்சர்' மருத்துவர். தலையில் ஏற்படும் நோய்க்குச் சிகிச்சையளிக்கும் விதம் தொடர்பாக விளக்கமளிக்கிறார்.



# அமோக வரவேற்பு

பிரிந்தவர் கூடினால் கேட்கவும் வேண்டுமா? ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுவதற்காக வளைகுடா சென்ற அமெரிக்கப் படைகளின் உயர் அதிகாரிகள் படிப்படியாக நாடு திரும்ப ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக இந்தப் போரில் பயன்படுத்தப்படாத அமெரிக்கப் படையணிகளின் வீராக்ள் பெரும்பாலும் தமது சொந்த நாட்டுக்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. நீர்மூழ்கிக் கப்பல் பிரிவில் கடமையாற்றும் தனது கணவர் போர் முடிந்து நாடு திரும்பிய மகிழ்ச்சியில் அவருக்கு முத்தமழை பொழிந்து 'மகத்தான' வரவேற்பளிக்கிறார் மனைவி.

துருப்புக்கள் நாடு திரும்பும் காட்சிகள் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும்போது ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் சோகமும் நிலவுகிறது.

போரில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான படையினரின் நினைவஞ்சலிகள் அமெரிக்க ஊடகங்களில் வெளிவருகின்றன.

# திரும்பிய திசையெல்லாம்



திரும்பிய திசையெல்லாம் முகமுடிகள். சீனா, ஹொங்கொங், சிங்கப்பூர் நாடுகளில் எங்கு பார்த்தாலும் முகத்தின் பாதியை மறைத்துக்கொண்டு வாழ வேண்டிய கட்டாயம். சார்ஸ்-பெயரைக் கேட்டாலே நடுங்குகிறார்கள் மக்கள். காட்டுத்தீ போல... அதைவிட வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது இந்தக் கொடிய நிமோனியா காய்ச்சல். சீனாவில் சில மாதங்களுக்கு முன்னர்தான் இந்த நோயைக் கண்டறிந்தார்கள். ஆனால் அரசாங்கம் விழித்துக்கொள்ளத் தாமதமானதில் நிலைமை கைமீறிப் போய்விட்டது. இப்போது உலகின் மொத்த சார்ஸ் நோயாளரின் எண்ணிக்கை என்ன என்பது எவருக்கும் சரியாகத் தெரியாது. நோயை கண்டபடி பரவவிட்டு பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் சீன அரசைக் கடுமையாகச் சாடியுள்ளது.

விளைவு சீன சுகாதார அமைச்சரின் கம்யூனிஸ்ட் கட்சிப் பதவி பறிபோனது. பெய்ஜிங் மேயரின் பதவி தொலைந்தது.

முகமூடி அணிந்துகொண்டு ஏகத்துக்கும் சிரமமான வாழ்வு. காதலர்கள் சந்தித்துப் பிரியும்போது முத்தமிடக் கூட வசதியில்லை.....



தகவல் பெட்டி



ஜெய் ஆகாஷ்–சிம்ரன்
படம்: இனிது இனிது காதல் இனிது

## மலையாளக் கரையொதுங்கும் ஸ்னேகா

ஸ்னேகா அதிக நேரம் வீட்டிலேயே இருக்கும் நிலை உருவாகிவிட்டது. அதாவது படவாய்ப்புகள் குறைந்து கொண்டே வந்து இப்போது 'சுத்தம்' என்ற நிலைக்கு வந்துவிட்டது.

ஸ்ரீகாந்த்துடன் நடித்து வரும் 'பார்த்திபன் கனவு' மற்றும் அஜித்துடன் 'மகா' ஆகிய படங்கள் மட்டுமே தற்போதைக்கு அவரது கையில் உள்ளன. புதுப்பட வாய்ப்புகள் ஏதும் இல்லை.


இதில் 'பார்த்திபன் கனவு' படப்பிடிப்புதான் கொஞ்சம் ஜாருராக நடக்கிறது. அஜித்தின் 'மகா' படு ஸ்லோ. எப்போதாவதுதான் ஷூட்டிங்கே நடக்கிறது. இதனால் பெரும்பாலான நேரம் ஸ்னேகா வீட்டில்தான் உட்கார்ந்திருக்கிறார்.

அழகாக இருந்தும், கொஞ்சம் நடித்தும் கூட தனக்கு பட வாய்ப்புகள் வரவில்லையே, எல்லோரும் இந்தி நடிகைகள் பின்னாலேயே அலைகிறார்களே என்று அங்கலாய்க்கிறார் ஸ்னேகா. ஆனால், ஸ்னேகாவைப் பற்றிப் பேசினாலே தயாரிப்பாளர்கள் பதறுகிறார்கள். அவரை வைத்து படம் எடுத்த ஆர்.பி. சௌத்ரி தவிர எல்லோருக்குமே நஷ்டம்தான் மிஞ்சியது. இதனால் ஸ்னேகா ராசி தயாரிப்பாளர்களை ஆட்டுவிக்க ஆரம்பித்துவிட்டது.

தமிழில் வாய்ப்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டதால் தாய்மொழி தெலுங்கில் வாய்ப்புகளைத் தேடி வந்தார். தெலுங்கிலும் இந்தி நடிகைகள் ஆதிக்கம் கொடி கட்டிப் பறப்பதால் கோபத்துடன் வெளிவந்துவிட்ட ஸ்னேகா இப்போது மலையாளம் பக்கம் கவனத்தைத் திருப்பி வருகிறார்.

## அபிராமியின் நம்பிக்கை

சண்டியர் படம் தனது வாழ்க்கையில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தித் தரப்போகிறது என்று நம்பும் அபிராமி, இந்தப் படத்தில் நடித்து முடிக்கும்வரை வேறெந்தப் படத்திலும் நடிக்க மாட்டாராம். புதுமுகங்களுடனோ அல்லது வயதான கதாநாயகர்களுடனோ இனிமேல் ஜோடி சேர்ந்து நடிக்கத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்த அவர், விஜய்யுடன் சேர்ந்து நடிப்பதற்காக அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரனை நேரில் சந்தித்து வாய்ப்பு கேட்டிருக்கிறார்.



மிதுன்–டெய்சி
படம்: இன்று முதல்

# சினிவிசிட்

## விடைபெறும் சிம்ரன்?

சிம்ரனும் அவரது வீட்டினரும் அவரது திருமணச் செய்தியை மறுத்துள்ளனர்.

சிம்ரனுக்கும் திலீப் என்ற பைலட்டுக்கும் மும்பையில் திருமண நிச்சயதார்த்தம் நடக்கப் போவதாகக் கூறப்பட்டது.

'யாரோ ஒரு தயாரிப்பாளர் என்னுடைய திருமணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என் திருமணத்தை நான் ஏன் மறைக்கணும்? நிச்சயமாக ரசிகர்களுக்குத் தெரியும்படித்தான் திருமணம் செய்துகொள்வேன். எதையும் மறைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை' என்று எரிச்சலுடன் கூறியுள்ளார் சிம்ரன்.


பத்திரிகைகள் எப்படி வேண்டுமானாலும் எழுதிவிட்டுப் போகட்டும், எனக்கு அதைப் பற்றிய கவலை இல்லை என்றும் தன் உதவியாளர் காமராஜிடம் கோபத்துடன் சிம்ரன் கூறியுள்ளார்.

அதை அவர் அப்படியே நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஹைதராபாத்தில் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு 'கோவில்பட்டி வீரலட்சுமி' படப்பிடிப்புக்காக விரைவில் சென்னை திரும்பவுள்ளார் சிம்ரன். அப்போ நிருபர்களைச் சந்தித்து அனைத்து கிசுகிசுக்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பார் என்றும் கூறப்படுகிறது.

மேலும் 'தீண்ட தீண்ட', 'ஒரு நடிகையின் கதை' போன்ற படங்களில் நடிப்பதற்காக வாங்கிய அட்வான்ஸ் பணத்தைக் கூட சிம்ரன் திருப்பிக் கொடுத்துவிட்டதாக வெளியான செய்திகளும் புரளிதான் என்றும் அவரது உதவியாளர்கள் கூறுகின்றனர்.

அதே போல சிம்ரனின் திருமணச் செய்தி குறித்து எங்களுக்கு எதுவுமே தெரியாது என்று அவரது தங்கை ஜோதியும் மும்பையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.



கீர்த்தி ரெட்டி



எஸ்.வி. சேகர்–ஸ்ரேயா சித்ரா
படம்: அரசாட்சி

## இன்று முதல்

'இன்று முதல்' என்ற வித்தியாசமான காதல் கதை ஒன்று படமாக்கப்பட்டு வருகிறது. எம்.ஏ.முருகேஷ் இயக்கும் இத் திரைப் படத்தில் குஜராத் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து காதல் துளிர்விடும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. க்ளைமாக்ஸ் காட்சியைக் கப்பலில் படமாக்கத் திட்டமிட்டுள்ளார்கள். (தமிழ்த் திரைப்படம் ரயில் நிலையத்தில்தான் முடிய வேண்டும் என்ற சாபத்திலிருந்து மீட்சி) டெய்ஸி, ரவிகுமார், நந்திதா ரமேஷ் கண்ணா, சரத்பாபு உட்பட பலர் இதில் நடிக்கிறார்கள். 'இன்று முதல்' இரசிகர்களுக்கு இன்னொரு பூகம்ப சோதனையாக இல்லாமலிருந்தால் சரி!

## ...யின் 'முத்ரா'வும் இன்னொரு ...ா'வாகுமா...?

...யின் அடுத்த படத்தின் ...ர் கே.எஸ்.ரவிக்குமார் ...டு சுருங்கியிருந்த தக ...ாஞ்சம் கொஞ்சமாக ...டத் தொடங்கியுள்ளது. ... படத்தின் தலைப்பு ...ாம்!

...ா' என்பது முத்திரை ... சுருக்கம். 'பாபா' படத் ... முத்திரையை ரஜினி பிர...


சிம்பு-ரக்ஷிதா
படம்: தம்

...தினார் அல்லவா? இந்தப் படத்தின் டைட்டிலிலேயே 'முத்ரா' என்று ஒரு முத்திரையை ஒளித்து ...க்கிறார்.

...யின் ஆலோசனையின் பேரில் 'முத்ரா' எப்படி எழுதப்பட வேண்டும் என்ற விவாதம் நடந்து ... 'முத்ரா' என்று எழுதி இரண்டு புள்ளிகள் மற்றும் ஒரு ஆச்சரியக்குறி வர வேண்டும் என்பது ... விருப்பம். அந்த டைட்டிலுக்கான 'லோகோ' தயாரிப்பு வேலை முடிந்ததும் பட அறிவிப்பு ...லாம்.

...யும் மே மாதத்தில் பட அறிவிப்பும் படத் துவக்க விழாவும் நடக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ...ா' படத்தின் கதை அவரது வழக்கமான வெற்றிப் படங்களின் ஃபார்முலாக்களை வைத்து ...கப்பட்டிருக்கிறது. ஆக்ஷனுடன் நகைச்சுவை, காதல் இழையோடும் இந்தப் படத்திலும் ரஜினியின் ...டச்'-சும் இருக்குமாம். ஆனால் மருந்து என்ற அளவுக்கு மட்டும் ஆன்மீகமும், விருந்தளிக்க ...போக்கு அம்சங்களும் படத்தில் நிறைந்திருக்கும்.

...ா'வில் ரஜினிக்கு இரட்டை வேடம். மூன்று கதாநாயகிகள் கொண்ட இந்தப் படத்தில் இதுவரை ... ஒரே நடிகை ரம்யா கிருஷ்ணா. வழக்கம் போல் இந்த முறையும் ஐஸ்வர்யா ராயின் பெயரும் அடிபடுகிறது.

கமலின் 'சண்டியர்' கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ரஜினிக்கு அவரது இரசிகர்களின் பதற்றத்தைத் தணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 'முத்ரா' அறிவிப்பைத் தொடர்ந்து அவரது இரசிகர்களுக்குத் தீபாவளி விருந்து தயாராகப் போகிறது. ஆமாம், 'சண்டியர்' தீபாவளிக்கு வெளியாவதால் ரஜினியின் 'முத்ரா'வையும் தீபாவளிக்கு வெளியிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.


அசோக்-பிரியங்கா த்ரிவேதி
படம்: ஜே

## ...மினி சினி

...லனாக நடித்த யுகேந்திரன், ஹீரோவாக நடிப்... ...ல்ல வாய்ப்புகளை எதிர்நோக்கிக் காத்திருக்கி... ...ா', 'கையோடு கை' ஆகிய படங்களில் கதாநாயக... ...த்து வரும் அவர், சமீபத்தில் ஒரு ஆண் குழந்... ...ப்பாவாகி இருக்கிறார். பையன் பிறந்த ராசிதான் ...ஹீரோ அந்தஸ்துக்கு உயர்த்தி இருக்கிறதாம்!

...எம் கார்டன் டப்பிங் தியேட்டரில் 'பாறை' படத்... ...ர்த்த சரத்குமார், தனது கேரக்டரைப் பார்த்து ...ார். கே.எஸ்.ரவிக்குமார் படைத்துள்ள தனது ... மிகவும் அற்புதமாக அமைந்ததைக் கண்டு ... வசப்பட்ட அவர், ஒவ்வொரு காட்சிக்கும் டப்பிங் ...து சிலிர்த்துவிட்டார். சென்டிமெண்ட் நிறைந்த ...ரவர் கேரக்டர், திரையுலக வாழ்வில் ஒரு மைல் ...று குறிப்பிட்டார் சரத்குமார்!

...வரை ஷாம் நடிப்பில் '12 பி', 'ஏய் நீ ரொம்ப ...இருக்கே...', 'பாலா' ஆகிய படங்கள் வெளியாகி ...து. அந்தப் படங்களில் நடித்தபோது யாருக்கும் ... கொடுக்காத அவரது தயார், ஏ.வி.எம் புரொ... தயாரிப்பில் உருவாகும் 'அன்பே அன்பே' படத் ...ந்தம் ஆகும்போது விருந்து கொடுத்து அசத்தி ...ம். தன்னோட மகன் முதன்முறையா ஏ.வி.எம் ... நடிக்கறான்னு கேள்விப்பட்ட அடுத்த விநாடி, ...க்கும் விருந்து கொடுத்து அசத்திட்டாங்க! இப்ப ...அன்பே' படம் முடிஞ்சு, படம் ரொம்ப நல்லா ...ருன்னு கேள்விப்பட்டதுமே, அம்மாவுக்கு தட புடலா ... கொடுத்து அசத்திட்டேன்! என்றார் ஷாம்.

...ய் நடிக்கும் படமொன்றையும், விக்ரம் நடிக்கும் ...ன்றையும் இயக்க கோடிக்கணக்கான ரூபாய் ...கேட்டு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் ...ழ் தரணி, தனது அடுத்த படத்துக்கு 'கில்லி' ...வரிட்டுள்ளார். இந்த டைட்டிலை விஜய் படத்துக்கு ...? விக்ரம் படத்துக்கு வைப்பதா என்று பூவா, ... போட்டுப் பார்க்கப் போகிறாராம் அவர்.


மிதுன்-நந்திதா

## காதல் இனிது...

'இனிது இனிது காதல் இனிது' மே முதலாம் திகதி வெளிவருகிறது. ஜெய் ஆகாஷ். இவர் லண்டன் வாழ் இலங்கைத் தமிழர். இந்தப் படத்தின் கதாநாயகன் இவர்தான். இவருக்கு ஜோடியாக நேகா என்ற பெண் அறிமுகமாகிறார்.

ஒரே ஒரு பாட்டுக்கு சிம்ரன் வருகிறார். இன்னொரு ஜோடி அம்சவர்த்தன்-மோனிகா. தெலுங்கில் 'ஆனந்தம்' என்ற பெயரில் வெளிவந்து அங்கு சக்கைபோடு போட்ட படம்.

அதை அப்படியே தமிழில் எடுக்காமல் தமிழ் இரசிகர்களுக்குப் பிடித்தாற் போல காட்சிகள் அமைத்துள்ளாராம் இயக்குநர்.

படத்தில் ஆபாசம் என்ற பேச்சுக்கே இடமில்லை, கிட்டத்தட்ட 56 நாட்களில் இந்தப் படத்தை எடுத்து முடித்துள்ளார்கள். முதல் முறையாக வடிவேலு 4 விதமான கெட்டப்பில் வருகின்றாராம். படத்தின் கதை பரம ரகசியம் என்கிறார்கள்.


...க்ரம்-பிரியங்கா திரிவேதி
படம்: காதல் சடுகுடு

## காதல் வலையில் ஷார்மி

'ஆஹா... எத்தனை அழகு' பட இயக்குநர் கண்மணியை 'ரகசியமாக' காதலிக்கும் ஷார்மி, படப்பிடிப்பு இடைவேளையில் இயக்குநரின் காதில் இரகசியமாகப் பேசி சிரிக்கிறார். பதிலுக்கு கண்மணி அடிக்கடி ஷார்மியின் கைகளோடு தன் கைகளைக் கோர்த்த படியும், கன்னங்களைத் தடவிக் கொடுத்தபடியும் நேசம் காட்டி வருகிறார். இப்படி இவர்கள் இருவரும் கூச்சமின்றி நடந்துகொள்வதை படப்பிடிப்புக் குழுவினர் வேடிக்கை பார்த்து இரசிக்கின்றனர். ஷார்மியும், கண்மணியும் மற்றவர்களைப் பற்றி கவலைப்படாமல் தங்கள் காதலைத் தொடர்ந்து வருகின்றனர். இன்னும் பதினைந்து வருடங்களுக்கு சினிமாவில் நடிப்பேன் என்று பேட்டியளிக்கும் ஷார்மி, போகிற போக்கைப் பார்த்தால் விரைவிலேயே நடிப்புக்கு முழுக்குப்போட்டு குழந்தை வளர்க்க வேண்டி ஏற்படும் என்று கூறுகிறார்கள்.

காதல்
புத்தகங்களை
முழுமையாக முடி
முகாமுக்குள் முகாந்திரமிட
சென்ற செந்தளிரே...!
***
உறவுகளிழப்பில்
மறுதலித்து மனசுக்கு
பூட்டுடன் புயல் போல
புறப்பட்டாய்...
புழுதி மண்ணையும்,
புழுங்கும் தென்றலையும்,
அடியோடு அறைந்து.
***
நீயும்
நம் சாம்ராஜ்யத்தை
உள்ளி கிழங்கு
தோல் கழர்வாய் தெளிந்து
தெளிவானாய்...
நான் வெங்காய
தோல் கொடுமைகளால்
அவஸ்தையாய் அழுகிறேன்...?
***
நீ
இப்போது அதிகம்
நேசிப்பது நம்
தேசத்தை விட அந்த
ஆயுத அரக்கர்களைத்தான் ...!
***
இலட்சிய விடுதலைக்காய்..
இரும்புக் கோல்களிடம்
இதயத்தினையல்லவா..?
அடகு வைத்திருக்கின்றாய்......?
***
உனக்கும்
என் மேல் இரக்கம்
வெளிப்படையாகயில்லா
விட்டாலும்-தயிரின்
பற்றீரியாக்கள் போல்
பதுக்கி வைத்திருக்கிறாயாமே..!
***
உன்னுடன்
பழகியமைக்காக
புலனாய்வு
காவல் படை-என்னை
காலடி சப்பாத்துகளால்
சல்லடையாக்கின...
***
கற்பின்
களங்கத்துக்காய்..
கானகம் ஏகினாள் சீதை
நீயும்
உரிமையின் விடிவுக்காய்
உள்ளத்தை விட்டு
போர்க்களம் இறங்கினாய்..?
***
வசந்தம் தளைத்திருக்கும்
வட-கிழக்கில்
உன்னை மட்டும்
காணவில்லையே...?
***
ஓ...
விருட்சங்களாய்
விதைத்த மரணமில்லா
விதையில் நீயும்
விலாசமிடுகின்றாயா..?

கோ. நாதன்-
பொத்துவில்.

## யார் பொறுப்பு

ஆக்கலும் அழித்தலும்
அவனென்பர்
பாதியில் ஆயுள் முடிந்ததென்றால்
விதியென்பர்
ஆறிலும் நூறிலுஞ் சாவென்பர்
அறுபது வந்ததுமே
மூச்சுக்கு ஓய்வென்பர்!
***
வயிற்றில் இறப்பதுவும்
வயதொன்று காணுமுன்னே
மடிவதுவும்
நோயால் பிணியால் சாவதுவும்
கேடு வறுமை நிலை
வந்து வீழ்வதுவும்
வையகத்தில் செய்த
வினையென்பர்!
***
வெள்ளத்தில் ஒருபாதி
வீசும் புயலினில் ஒருபாதி
வானும், மண்ணும் இருபாதி
விழுங்கி அழிக்கின்றதை
காலத்தின் கோலமென்பர்!
***
ஆயுதம் நடத்தும் ஆட்சியினில்
அதிகாரத்தின் விளையாட்டில்
ஆயிரம் உயிர்கள்
புதைகின்றதே இதற்கு யார்
பொறுப்பு?

கீர்த்தியன், லபுகெலை.

## வாழும் வரை இறப்பில்லை

வாயில்லா சில்லறைகள்
சத்தமிட்டாலும் வாய் திறந்து
பேசாத ஆமை போல்
ஏனடி உன்
ஐம்புலன்களையும்
அடைத்துக் கொண்டாய்
உன்னிடம் விடைபெற்றபோது.
***
உன்னை விட்டு
அந்நிய மானதும்
பயணத்தின் இறுதிவரை
கூடு திறந்து விடாத
நத்தையைப் போலவே
மூழ்கிக் கொண்டதடி
சோகங்களும் உன்
ஞாபகங்களும்
***
ஒவ்வொரு நிகழ்வின்
முடிவின் போதும்
உனக்கே நான்
என்னும் உத்தரவாதம்
பூமிக் கிண்ணத்தில்
சொட்டிக் கொண்டேயிருக்கும்
கண்ணீர்த் துளிகளின்
ஓசைகள்
***
சுற்றிச் சுற்றி
உனை மொய்க்கும்
சுடிதார் சுடர்களை
குடை பிடிக்கும்
அந்த மேகம்
இன்று எங்குள்ளதோ
என்ன ஆனதோ
கடல் கடந்து
தேடுகின்றேன் விண்வெளியில்
***
இன்று ஐந்தாண்டுகள்
முடிந்தோடின உன்
ஞாபகங்களே சுவாசம்
எனக்குள் உனை
காணும்வரை இறப்பில்லை
இறந்தால் நீ விட்ட
மூச்சை என் கடைசி
மூச்சாய் உள் வாங்கி
உயிர் துறப்பேன்.

பெ. ஜனார்த்தனன்-
பொத்துவில்-03.

## தேன் கிண்ணம்

## ஞாபகங்களின் பூவாசம்

பூ முடித்த கூந்தலில்
நட்சத்திரங்களின்
எச்சில் துளி
நீ பாடலா...
பனிக்கவிதையா...?
***
மனசின் சிணுங்கலுக்குள்
விசிலடித்த
ஸ்பரிசங்கள்
வினா எழுப்புகிறதே...
***
க்ளோனிங் கனவுகளிடையே
புழுதிப் புயலுக்கு
முகம் கொடுத்து
முன்னோக்கிச் செல்கிறது
ஜீவிதம்
உன் வைரஸ் பார்வைக்கு
வசப்படாமல்...
***
நிசப்தம் வேர் பிடித்து
இரவு பறிபோன பொழுதுகளில்
பூக்கள் நிறைந்த பூமியைப்
பரிசளித்திருக்கிறாய் நீ
என் சிகரட் முழுக்க
ஞாபகங்களின் பூவாசம்...
***
வாசலில் வந்து
வண்ணத்துப் பூச்சி
தந்தியடிக்கும் பொழுதும்
எனக்குள் ஒருத்தி
ஒக்ஸிஜனுக்கு
இசையமைக்கும் பொழுதும்
அடிக்கடி சொல்வாள் தோழி
இது காதலின் அறிகுறியென்று...
***
வனிதையென்பதும்
வாசிகசாலைதான்
பல்லழகில்
பதுக்கி வைத்திருக்கிறாய்
வேதியல் நூல்களை
அதரங்களில் அடுக்கி
வைத்திருக்கிறாய்
இலக்கிய அகராதியை..
***
நீ எனக்குக்
கிடைப்பாய் என்ற நம்பிக்கை
இருக்கிறது
அதனால்தான்
மரணத்தை
ஒத்திவைத்திருக்கிறேன்..

நியாஸ் முஸாதிக்-
கிண்ணியா-05.

## அழிந்து போகா அவஸ்தை

உன்
இதயத்தில் ஓரிடம்
தேடி அலைந்த
எனக்கு-அப்பா
வீட்டில்
இடமில்லை என்றார்
***
நீ
புகுந்து புகுந்து
விளையாடினாய்
என்-இதயமாகிய
மைதானத்தில்
என்னால் பார்வையாளனாய்
மட்டுமே
இருக்க முடிந்தது
உன்-காதலனோடு
நீ
வந்தபோது
***
இறுதியாய்
என்னால்
உன்னை
சொந்தமாக்க
முடியாமல் போன போதும்
எப்படியோ
சொந்தக்காரனாகிப்
போனேன்
உனக்காய் எழுதிய
கவிதைகளுக்காக.

முஹமட் மைசான்-
மீராவோடை-04.

## எங்கிருக்கிறாய்

நிஜந்தான்-உன்
கன்னக் குழிகளிலும்
ஒரு சோடிக் கண்களிலும்
நான் மயங்கியது
நிஜந்தான்!
***
உன் முதல் பார்வையின்
சாந்தம்
அதோடு வந்த குறுநகை
என்னைவிட்டு அகலுமென்றா
நினைக்கிறாய்?
உன் நினைவுகளில் தினம்
ஊஞ்சலாடுகிறேனே
புரிகிறதா? உனக்கு?
***
என் நினைவுகள்
தூரப் போகும்
துயரமான இரவுகளில்
உன் முகம் காணத் துடிக்கும்
விழிகள்-முகாரியால்
அழுகின்றன!
***
வெயிலில் நடந்தாய்
குடையாய்த் தொடர்ந்தேன்
இன்று வசந்தங்கள்
வந்துவிட்டன
நீ எங்கிருக்கிறாய்!

ஒலுவில்-அபுஸர்பான்.


## பேனா நண்பர்கள்



பெயர்:
ஏ.எம். றியாஸ்
வயது: 20
முகவரி: இல. 141,
அல் அப்றார் பள்ளி
வீதி, நிந்தவூர்-02
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
ந. ராஜு
வயது: 18
முகவரி:
இல. 83, செட்டியார்
தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: மு.விஜயராஜ்
வயது: 23
முகவரி:
P.O.BOX- 6354,
DOHA-QATAR.
பொழுது போக்கு:
வழமையானவை.

## தேடிப் பெற்றவை

**இனிய தமிழ் மொழியில் பேச்சு வழக்கினிடையே சொல் நயத்தோடும் பொருள் நயத்தோடும் சொற்சுவையை ஏந்திவரும் பழமொழிகளும் பாங்கான கருத்துக்களும் இப்பகுதியில் தொடர்ந்து வரும்...**

## நாட்டுப் புறப் பழமொழிகள்

எதிலும் அவசரம் கூடாது. மந்திரத்தால் மாங்காய் வராது. நம்பிக்கையும்-உழைப்பும் வெற்றி கனியும் காலம் வரையில் குளக்கரையில் கொக்கு காத்திருப்பது போல் காத்திருக்க வேண்டும். இக் கருத்தை விளக்க ஒரு வாசகம் இதோ:

**"அரச மரத்தைச் சுற்றி வருவதற்குள்
அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாளாம்"**

குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் தினமும் அரச மரத்தைச் சுற்றி வந்தால் குழந்தைப்பேறு உண்டாகும் என்பது ஒரு நம்பிக்கை. அரசும் வேம்பும் சேர்த்து வளர்த்து வழிபடுவது வழக்கம். வேம்பு ஒரு மூலிகை. அது போல அரச மரத்துக் காற்றில் கூட ஏதாவது ஒரு அபூர்வ சக்தியிருக்கலாம். அது இருக்கட்டும். இந்த வாசகம் கூறுவது அவசரம் பற்றியே. மரத்தைச் சுற்றிக் கொண்டே வரும்போது அடிவயிறு பெருத்துவிடுமா என்ன? கரு உருவாக வேண்டும். மாதங்கள் சில போக வேண்டும். இல்லையா?

அவசரம் பற்றி வேறு விதமான விமர்சனம் ஒன்று:

**"அரசனை நம்பி
புருசனைக் கைவிட்டாளாம்"**

இதுவும்கூட அவசரத்தில் முடிவெடுக்கும் செயலைச் சாடுவதுதான். 'புருசன்' என்பது கணவனைக் குறிக்கும் வழக்குச் சொல். 'கணவன்' என்பது அழகான, பொருள் நிறைந்த சொல். கண்+அவன் என்பதே கணவன். ஒரு பெண்ணுக்குக் கண் போன்றவன் கணவன். காலமெல்லாம் வழிகாட்டிக் காப்பவன் அவனே. அவனைக் கைவிட்டு அரசனை நம்பினால்...?

அவசரப்பட்டு நிலையான பாதுகாப்பை இழக்கும் அவசர முடிவை இடித்துரைப்பதே இது. இதையே,

**"அரசனுக்கு ஆசைப்பட்டு
புருசனைக் கைவிட்டாளாம்"**

என்றும் சொல்வதுண்டு.

திடீர்ப் பணக்காரன், காணாததைக் கண்டவனாகி, ஆடம்பர வாழ்வு வாழ்வதை நாம் அன்றாட வாழ்வில் காணலாம். அதிலும் அற்பனாய் அவன் இருந்துவிட்டால்..? கேட்கவே வேண்டாம்! அவன் செயற்பாடுகள் வித்தியாசமாய், தான்தோன்றித்தனமாய் இருக்கக்கூடும். இது பற்றிய ஒரு சூடான விமர்சனம் இதோ:

**"அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்"**

செல்வர்க்குப் பணிவு வேண்டும் என்பார்கள். புதிய பணக்காரனின் தோற்றம்கூட நகைப்பிற்கிடமாய் அமையலாம். பத்து விரலில் மோதிரம் போடுவான். ஏன்... பல்லைக் கூடத் தங்கமாக்கிப் பார்ப்பவர் காணச் சிரிப்பான். அவனை எள்ளி நகையாடும் சுடு சொல்லே இது.

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

*இன்பமும் துன்பம் வெளியே இல்லை; அவரவர் மனதுக்குள்ளேதான் இருக்கிறது என்பார்கள். இன்பதுன்பம் மட்டுமில்லை, எரிமலைகள், காட்டாறுகள், மிருகங்கள், கூர்வாள்கள், குண்டுகள், விஷக் கிருமிகள்... என்று பலப்பலதும் மனதுக்குள்ளிருந்து அவ்வப்போது எட்டிப் பார்ப்பதை அறிந்து திகைத்திருக்கிறோம். மனம் ஒரு குரங்கு என்பது மட்டுமில்லாமல் இவ்வாறான விசித்திரங்களின் கிடங்கும்தான். இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக மனதுக்குள்ளிருப்பதை வெளிப்படுத்தும் மூன்று கவிதைகள்.*

### சிலந்தி-

எனக்குள் இருக்குமொரு சிலந்தி
எப்போதும் வலை பின்னியவாறே
மனதின் இடுக்கில் இழைகள் விரித்துக்
காத்துக் கிடக்கும்.
நினையாத் தருணங்களில் எதிர்முகத்தில்
கொடுக்கைச் சுழற்றி
சொடுக்கும் வார்த்தை நஞ்சை.
சின்னஞ்சிறு கனவுகளையோ
எண்ணற்ற விரல்களால்
நசுக்கி விழுங்கும்.
வெறுப்பென்றும், கோபமென்றும்
மறைகுணங்கள் மிகைத்து
குறுக்கும் நெடுக்கும் திரியும் ஊறி.
இரவின் அமைதிகளில்/விழிவழி
நகர்ந்து
உலகைப் பார்க்கும்.
கண்ணாடிக் காகிதத்துள்/ பொத்திய
மலர்போன்று
அழகு காட்டும் சில சமயம்.
விலக்கவே விருப்பமெனினும்/பழகிப்
பழகியே
பரிச்சயமாயிற்று தினமும்
என்னுள் இருக்கும்/இந்தச் சிலந்தியை
என்ன செய்யக்கூடும் என்னால்?

உமாமகேஸ்வரி

### எனது வாள்

கூர்வாளொன்று/ எப்போதும்
என்னிடம்.
நண்பர்களைக் கண்டால்
முதுகுக்குப் பின் ஒடுங்கிவிடும்.
அபிமானிகளைக் கண்டால்
உறையினுள்ளிருந்து / கம்பீரமாய் எட்டிப் பார்த்து
அவர் முகம் நோட்டமிடும்.
வேண்டாதவரென்றால்
நாக்கில் வந்து ஒட்டிக் கொள்ளும்.
அழகிய பெண்களை எதிர்கொண்டால்
முலைகளை அறுத்து ரசித்து மகிழும்.
குழந்தைகளிடம் /பிரியம் காட்டுவதாய் நினைத்து
குரல்வளையைக் கீறிவிடும்.
ரோஜாக்களைக் கொய்து
கைப்பிடியில் சூடி மகிழும்.
வாளுடன் எதிரி வந்தால்
உறையினுள் பதுங்கிக் கொள்ளும்.
வாளின்றி வரக் கண்டாலோ
உறைவிட்டுக் கிளம்பிப் பயமுறுத்தும்
விட்டெறியும் மார்க்கமறியேன்.
என்னிடம் எப்போதும்/கூர்வாளொன்று.

ராஜமார்த்தாண்டன்

### தயவுசெய்து-

தயவு செய்து
உங்கள் நிபந்தனைகளை முன்விதியுங்கள்.
கடைசி நிமிஷத்தில்/கட்டாயப்படுத்தாதீர்கள்.
மண்டியிடவோ மறுதலிக்கவோ
யோசிக்க வேண்டும் நான்.
என் / மனசுள் / குமுறிக்
கொண்டிருக்கின்றன எரிமலைகள்.
குறுக்கும் நெடுக்கும்/ஓடுகின்றன
காட்டாறுகள்.
உங்கள் நிபந்தனைகளை முன்விதியுங்கள்
தயவு செய்து.

விக்ரமாதித்யன்

# பரிசு கொடுக்கப்போறீங்களா...

**பி**றந்த நாள், திருமண நாள் மாதிரி ஏதேனும் விசேஷத்துக்காகப் பரிசு கொடுக்க நினைக்கிறீர்களா? என்ன கொடுக்கலாம்?

பரிசளிப்பது ஒரு கலை. சரியான சந்தர்ப்பத்தில் சரியான பரிசைக் கொடுப்பது பாராட்டைப் பெற்றுத் தரும்.



கைக்குழந்தையைப் பார்க்கப் போகும்போது சட்டை, நாப்கின், பால் போத்த தொப்பி ஸ்வெட்டர் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

பள்ளிக்கூடம் செல்கிற குழந்தைகளுக்குப் புத்தகப் பை, சித்திரப் புத்தகங்கள், பென்சில் பாக்ஸ், கொம்பாஸ் டிஃபன் பாக்ஸ் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

பெண் குழந்தைகளுக்கு வளையல்கள், தோடு, ஹேர்பேண்ட், கிளிப் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

புத்தகங்கள் எல்லா வயதினருக்கும் கொடுக்கக்கூடிய அருமையான பரிசு. அந்தந்த வயதுக்கேற்ப, அவரவர் விருப்பத்தக்கேற்ற புத்தகங்களைப் பரிசாகக் கொடுக்கலாம்.

புதிய வீட்டுக்குப் போகிறவர்களுக்கு படுக்கை விரிப்பு, காலிங் பெல், கால்துடைப்பம் மேஜை விரிப்பு போன்றவற்றைக் கொடுத்தால் வித்தியாசமாக இருக்கும்.

உடைகள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றை எல்லாருக்கும் கொடுக்கக் கூடாது. உங்களுக்கு மிக நெருங்கியவர்களுக்கு மட்டுமே கொடுக்கலாம்.

டீன் ஏஜ் பெண்களுக்கு துப் பட்டா, சுடிதார் துணி போன்றவற்றைக் கொடுக்கலாம்.

டீன் ஏஜ் ஆண்களுக்கு டி ஷர்ட், ஷேவிங் செட் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

பெண்களுக்கு ஜாக்கெட் துணி வைத்துக் கொடுக்கும்போது உங்களிடம் உள்ள தேவையற்றதைத் தள்ளிவிடாதீர்கள். அவர்களுக்குத் தேவையான அளவில், அரக்கு, கடும் பச்சை, மஞ்சள் போன்ற நிறங்களில் கொடுத்தால் கிட்டத் தட்ட எல்லாப் புடவைகளுக்கும் மேட்ச்சாகும்.

திருமணங்களில் தம்பதியருக்கு அவர்களிடமே கேட்டுத் தெரிந்துகொண்டு, என்ன பொருள் தேவையோ அதைக் கொடுக்கலாம்.

தெரிந்தவர் வீட்டுக்குப் போகிற போது பூ, பழம், பிஸ்கட் தான் வாங்கிச் செல்ல வேண்டும் என்றில்லை. ஒரு மாறுதலுக்கு, ஜாம், ஹார்லிக்ஸ், ஜூஸ் போன்றவற்றையும் கொடுக்கலாம். உபயோகமாக இருக்கும்.

வயதானவர்களுக்கு வார அல்லது மாதப் பத்திரிகைகளுக்கு ஒரு ஆண்டுக்குச் சந்தா கட்டி பத்திரிகை அனுப்பச் செய்யலாம்.

தோட்டக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு செடிகள், பூத் தொட்டிகள், விதைகள் போன்றவற்றைப் பரிசாகக் கொடுக்கலாம்.

பணமாகத் தருவதைவிட யாருக்கும் கிஃப்ட் செக்காகக் கொடுப்பது நல்லது.


## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி



நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்**

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10- 05-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம். சி. பஜிரியா பானு,
36/14, தக்கியா வீதி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

## அச்சம் தரும் மச்சங்கள்

**நா**ம் அழகு மச்சம், அதிர்ஷ்ட மச்சம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற மச்சங்கள்- ஆபத்தான மச்சங்களாக இருக்கலாம். பிறவியிலேயே இருக்கின்ற மச்சமானது நாளடைவில் நிறம் மாறி, உருவத்தில் பெருத்து வந்தால் அதனைக் கவனித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய மச்சங்களில் புற்றுநோய் வர வாய்ப்பிருக்கிறது. மச்சங்களில் வரும்புற்று நோய்க்கு மெலனோமா என்று பெயர்.

உடம்பிலுள்ள எல்லா மச்சங்களும் மேலனோமாவாக மாறிவிடுமோ என்று அச்சம்கொள்ளத் தேவையில்லை. மச்சத்தில் நாளடைவில் மாற்றம் உண்டானால்தான் நாம் அதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். இந்த மச்சப் புற்று ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு ஒட்டிக்கொள்ளும் ரகமல்ல.

எந்தெந்த மச்சங்களைக் கண்டு அச்சம்கொள்ள வேண்டும்?

மச்சத்தில் புதிதாக நெறி கட்டிக் கொண்டால்...

மச்சத்தின் ஓரங்களில் மேடு பள்ளம் அல்லது மாற்றம் உண்டானால்...

பெரிய மச்சங்களில் முடி அதிகமாக இருந்தால்...

திடீர் என்று மச்சத்தில் உருமாற்றம், நிறமாற்றம் இருந்தால்...

மச்சத்தில் அரிப்பு,

வலி இருந்தால்...

வீட்டில் வேறு யாருக்காவது அல்லது பரம்பரையில் யாரக்காவது மெலனோமா இருந்தால் மற்றவர்கள் தங்கள் மச்சத்தினைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக மச்சம் என்பது என்ன தெரியுமா? நமது உடம்பிற்கு நிறத்தைத் (பிக்மெண்ட்) தரக்கூடிய ஒரு வகை செல்களுக்கு மெலனோசைட்ஸ் என்று பெயர்.

இந்த செல்கள் உடல் தோலில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கும். ஒருவர் கறுப்பா, சிவப்பா என்று தீர்மானிப்பது இந்த மெலனோசைட்ஸ்கள்தான். இந்த மெலனோசைட்ஸ்கள் ஒரே இடத்தில் அளவிற்கு அதிகமாக திரண்டு இருப்பதைத்தான் மச்சம் என்றழைக்கிறோம்.

சூரிய வெளிச்சத்தில் இருக்கிற அல்ட்ரா வயலெட் கதிர்கள் அதிகம் பாய்ந்த மச்சங்கள்கூட இந்த மெலனோமாவால் பாதிக்கலாம். மச்சங்களை ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அவற்றின் சைஸ்,

நிறம் போன்றவற்றை நமக்கு நாமே பரிசோதித்துக் கொண்டால் முன் எச்சரிக்கையாக அமையும்.

இன்றைய நாட்களில் மெலனோமாவினை ஆரம்ப நிலையிலேயே குணப்படுத்துகின்ற சிகிச்சைகள் வந்து விட்டன. இவற்றை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் வீட்டு வைத்தியமாக மச்சத்தின் மீது சுண்ணாம்பினைத் தடவுதல், கத்தியை வைத்துச் சுரண்டுதல், எலுமிச்சம்பழச் சாற்றைத் தடவுதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். சில கிராமங்களில் மச்சத்தின் மீது மிளகாயை அரைத்துச் தடவும் பழக்கம் உள்ளது. இந்தப் பழக்கம் எல்லாம் மச்சத்தை மேலும் ஆபத்து நிறைந்ததாக ஆக்கிவிடும்.

## தோற்றத்தைப் பொலிவு படுத்த...

**ப**ளிச்சென உடையணியுங்கள். சாதரண காட்டன் உடையில் கூடகம்பீரமாகக் காட்சியளிப்பதும், பட்டு உடுத்தியும் பார்க்கச் சகிக்காமல் போவதும் அவரவர் கைகளில்தான் உள்ளது. இருப்பதை வைத்துக் கொண்டு அழகாகக் காட்சியளியுங்கள்.



யாரையும் அவர்கள் கண்களைப் பார்த்துப் பேசுங்கள். எதிராளிக்கு உங்கள் மேல் நல்ல அபிப்பிராயம் வரும்.

இன்டர்வியூ மாதிரியான முக்கிய இடங்களில், முக்கிய நபர்கள் சந்திப்பின்போது, இருக்கையில் நுனியில் உட்காராதீர்கள். எப்போதும் போல சாதாரணமாக உட்காருங்கள். அதற்காகக் கால் மேல் கால் போட்டுக் கொண்டும் உட்கார வேண்டாம்.

தன்னம்பிக்கை, அன்பான அணுகுமுறை, சிரித்த முகம்இது மூன்றும் உங்களுக்கு எதையும் சாதித்துக் கொடுக்கும். எந்த வேலையைச் செய்தாலும், அதை முழுத்திருப்தியோடு செய்யுங்கள்.

ஆங்கிலம் பேச ஆசைப்பட்டால் மட்டும் போதாது. தப்போ, தவறோ நிறையப் பேசிப் பழக வேண்டும்.

யாரைச் சந்தித்தாலும் அவர்களது பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அடுத்த முறை சந்திக்கிறபோது பெயரைச் சொல்லிப் பேசுங்கள். அன்னியோன்னியம் அதிகரிக்கும்.

## சமையல் அறை

**க**சப்புத் தன்மை காரணமாகப் பாகற்காயை அதிகம் யாரும் உணவில் சேர்த்துக்கொள்வதில்லை. ஆனால் மருத்துவக் குணங்கள் நிறைந்தது இது. குறிப்பாக சர்க்கரை நோய் உள்ளவர்கள் பாகற்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கசப்புத் தன்மை அதிகம் தெரியாதபடி பாகற்காயைச் சமைத்தால், சிறிய குழந்தைகள் முதல் எல்லாரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.



பாகற்காயில் பெரியது, மிதி பாகற்காய் எனப்படும் சிறியது என இரண்டு வகைகள் உண்டு. மிதி பாகற்காயைச் சுத்தம் செய்து சமைப்பது கொஞ்சம் சிரமம். ஆனாலும் அதில்தான் ருசி அதிகம்.

### பாகற்காய் இனிப்பு

__தேவையான பொருட்கள்:__

பாகற்காய்- அரை கிலோ, வெங்காயம்- 2, தக்காளி-4, புளி-சிறிய உருண்டை, மிளகாய்த் தூள்- 3 தேக்கரண்டி, கடுகு- 1 தேக்கரண்டி, உளுந்து-1 தேக்கரண்டி, சோம்பு-கால் தேக்கரண்டி, எண்ணெய்-3 தேக்கரண்டி, வெல்லத் தூள்-1 தேக்கரண்டி, உப்பு-தேவைக்கேற்ப.

__பொடிக்க:__

பொட்டுக்கடலை-1 தேக்கரண்டி, சீரகம்-அரை தேக்கரண்டி, தேங்காய் பூ-1 தேக்கரண்டி.

__செய்முறை:__

பாகற்காயையும், வெங்காயத்தையும், தக்காளியையும் பொடியாக நறுக்கவும். புளியை அரை டம்ளர் தண்ணீரில் கெட்டியாகக் கரைத்து வடி கட்டவும். எண்ணெயைக் காய வைத்துக் கடுகு, உளுந்து தாளிக்கவும். பின்னர் பாகற்காயைச் சேர்த்து பத்து நிமிடங்கள் வதக்கவும். பாகற்காய் சற்று வதங்கியதும், வெங்காயம் சேர்த்து வதக்கவும். இது நன்கு வதங்கியதும், தக்காளி, உப்பு, மிளகாய்த் தூள் சேர்த்து மேலும் நன்கு வதக்கி புளிக் கரைசலை ஊற்றவும். புளி சற்றுக் கொதித்துக் கெட்டியானதும், சர்க்கரைத் தூள், வறுத்த பொட்டுக்கடலைத் தூள் சேர்த்துக் கிளறி இறக்கவும்.

### பாகற்காய் சிப்ஸ்

__தேவையான பொருட்கள்:__

பாகற்காய்-கால் கிலோ, கடலை மாவு-கால் கப், அரிசி மாவு- 1 மேசைக்கரண்டி, பெருங்காய்த் தூள்-கால் தேக்கரண்டி, மிளகாய்த் தூள்-ஒரு தேக்கரண்டி, உப்பு-அரை தேக்கரண்டி, எண்ணெய்-தேவையானது.

__செய்முறை:__

பாகற்காயை மெல்லிய வில்லைகளாக நறுக்கி விதைகளை நீக்கவும். கடலை மா, அரிசி மா, மிளகாய்த்தூள், பெருங்காயத் தூள் சேர்த்து ஒரு மேசைக்கரண்டி தண்ணீர் தெளித்துப் பிசிறி வைக்கவும். எண்ணெயை நிதானமான தீயில் காயவைத்துப் பிசிறி வைத்துள்ளதை சிறிது சிறிதாகப் போட்டு நன்கு வேகவிட்டு சலசலப்பு அடங்கியதும் எடுக்கவும். இது சாப்பாட்டுக்குத் தொட்டுக் கொள்ள நல்ல சைட் டிஷ்.

### மிதி பாகற்காய் தேங்காய் பால் கறி

__தேவையான பொருட்கள்:__

மிதி பாகற்காய்- அரை கிலோ, சிறிய வெங்காயம்- 100 கிராம், மிளகாய்த் தூள்-2 தேக்கரண்டி அல்லது பச்சை மிளகாய்- 4, தேங்காய் பால்-1 கப், எண்ணெய்-2 மேசைக்கரண்டி, உப்பு-தேவைக்கேற்ப.

__செய்முறை:__

பாகற்காய், சிறிய வெங்காயத்தைப் பொடியாக நறுக்கவும். எண்ணெயைக் காயவைத்துப் பாகற்காய், வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கவும். பாகற்காய் நன்கு வதங்கியதும் மிளகாய்த் தூள், உப்பு சேர்த்து மேலும் வதக்கி தேங்காய்ப் பால் சேர்த்து நன்கு சுருண்டு வரும் வரை கிளறி இறக்கவும்.

# நெஞ்சினில் என்ன காயமோ...?

## உள மருத்துவம்

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம்; உளப் பாதிப்புக்கள்; உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது.

எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு.த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ், எம்.டி, உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன். (பி.ஏ.எம்.ஏ, எம்.பில், உள மருத்துவத்துறை விரிவுரையாளர்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன்வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

ஒரு பல்கலைக்கழக மாணவியின் உள ஆரோக்கியத்தை வளர்ப்பதில் பின்வருவன உதவியளித்தமையை உங்களால் அறிந்திருக்க முடியும்.

1. சுயகௌரவம் விருத்தி செய்யப்பட்டது.

2. குடும்ப உறவுகள் மேம்படுத்தப்பட்டது.

3. தீவிர மன எழுச்சிகளை எதிர்கொள்ளுவது. வாசகர்களாகிய உங்கள் சிலருக்கும் மேற்குறிப்பிட்ட தேவைகள் எழுந்திருக்கலாம் அல்லது உங்களுக்கு இவை தொடர்பான பிரச்சனைகள் இருக்கலாம். இவற்றினை மேலும் ஆழமாக நோக்குதல் பயனுடையது.

முதலில் சுயகௌரவத்தை விருத்தி செய்வது பற்றி அறிந்துகொள்வோம்.

1. சுயகௌரவம் என்றால் என்ன?

சுயகௌரவம் என்பது உங்கள் ஆற்றல்களை, நற்குணாதிசயங்களை மட்டும் குறிப்பதல்ல. மாறாக உங்கள் பலவீனங்களையும், இயலாமைகளையும் அடையாளம் காண்பதுடன், உங்கள் திறமைகளை பயனுள்ள முறையில் உங்கள் முன்னேற்றத்திற்கு பாவிப்பதாகும்.

2. உங்கள் சுயகௌரவத்தின் அளவு பற்றி எவ்வாறு அறிந்துகொள்வது?

உங்களை நீங்களே பின்வரும் வினாக்களை கேட்டுக் கொள்ளுங்கள்.

அ) எனது ஆற்றல்களும், எனக்கு விருப்பமான துறைகளும் யாவை?

ஆ) என்னால் மிகவும் நன்றாக எவற்றைச் செய்ய முடியும்?

இ) என்னால் ஒரு போதும் எவற்றை செய்ய முடியாது?

ஈ) என்னை விரக்த்தி நிலைக்கு இட்டுச் செல்லும் நிகழ்வுகள் யாவை?

இந்த வினாக்களுக்கு விடையளிப்பது உங்களுக்கு சிரமமாயிருக்குமாயின், உங்கள் சுயகௌரவத்தை விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகின்றது. இவற்றுக்காக உங்கள் நேரத்தின் சிறு பகுதியையாவது செலவிட்டு இது தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

3) சுயகௌரவம் பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு உள ஆரோக்கியத்துக்கு உதவுகின்றது?

இதன் மூலம் ஒருவர் தன் திறமைகளையும், பலவீனங்களையும் அறிந்துகொள்ள முடியும். உங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து பிரகாசிப்பதன் மூலம் உங்கள் மனம் நிறைவடையும். வாழ்வுக்கு தேவையான ஆனால் உங்களுக்கு குறைபாடாகத் தெரியும் பலவீனங்களையும், இயலாமைகளையும் விருத்தி செய்வதன் மூலம் உங்கள் முன்னேற்றம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

குடும்ப உறவுகள் என்னும்போது, மேலோட்டமாகப் பார்க்கும்போது, பிரச்சனைகளற்ற ஒன்றாகத் தோன்றினாலும், எங்களில் எவ்வளவு பேருக்கு எங்கள் குடும்ப உறவுகளின் விருத்திநிலை பற்றிய விழிப்புணர்வு உள்ளது?

1. நீங்கள் எவ்வளவு தூரம் குடும்ப உறவுகள் தொடர்பான விழிப்புணர்வைக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை அறிய பின்வரும் வினாக்கள் வழிகாட்டும்

(அ) குடும்பத்தில் உங்கள் பங்கு என்ன?

ஆ) குடும்பத்திலுள்ள மற்றவர்களின் பங்கு பற்றி எவ்வளவுக்கு தெரிந்து வைத்துள்ளீர்கள்?

இ) குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் உங்களிடம் எவற்றை எதிர்பார்க்கின்றனர்?

ஈ) நீங்கள் மற்றைய குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து எவற்றை எதிர்பார்க்கின்றீர்கள்.

ஒவ்வொரு தனி நபரினதும் உள ஆரோக்கியம் வளர்ச்சியடைகின்றது. ஆனால், ஒரு குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடு முற்றி பிரிவுகளும் பிளவுகளும் ஏற்படுமிடத்து அனைவரினது உள ஆரோக்கியம் சீர்கெடுகின்றது. "வீடே நரகமாகின்றது."

இறுதியாக தீவிர மன எழுச்சிகளை எதிர்கொள்வது எவ்வாறு என்பது பற்றி பார்ப்போம்.

எங்கள் எல்லோருக்குமே சவாலாக உள்ள பிரச்சனைகளில் இதுவும் ஒன்று எதிர்கொள்ளுவதற்கு முயற்சி செய்ய முதலில் அவற்றினை அடையாளம் காண்பது மிக மிக அவசியம். கோபம், துக்கம், பயம், மகிழ்ச்சி, ஏமாற்றம், வெட்கம் என்று பல் வேறுபட்ட உணர்வுகட்கு நாம் உள்ளாகின்றோம். உணர்வுகள் தீவிரமாகும் போது நாம் இவற்றை அடையாளங் காணத் தவறுகின்றோம். (உ+ம்) சுடுதியாக கோபமேற்படும் போது எமது நடவடிக்கைகள் கட்டுக்கடங்காது போய்விடுகின்றன. பின்பு இவற்றுக்காக மனம் வருந்தும் நிலையும் ஏற்படுகின்றது.

> **(அ) குடும்பத்தில் உங்கள் பங்கு என்ன?**
>
> **ஆ) குடும்பத்திலுள்ள மற்றவர்களின் பங்கு பற்றி எவ்வளவுக்கு தெரிந்து வைத்துள்ளீர்கள்?**
>
> **இ) குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் உங்களிடம் எவற்றை எதிர்பார்க்கின்றனர்?**
>
> **ஈ) நீங்கள் மற்றைய குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து எவற்றை எதிர்பார்க்கின்றீர்கள்.**
>
> **மேற்கூறிய வினாக்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு இலகு வில் விடையளிக்க முடிகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு உங்கள் உள ஆரோக்கியம் மேம்பட்ட நிலையிலுள்ளதாகக் கருதலாம்.**

மேற்கூறிய வினாக்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு இலகுவில் விடையளிக்க முடிகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உங்கள் உள ஆரோக்கியம் மேம்பட்ட நிலையிலுள்ளதாகக் கருதலாம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக உங்களில் பலர் இவற்றுக்கு விடையளிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கியிருக்கலாம். இது பற்றி முதன் முதலாக சிந்தித்தும் இருக்கலாம். இப்படியானவர்களில் நீங்களும் ஒருவரானால் உங்கள் குடும்ப உறவுகளை நீங்கள் விருத்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. பின்வரும் வழிமுறைகள் உங்களுக்கு இதற்கு உதவும்.

1. உங்களது குடும்பத்தை பற்றிச் சிந்திக்க நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

2) உங்கள் எதிர்பார்ப்புகளையும், உணர்வுகளையும் மற்றைய குடும்ப அங்கத்தவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

3) மற்றைய குடும்ப அங்கத்தவர்கள் தங்கள் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்து கொள்ள இடமளிப்பதுடன், அவற்றுக்கு செவிமடுங்கள்.

4) குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் ஒன்றாக இணைந்து வெவ்வேறு செயற்பாடுகளில் ஈடுபடல் (உ+ம்) ஒரு நேர உணவையாவது ஒன்றாகச் சேர்ந்து உண்ணுதல், சினிமா பார்ப்பது.

இவை ஒரு சில வழிமுறைகளே, இவற்றினை மென்மேலும் விருத்தி செய்ய முடியும்.

ஆம். ஒரு குடும்பமொன்றில் அதன் அங்கத்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகவும் துணையாகவும் இருக்கும்போது அக் குடும்பத்தின்

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க முயலுங்கள்

1) உங்களை தீவிர உணர்ச்சிகட்கு இட்டுச் செல்லும் விடயங்கள் யாவை?

2) இந்த தீவிர மன எழுச்சியின் போது உங்கள் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை? (உ+ம்) கை கால் நடுக்கம், உடம்பு பதறுதல்,

3) உங்களை அமைதிக்கு இட்டுச் செல்லும் நிலைமைகள் யாவை?

நாட்குறிப்பேடு ஒன்றைப் பேணுவதன் மூலம் இவற்றுக்கான விடையைக் கண்டறிய முடியும். உடம்பில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் தீவிர மன எழுச்சிகளை அடையாளம் காண முடியும். அடையாளம் கண்ட பின்னர் அவற்றை பாதுகாப்பான வகையிலும், பிரயோசனமான முறையிலும் வெளிப்படுத்த விழையுங்கள். சந்தோஷத்தையும், துக்கத்தையும் உங்கள் நலன் விரும்புபவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சந்தோஷம் மிகுதியானால் மற்றவருடன் சேர்ந்து சிரியுங்கள். மனதில் துக்கம் ஏற்படும்போது தனியாக இருந்து மனம் விட்டு அழுங்கள் உங்கள் மனம் அமைதியுறுவதை நீங்கள் உணர்வீர்கள்.

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான காசுக்கட்டளை தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரமும் காசுக்கட்டளை இலக்கமும் தரப்பட்டுள்ளன.

| பெயர் | கா.க. இல. |
|---|---|
| 11. சி. தெளிவத்தை தோட்டம், பதுளை. | 16534773 |
| 12. எஸ். மெரினா ருக்ஷனா, கல்முனை. | 16534774 |
| 13. தியாகராசா ஜெயதீஸ்வரி, சாவகச்சேரி. | 16534775 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 14க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

திருமதி பாலசரஸ்வதி தங்கவேலு, U3/3, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு—05.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. கே. அரசேஸ்வரன், கலை மகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
2. செல்வி த. மேரி பரமேஸ்வரம், களுபோவிலை, தெஹிவளை.
3. செல்வி த. சங்கீதா, மத்திய வீதி, திருகோணமலை.
4. ஏ. சீ. ஷர்மிலா, ஹுனுப்பிட்டிய, வத்தளை.
5. வி. செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.
6. கே.எம்.எஸ். ஆப்தீன், நகரசபை விடுதி, புத்தளம்.
7. திருமதி ரி. பரமேஸ்வரன், 172/81, டிம்புல்ல வீதி, அட்டன்.
8. எம்.எச்.எம். ஜவ்பர், கல்பொக்கை வீதி, வெலிகம.
9. அ. தேவகி, புகையிரத நிலைய அருகாமை, சவுத்பார், மன்னார்.
10. செல்வி சி. மிருளாளினி, தெளிவத்தை தோட்டம், மே/பி.பதுளை.

## குறுக்கெழத்துப் போட்டி 16

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | 6 | 7 | ■ | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 |
| ■ | ■ | 14 | ■ | 15 |
| 16 | 17 | ■ | 18 | 19 |
| ■ | 20 | 21 | 22 | ■ |

**இடமிருந்து வலம்**

(1). பாட்டி.
(5). சேய்மை.
(9). ஒப்புவித்தல். (குழம்பியுள்ளது)
(16). வேலை. (திரும்பியுள்ளது)
(18). "ஆம்" என்பதை பேச்சுத் தமிழில் இப்படிக் கூறுவர். (குழம்பியுள்ளது)
(20). சுடுகாடு.

**மேலிருந்து கீழ்**

(1). சமாதான முன்னெடுப்புகளை கேள்விக் குறியாக்கும் வன்செயல்கள் இடம் பெற்ற கிழக்கு மாகாணத்திலுள்ள ஊர்.
(2). பூமி.
(3). காலி முகத்திடலில் இதை அதிகம் பார்க்கலாம். (குழம்பியுள்ளது)
(8). திறை.
(17). தெய்வமாக வழிபடும் மிருகம்.
(18). பண்டைய காலத்தில் எழுதப்பயன்பட்ட இது சுவடிகளாக இன்றும் உள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி 14 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 க | 2 டா | 3 பி | ■ | 4 ங் |
| 5 ரு | ■ | 6 ட | 7 ன் | 8 வே |
| 9 ங் | ■ | 10 லே | ■ | 11 கை |
| 12 கா | 13 மு | 14 ன் | 15 க | ■ |
| 16 லி | ■ | 17 ன் | 18 ரா | 19 சீ |
| ■ | 20 பூ | ■ | 21 ளை | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி **07.05.2003**க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-16**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

# வித்தியாசம்

தம்பலகாமம்-கவிதா



“சாந்தம் உணவகம்” வாடிக்கையாளர்களைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்றது. ஓய்வின்றிச் சுழன்று கொண்டிருந்தேன் நான். காலை ஐந்து மணிக்கு ஆரம்பித்தால் இரவு பத்து மணி வரை ஓய்வில்லை.

“உழைப்பு, உழைப்பு என்றிருக்காமல் கொஞ்சம் குடும்பத்தையும் கவனியுங்கோ!” என்று என் மனைவி கெஞ்சுவதும், கோவிப்பதும் அடிக்கடி நடப்பதுதான்.

ஆரம்பத்தில் அவன் தனியாகத்தான் வந்தான். பிறகுதான் அவள் வந்து சேர்ந்துகொண்டாள். வேலை மாற்றலாகி வந்திருப்பார்களோ? அவர்கள் பெயர் கூட அழகானதுதான். “ஆகாஷ்-மதுமிதா”

காலை, மதியம், இரவு உணவுகளை இங்குதான் சாப்பிடுவார்கள். அவர்கள் அதிர்ந்தோ, சத்தமிட்டோ பேசி நான் பார்த்ததில்லை.

ஆனால்.... கடந்த மூன்று நாட்களாக அவர்களைக் காணவில்லை. ஏன் வரவில்லை? சுகமில்லையோ?

கடையில் அமர்ந்தால் போதும். எந்தச் சிந்தனையும் வராது. அதுவும் கல்லாப்பெட்டி நிறைய நிறைய மனமும் நிறைஞ்சு போகும். இப்போது எனக்குக் கடையில் இன்னொரு சந்தோசமும் சேர்ந்துகொண்டது. அது ‘அவர்கள்’ வருகைதான். அந்த இருவரைக் கண்டாலே போதும். என்னுள்ளம் குதிக்கத் தொடங்கிவிடும்.

என்னதான் வேலை இருந்தாலும் ‘அவர்கள்’ வரும் நேரத்தில் நான் எங்கும் போகமாட்டேன். நான் மட்டுமா? எனது கடையிலுள்ள அனைவருக்கும் கொண்டாட்டம்தான்.

அவர்கள் எவ்வளவு அழகு? அந்தப் பெண் மட்டுமா? ஆண்கூட நல்ல அழகுதான். எவ்வளவு சோடிப் பொருத்தம்? இனிமையான-அழகான சோடி! உற்றுப் பார்த்தால் சகோதரங்கள் மாதிரித்தான் சாடை!

அவர்கள் வீடு தெரிந்திருந்தாலும் போவதற்கு மனம் விரும்பவில்லை.

அவர்கள் வராததனால் என் கடை களையிழந்து காணப்பட்டது. என் மனம் கூடத்தான். அப்போதுதான் ஆகாஷ் வந்தான். மகிழ்ச்சியில் பெமூச்சு வெளியேறியது.

“என்ன ஆகாஷ்? மூணு நாளா உங்களைக் காணவில்லை?” கேட்ட போது ஒரு கவரை நீட்டினான். திருமண அழைப்பிதழ் அது! பிரித்துப் பார்த்தேன்.

“கண்டிப்பா வந்திடுங்க அங்கிள். குடும்பத்தோட வரணும்.” சந்தோஷத்தில் தலையாட்டினேன். அப்போதுதான் பெயரைப் பார்த்தேன் மணமக்கள் ‘துவாரகன்-மதுமிதா’. இவனது பெயர் அதுதானோ தெரியவில்லை. சமாதானம் கொண்டேன்.

திருமணம் கோவிலில் நடைபெற்றது. நான் மட்டும்தான் போயிருந்தேன். மணமேடையைப் பார்த்த எனக்குப் பெரிய அதிர்ச்சி. அங்கே, மதுமிதாவின் அருகே வேறொருவன். சிலையாகிப் போனேன் நான். அவளது கண்களில் தெரிவது என்ன? உற்றுப் பார்த்தேன். “கண்ணீர்”.

என்னால் இந்த அநியாயத்தைப் பார்க்க முடியவில்லை. ஆகாஷைத் தேடிக்கொண்டு போனேன்.

யாருடனோ பேசிக்கொண்டிருந்தவன், என்னைக் கண்டதும் சிரித்தபடி வந்தான். “வாங்க அங்கிள். நீங்க மட்டும்தானா வந்தீங்க?”

கேட்டபோது எரிச்சல்தான் வந்தது. “ஆகாஷ், நீ செய்யிறது உனக்கே நல்லாருக்கா?”

“என்ன அங்கிள்?”

“இவ்வளவு காலமும் அந்தப் பொண்ண நீ காதலிச்சிட்டு இப்போ வேற ஒருவனுக்குக் கட்டி வைக்கிறியே? அவளுக்கு என்ன குறை? அவள வேணாமென்று சொன்ன நீ நல்லா இருப்பியா? உங்க சோடிப் பொருத்தத்தை நினைச்சி நான் எவ்வளவு பெருமைப்பட்டன்? இப்போ?.. காதலிச்சவளையே கல்யாணம் செய்யிறவங்க வரிசைல நீயும் சேர்ந்திருக்கன்னு சந்தோஷப்பட்டனே! கடைசியில நீயும் கைவிடறவங்க வரிசையில சேந்துட்டியே..”

“அங்கிள், நீங்க என்ன பேசறீங்க? நான் மதுமிதாவைக் காதலிச்சேனா? யாரு சொன்னது?” சிரித்தவன், “அவ என் கூடப்பொறந்த தங்கச்சி அங்கிள். நீங்க தப்பாப் புரிஞ்சிகிட்டீங்க. எங்களுக்கு அப்பா, அம்மா இல்ல. என் தங்கச்சிக்கு அப்பா-அம்மா எல்லாமே நான்தான். என்கிட்ட நீங்க கேட்டிருந்தா நான் சொல்லியிருப்பனே அங்கிள்?...”

அவன் கூறக் கூற நான் கூனிக் குறுகிப் போனேன். இந்த நிலம் பிளந்து ஏன் என்னை விழுங்கவில்லை? “ஆகாஷ்.. என்ன... என்னை மன்னிச்சிடுப்பா... நான்...” தடுமாறினேன் நான்.

“இட்ஸ் ஓ.கே. அங்கிள். இருந்து சாப்பிட்டுட்டுப் போங்க.” கூறிச் சென்றவனையே இமைக்காது பார்த்தேன். ச்சே. எவ்வளவு மடத்தனம்? ஒரு தங்கைக்கும், காதலிக்கும் ‘வித்தியாசம்’ தெரியாத மனுஷனாகிட்டனே. அவமானத்திலும், குற்ற உணர்விலும் தவித்துக்கொண்டிருந்தேன். மெதுவாக மதுமிதாவிடம் சென்று அன்பளிப்பைக் கொடுத்தேன்.

“அங்கிள் சாப்பிட்டீங்களா?” கேட்டவளை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை என்னால். “சாப்பிட்டாச்சும்மா” பொய் சொன்னேன்.

அங்கு நிற்கும் தகுதிகூட இல்லாமல், வேதனையும், விரக்தியும் கலந்த நெஞ்சுடன் மெதுவாக வெளியேறுகிறேன் நான்...

---

# அனுபவம்

சுண்டிக்குளி கஜோல்



வழமை போல் நான் அன்றும் 768 தனியார் பஸ்ஸில் தெல்லிப்பளை செல்வதற்காக ஏறி அமர்ந்து கொண்டேன். அன்று யாழ் பஸ் நிலையத்தில் வழமையை விட சனம் குறைவாய் இருந்தது. நான்தான் முதலாவது ஆள். பஸ் கொண்டக்ரர் ‘எவடம்’ எண்டு என்னைக் கடமைக்காக விசாரிச்சார். பஸ் வெளிக்கிட இருபது நிமிசம் இருந்தது. தினமுரசுப் பத்திரிகையை மெல்லப் புரட்டத் தொடங்கினேன். ஆக்கங்கள் சற்று வித்தியாசமாய் இருந்தது. அதிலே முழுக் கவனமாய் இருந்தேன். திடீரென்று என்னை ஏதோ ஒன்று சற்று நெருக்குவது போல் இருந்தது. பத்திரிகையை மூடிய வண்ணம் நிமிர்ந்த போதுதான் பஸ்ஸில் சனம் நிரம்பியிருந்ததைக் காண முடிந்தது.

“என்னப்பா தம்பி! உள்ளதில் நிண்டு போறம். நீங்கள் என்னெண்டால் பஸ்ஸை எடுக்காமல் இருக்கிறீயள்” என்று ஒருவர் பேசினார். “அண்ணே கொஞ்சம் பொறுங்கோ. றைவர் ரீ குடிக்கப் போயிட்டார். கெதியில வந்திடுவார்” என்று சமாளித்துப் பேசினான் கொண்டாக்ரர். “கெதியா வாங்கோ... புட்வோட்டில ஒருத்தரும் நிக்க வேண்டாம் உள்ளுக்குப் போங்கோ” என்று கத்தினான். அவன் முயற்சி வீண் போகவில்லை. றைவரும் வந்து தன்னுடைய ஆசனத்தில ஏறி அமர்ந்தார். “ஜன்னலால ஒருவரும் தலை நீட்டாதையுங்க. உள்ளுக்கெடுங்கோ. ரைட் அண்ணே எடுங்கோ.” பஸ்சும் மெதுவாக நகரத் தொடங்கியது.

சைக்கிளில வந்தொருவர் “அண்ணே கோண்டாவில் போகுமே” எனக்கேட்டார். “ஓமண்ணே போகும் ஏறுங்கோ. சைக்கிளத் தாங்கோ மேல போடுவம்” என்று கூறிக்கொண்டே ஒரே பாய்ச்சலில் வாகனத்திற்கு மேல் ஏறினான். குரங்கில் இருந்து மனிதன் பிறந்ததான் என்பதற்கு இவன் ஒரு அத்தாட்சியாக அந்த இடத்தில் காணப்பட்டான். “எத்தின தரஞ் சொல்லுறது ஜன்னலுக்கிளாலே எட்டிப் பாக்காதையுங்கோ எண்டு. எனக்கென்ன? இருநூறு ரூபாய் நீங்கள்தான் கட்டுவியல். முன்னுக்கு அண்ணே காசையெடுங்கோ, எவடம்?” இப்பொழுது காசு வாங்கிறதில மும்மரமாய் இருந்தான். “அக்கா இறங்கேக்கிள இரண்டு ரூபாய் தாறன்” அதற்கு அப் பெண்மணியும் சரியெனத் தலையை ஆட்டினாள். ஒரு வயோதிபர் தாள்க் காசை நீட்டினார். “ஐயா மாத்தின காசு இல்லையே?” “இல்ல தம்பி.” “பாருங்கைய்யா கிடக்கும். உங்களிட்ட இல்லாத காசே” எண்டு புழுகுப் புகழாரம் பாடினான். “தட்டா தெரு இறக்கம். இறங்கிற ஆக்கள விலத்தி விடுங்கோ, அடுத்த கோல்ட்டில இறங்கிற ஆட்களும் அப்பிடியே முன்னுக்கு வாங்கோ. அடுத்த கோல்ட் இறக்கமிருக்கோ?” எவ்வித சத்தமும் இல்லை. “ரைட் எடுங்கோ.” “தம்பி... தம்பி இறக்கம்” என்றாள் வயோதிப மாது ஒருத்தி. “என்னம்மா நீங்கள் இவ்வளவு நேரமும் கேக்கிறன் பேசாமல் இருந்திட்டு இப்ப சொல்லுறியள். முன்னுக்கு வாங்கோ” அம்மாதுவை இறக்கி விட்டான். “ரைட் எடுங்கோ.”

நாச்சிமார் கோவிலடிக்கிட்டே மூன்று இளம் பெண்கள் நின்றார்கள். “அக்கா தெல்லிப்பளை வரையும் போகுது ஏறுங்கோ, சீட் தரலாம் ஏறுங்கோ.” அவனின் கத்தலாலும், கெஞ்சலாலும் அப் பெண்கள் வெட்கத்துடன் மனமின்றி ஏறினார்கள். றைவரும் சொல்லி வைத்தது போல் சரியான இடத்திலதான் நிற்பாட்டியிருக்கிறான் போல் பட்டது. அம்மா குழந்தையை மடியில வைச்சிருங்க. அக்கா இருங்கோ. தங்கச்சி நீங்கள் சின்னாள் தானே எழும்பி நில்லுங்கோ அக்கா நீங்க இருங்கோ ஒரு மாதிரி அந்த மூன்று பேருக்கும் சீட் குடுத்திட்டான். “எங்களப் பத்தி யோசிக்கிறானில்லையே” எண்டு ஒரு வயசு போன அம்மா புறுபுறுக்கத் தொடங்கினாள். “கொக்குவில் போறாக்கள் ஏறுங்கோ” என்று வீதியில் நிற்பவர்களைப் பார்த்தெல்லாம் கேட்டான். “கெதியாய் இறங்குங்கோ. தம்பி சைக்கிள்” என்றது ஒரு குரல்.

என்னைய்யா நீங்கள் இப்பவே சொல்லுறது எனக் கத்தியபடி மீண்டும் ஒரே பாய்ச்சலில் மேலே ஏறி சைக்கிளை எடுத்துக் கொடுத்தான். “ரைட் எடுங்கோ. தாவடி கோண்டாவில் இறக்கமிருக்கே?” சலனமாய் இருந்தது “ரைட் எடுங்கோ.” அவனுடைய ஒவ்வொரு செயற்பாடும் செய்யும் தொழிலே தெய்வம் என்று நினைக்கிறான் எண்டு காட்டியது. இப்போது பஸ்சும் இணுவில் தியேட்டரடியில! மீண்டும் ஐந்துபேரை ஏத்தியபடி மருதனார் மடத்தடியில வந்து நின்றது. பாடசாலைப் பிள்ளைகள் முந்தியடித்தபடி ஏறினார்கள். “சீசன் இருக்கிறாக்கள் ஏற வேண்டாம். உங்கட பஸ் பின்னுக்கு வருகு. தங்கச்சி பாக்கைக் கழட்டி பின்னாலை இருக்கிறாக்களிட்ட குடுங்கோ, இப்பிடி இப்பிடிக் கொழுவியிருந்தால் மற்றாக்கள் நிக்கிறேலையே? ரைட் எடுங்கோ.” “தம்பி மிச்சக் காசு இரண்டு ரூபாய்” என்று கூறியபடி ஒரு வயோதிபப் பெண் கைகளை நீட்டினாள். எவடமணை இறங்க வேணும்?“ “சுண்ணாகம்.” “அவசரப் படாதையணை இன்னும் தூரம் இருக்கு இறங்கேக்கின கேள் தாறன்” மூதாட்டியும் “சரி” எண்டு தலையாட்டியபடி எழுந்தவள் மீண்டும் சீட்டில வடிவாய் உட்கார்ந்து கொண்டாள்.

“என்னம்மா தங்கச்சி கிட்ட இறங்கிறனீங்கள் சில்லறையோடையெல்ல வரவேணும். எல்லோரும் தாளைத் தந்தால் நான் என்ன செய்யுறது” என்று சற்றுக் கோபத்துடன் பேசினான். சுண்ணாகம் பஸ் கோல்ட்டில நிற்க முன்னமே “தெல்லிப்பளை போறாக்கள் வாங்கோ” எண்டு கத்தினான். ஒரு மூதாட்டி “தம்பி கோட்டடி போகுமே” என்று கேட்டாள். “மல்லாகம் சந்தியில இறக்கி விடுறன். பக்கத்திலதானே ஏறணை ஆச்சி” என்று திணித்து ஏற்றினான். இன்னொரு மூதாட்டி “தம்பி மிச்சம் இரண்டு ரூபாய்” எனக் கேட்டாள். “ஆச்சி உன்ன எனக்கு நல்லாத் தெரியுமணை. அடுத்த முறை ஏறேக்கிள தாறன். ரைட் எடுங்கோ. அம்மா! மல்லாகம் மெல்ல இறங்கப் போறியள். பிறகேன் அடித் தொங்கலில இருக்கிறிங்கள். முன்னுக்கு வாங்கோ. பிறகு இறங்கேலாமல் நில்லுங்கோ! மல்லாகம் இறக்கம் கெதியாய் இறங்குங்கோ. அண்ணே எவடம் தெல்லிப்பளையே. சீ.ரி.பி. வர நேரஞ் செல்லும் அதுக்குள போய்ச் சேர்ந்திடலாம் ஏறுங்கோ” என்று அந்தப் பயணி கதைக்க முன் தானே முழுக்கக் கதைச்சு ஏத்தினான். பஸ்சும் தெல்லிப்பளையை நெருங்கிய வண்ணம் இருந்தது. அவசரப்படாதையுங்கோ பஸ் நிண்டாப் பிறகு இறங்கலாம். என்னைய்யா அவசரப்படுறியள். தெல்லிப்பளைக்கு அங்கால போகாது ஆறுதலாய் இறங்குங்கோவன்.” எல்லோரும் இறங்கியபின் பஸ்ஸை ஒருதரம் கண்களை விட்டுச் சுழற்றிப் பார்த்தான். “தம்பி” என்று ஒரு பெண் கூப்பிட்டாள். இவன் திரும்பியபோது “மிச்சம் தரேல” என்று மெதுவாகச் சொன்னாள். “எவ்வளவு தந்தனீங்கள்?” “பத்து ரூவாய்” என்றாள். மிச்சமாய் ஐந்து ரூபாய் கொடுத்தான். “மல்லாகத்தில தான் ஏறினான்” என்று தயங்கியபடி சொன்னாள். “என்னக்கா செய்யுறது. சில்லறை இல்லையே” என்று பரிதாபமாய் நடித்துக் கூறினான். அவளும் அவ்விடத்தைவிட்டுப் போனபின் கதவுகளை இறுகப் பூட்டினான்.

றைவருடன் ரீ குடிக்க கடையொன்றினுள் புகுந்தான். நானும் அக் கடைக்கு ரீ குடிக்கச் சென்றேன். அங்கே இருந்த இன்னொரு பஸ் கொண்டக்ரர் “எப்படியடாப்பா உழைப்பு” என்று அவனைக் கேட்டார். “எங்கையண்ணை உழைப்பு வழமை போலதான்” என்று சலிப்புடன் கூறிக்கொண்டு, ரீக்கு ஓடர் கொடுத்துவிட்டு கடையின் மூலையில் உள்ள பெட்டி ஒன்றில் அமர்ந்தபடி பொக்கெட்டுக்குள்ளாலே இருந்து சில்லறைகளையும், தாள்களையும் அள்ளி எடுத்தான். ஒரு கணம் தன்னை மறந்து மனதுக்குள் சிரித்தான். இப்பொழுது காசைக் கணக்குப் பார்ப்பதில் மும்மரமாய் இருப்பதை, அவனுக்கு வைக்கப் பட்ட ரீயில் இலையான் மொய்த்திருப்பதில் இருந்து தெரிகிறது.

# மரண அறிவித்தல்



மண்ணில்
10 - 03 - 1980
இலங்கையில்

விண்ணில்
21 - 04 - 2003
இங்கிலாந்தில்

## திருமதி. சிவசாயி டனி பிரேமச்சந்திரன் (மஞ்சு)

நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும்,
உன் தேவனுடைய கையில் இராஜ முடியுமாய் இருப்பாய்!!

(ஏசாயா 62 :3)

"உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை
உன் சந்திரன் இனி மறைவதுமில்லை
கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பார்"

(ஏசாயா 61 :20)

**"நீங்காத துயருடனே நித்தம் நித்தம் உன் நினைவு
நீங்கள் இல்லாத வாழ்வை கனவிலும் நினைக்கவில்லை
புன்னகை மாறா உங்கள் அன்பு வதனம் என்றும் எம் கண்முன்னேயே
நெஞ்சு பொறுக்குதில்லையே உன் திடீர் பிரிவை
ஆண்டவர் தந்தார் ஆண்டவர் எடுத்துக்கொண்டார்."
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்திக்கிறோம்.**

டனி பிரேமச்சந்திரனின் (London) அன்பு மனைவியும், டனிஸ் பிரேமரட்சகனின் (London) அன்பு தாயாரும், திரு.திருமதி சிவசாமியின் (London) அன்பு மகளும், திரு.திருமதி எட்வின் (Colombo) அன்பு மருமகளும், செல்வன் சாம் டானியேலின் (London) அன்பு சகோதரியும், திருமதி வினோதினி, திருமதி சிந்தியா, திருமதி பேளி, திரு. டன்டி ஆனந்தரட்சகன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், திரு.திருமாறன், திரு.சில்வெஸ்டர், திரு.செந்தில்ராஜ், ஆகியோரின் அன்பு சகோதரியும், செல்வன் ஏணஸ்ட், செல்வன் டெஸ்மனின் அன்பு மாமியும் ஆவார். ஜனித்தா, தயாழினி, மாலினி, ரூபன், நேசன், ராஜன், சுபன், யோகன், இளங்கோ, சாள்ஸ், சயன், குன்றன், நிவேதிகன், றியா, ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிந்தியா, நிதி, தானியா, லீசா, பாபு ஆகியோரின் அன்பு சகோதரியும் திரு.திருமதி செல்லப்பா, திரு.திருமதி செல்லத்துரை, திரு.திருமதி இராஜசிங், மதி, குகன், மாலி ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி அருளம்மாவின் அன்புப் பேத்தியும் ஆவார்.

தகவல் : டனி எட்வின் ( London), 01494-439867
Mr.Mrs. எட்வின் (Sri Lanka)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### தீவிர வைராக்கியம்

ஓர் ஊரில் நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. மிகுந்த வறட்சி ஏற்பட்டது. குடியானவர்கள் வெகு தொலைவிலிருந்து வாய்க்கால் வெட்டித் தண்ணீர் கொண்டு வந்தனர். ஒரு குடியானவன் உறுதியான மனம் கொண்டவன். கால்வாயை ஆற்றில் இணைத்து வயலுக்குத் தண்ணீர் கொண்டு வரும்வரை நான் கால்வாய் வெட்டும் வேலையை விட்டு விலக மாட்டேன்' என்று சத்தியம் செய்து கொண்டான். கால்வாயை வெட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டான். குளிக்கும் நேரம் வந்தது. அவன் மனைவி, தன் மகளிடம் அவன் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக எண்ணெயை அனுப்பி வைத்தாள். மகள் அவனிடம் வந்து 'அப்பா, நேரம் ஆகிவிட்டது. எண்ணெய் தேய்த்துக் குளியுங்கள்' என்று சொன்னாள். அவன், 'எனக்கு இப்பொழுது வேலை இருக்கிறது. நீ போ' என்று எரிந்து விழுந்தான். பிற்பகல் வந்தது. மணி இரண்டு ஆயிற்று. அப்பொழுதும் குடியானவன் வயலில் வேலை செய்வதை நிறுத்தவில்லை. குளிக்க வேண்டும் என்ற நினைவே அவனுக்குத் தோன்றவில்லை. அப்பொழுது அவனுடைய மனைவி அங்கே வந்து, 'என்ன இன்னமும் குளிக்காமல் இருக்கிறீர்களே! உணவு ஆறிப் போகிறதே. நீங்கள் எல்லாவற்றையும் பெரிதாக்கிக் கொள்ளுகிறீர்கள். அளவுக்கு மிஞ்சியே எதையும் செய்கிறீர்கள். இன்று இல்லாவிட்டால் இவ்வேலையை நாளைக்குச் செய்து கொள்ளலாமே அல்லது சாப்பிட்டு விட்டுச் செய்யலாமே' என்றாள். குடியானவனோ பெருங்கோபத்துடன் அவளைப் பார்த்து, 'புத்தி கெட்டவளே! மழையோ பெய்யவில்லை. இருப்பது இந்தக் கொஞ்சம் பயிர்தான். இதுவும் வாடிப் போனால் குழந்தைகள் எதைச் சாப்பிடும்? சோறில்லாமல் சாக வேண்டுமா? இன்று வயலுக்குத் தண்ணீர் கொண்டுவந்த பிறகுதான் குளியல், சாப்பாடு எல்லாம் என்று சத்தியம் செய்திருக்கிறேன்.' என்று கூறி மண்வெட்டியை ஓங்கியபடியே அவளை அடிக்க ஓடினான். மனைவி அங்கிருந்து ஓடிவிட்டாள். குடியானவன் நாள் முழுவதும் முதுகு எலும்பு ஒடிய உழைத்து, மாலை வேளையில் ஆறு வரை கால்வாயை வெட்டி வயலோடு இணைத்து விட்டான். தண்ணீர் 'சலசல' என்று வாய்க்கால் வழியாக ஓடி வயலுக்குள் பாய்வதை பரப்பின்மேல் உட்கார்ந்து கொண்டு மகிழ்ச்சியுடன் பார்க்கலானான். அவன் மனம் அளவற்ற ஆனந்தத்தில் மூழ்கியது. வீட்டிற்குச் சென்று தன் மனைவியைக் கூப்பிட்டான். 'இந்தா! இப்பொழுது குளிக்க எண்ணெய் கொண்டுவா. ஹுக்காவுக்கு ஏற்பாடு செய்' என்றான். பிறகு கவலையற்றுக் குளித்துச் சாப்பிட்டான். படுத்து குறட்டை விட்டு நன்றாகத் தூங்கினான். இத்தகைய மனநிலைதான் தீவிர வைராக்கியத்திற்கு உதாரணம்.

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

# அழகின் இலட்சியம்

அந்தக் கல்யாணக் கூட்டத்தினிடையே அழகிய மின்னலென அவள் அடிக்கடி அச்சுதன் கண்ணில் பட்டு, மறைந்து கொண்டிருந்தாள்.

அவள் போகுமிடத்திற்கெல்லாம் இவன் தன் பார்வையைத் துரத்தியபடி இருந்தான்.

அந்தச் சிவந்த பட்டுப் புடவையில் சற்றுக் குண்டாகத் தெரிந்தாளேயொழிய உண்மையில் வாளிப்பான உடல் வாகுதான் அவளுக்கு.

சிவந்த சேலை தென்றலிலேயே மிதந்து கொண்டிருப்பது போல, அவள் கால்களைப் பூமியில் பதித்து நடப்பது தெரியாமல் அந்தக் கூட்டத்தின் இடையே நகர்ந்து கொண்டிருந்தாள்.

அவளது அங்க அவயவங்களும் அசைவுகளும் அவளது மனதின் ஆணைக்குக் கட்டுப்பட்டு எப்போதும் அவள் அழகைப் பிரதிபலிப்பவையாக இருந்தன.

அவளைப் பார்க்கும் எவருக்கும், அவர்கள் அழகு என்பதற்கு என்ன அர்த்தம் வைத்திருக்கிறார்களோ அதையெல்லாம் அவளிடம் கண்டுகொள்ள முடிந்தது.

அவளுடைய அழகிய கரு விழிகளின் பார்வைக் குளிர்வீச்சு சென்று தழுவிய ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு பொருட்களும் அவை பிறப்பிக்கப்பட்டதன் பெரும் பயனைப் பெற்றுக் கொண்டு சாபல்யமடைந்ததாக அச்சுதனுக்குத் தோன்றியது.

வியப்போடு அவளை விழுங்கினான்.

பின்னால் பின்னிக் கொண்டையிட்டிருந்த போதிலும், முன்னால் முரட்டுத்தனமாகச் சிதறிநின்ற இரண்டொரு கருங்குழலிழைகள், கழுத்திலிருந்த சிறு முத்தாரம், அலட்சியத்துடன் அவ்வப்போது குவிந்த அகன்ற பவள உதடுகள், பளீரிட்ட வெண் கழுத்து, அடுத்து அளவுடன் இருந்த மேடுகள், இலங்கு நுண்ணிடை, சேலைக்குள்ளிருந்து சிலபொழுது எட்டிப் பார்க்கும் வெண் பாதங்கள்... அச்சுதன் இருந்த திசையில் அவள் முகம் திரும்பிய போதெல்லாம் அவள் கண்கள் சிரித்த முறை, சதா அதில் துளிர்விட்டு மின்னிய, ஒளி...

அழகான பெண்ணொருத்தி எப்படி அந்தச் சூழலையே அழகின் இலட்சியமாக்கி விடுகிறாள் என்று வியந்தான் அச்சுதன்!

அவளைப் பார்த்தபடி இருந்த அந்த நிமிடங்களில் உயிர் அணுக்களில் ஒளியினுடைய அல்லது உவகையினுடைய பரவசத்தை அனுபவித்தான்.

அவளுடன் பேசிவிட வேண்டும், சமீபத்திலிருந்து அவளைப் பார்க்க வேண்டும் என மனம் உந்த எழுந்து நடந்தான்.

அவள் யாருடனோ குனிந்து பேசிவிட்டுத் திரும்புகையில் இவன் அவளின் எதிர்ப்பட்டான்; மிக நெருக்கத்தில் அவளை நேருக்கு நேர்கண்டதும் அவன் தைரியமெல்லாம் எங்கோ



பறந்துபோய், விவரிக்க முடியாத ஒரு குழப்பம் அவனைச் சுற்றிவளைத்துக் கொண்டது. எதுவும் பேசமுடியாதவனாகத் திணறியபடி அவளெதிரே நின்றான்.

ஏன் நிற்கிறான் என்று புரியாததால், அவளைக் கேள்வி கேட்கும் பாவனையில் தனது விற்புருவங்களைச் சற்றே உயர்த்தினாள். அந்தப் புருவங்களின் எழுச்சிகூட மிக அழகாயிருந்தது. அந்த அழகைப் பருகியபடியே பார்வையைக் கீழிறக்கிய அச்சுதன் மற்றுமிரு எழுச்சிகளின் அழகில் மேலும் தடுமாறினான்.

அவனுக்கு அது ஆச்சரியங்களின் நிமிடமாக இருந்தது. கொஞ்ச நேரம் அமைதியாகப் பார்த்தபடியே நின்றான். அந்த சில விநாடி நேர அமைதியில் இதயத்தில் சில பனிப்பாறைகள் நொறுங்கும் ஓசையை அச்சுதன் கேட்டான். மனதின் இறுக்கம் மெல்ல அவிழ்ந்தபோது, மெல்ல குரலை வரவழைத்துக் கொண்டு அவள் பெயரைக் கேட்டான்.

கண்களில் ஒளிமின்ன சிரித்தபடியே "மாதுமை" என்றாள். அவன் உயிரைக் கலக்கி உறிஞ்சி இழுக்கும் ஒரு பார்வையை வீசிவிட்டு அகன்றாள்.

அச்சுதன் சூறாவளியால் தாக்கப்பட்டவன்போல் நின்றான்.

அவள் பின்னால் ஓடியது அவன் மனம்.

பெரிய முரசங்களை முழக்கியபடி யானையில் சென்று வேற்று நாட்டில் புகுந்து, வெல்லற்கரிய அவர்களது கோட்டையை அழித்துத் திரும்பிய பிறகு ஏற்படும் நிம்மதிப் பெருமூச்சும் ஆசுவாசமும் கிடைத்தது போல அவளிடம் போய் அடைந்தது மனம்.

தொழில் திறமை வாய்ந்த ஒருவன், கூரிய அரத்தால் அறுத்துச் செப்பமுறச் செய்தது போன்ற வளையணிந்த அவளது முன்கைகளையும், அழகாய் வளைந்து ஒளி வீசிய நெற்றியையும் நினைத்தான்.

இளமை துடித்த உடலையும், குவளை மலர்போன்ற மைதீட்டிய மருண்ட கண்களின் மன மகிழ்ச்சி தரும் அந்தப் பார்வையும் தன் மனத்தை அவள் பின்னால் விரட்டுவதை உணர்ந்தான்.

மலையமா ஊர்ந்து போகி
புலையன் பெருந்துடி கறங்கப்
பிறபுலம் புக்கவர்
அருங்குறும்பு எருக்கி
அயா உயிர்த் தா அங்கு
உய்த்தன்று மன்னே நெஞ்சே.....

வல்லோன் வாள் அரம் பொருத
கோள் நேர் எல்வளை
அகன்தொடி செறித்த முன்கை
ஒண்நுதல் திதலை அல்குல்
குறுமகள் குவளை உண்கண்
மகிழ்மட நோக்கே.

(நற்றிணை: 77: 1-4, 9-12)

## சிந்தியா பதில்கள்

★ சமீபத்தில் படித்த கவிதை ஏதாவது?

எ.ஃப்.சல்மா, கண்டி.

ஒலிபரப்பாளர் தயானந்தா தனது நேர்காணல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் நூல் 'வானலையின் வரிகள்' அதில், இன்று சினிமாவில் பிரபலமாகியிருக்கும் கவிஞர் யுகபாரதியின் ஆரம்பகாலப் பேட்டியும் இருக்கிறது. தன் கவிதை ஒன்றைச் சொல்லியிருக்கிறார், பாருங்கள்.

எச்சமிடக்கூடும்
என எச்சரிக்கையாய்
ஜன்னலில் வந்தமரும்
சிட்டுக் குருவியை
சூ... என விரட்டிவிட்டு
டிஸ்கவரி சேனலில்
பறவைகளை ரசி.

●●

★ வேட்பாளருக்கும் வாக்காளருக்கும் என்ன வித்தியாசம்?

எஸ்.ஸ்ரீபன், காலி.

வென்ற பிறகு வேட்பாளர் பாராளுமன்றம் போய்ச் சாப்பிட்டு விட்டு அடுத்தது என்ன என்று கேட்கக் கிளிநொச்சிக்குப் பறந்து கொண்டிருப்பார். வாக்காளர் அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கும் நிம்மதியில்லாமல் இனி சண்டை எப்போது என்றறிய பேப்பர் பார்த்துக் கொண்டிருப்பார்!

●●

★ என் அபிமான நடிகர் விஜய்யின் சமீபத்திய படங்கள் எல்லாம் தோல்விப் படங்களாக ஆவது பற்றி..?

பி.மணி, மன்னார்.

இயக்குனர் விக்கிரமனோடு தகராறாகி, அவர் படத்திலிருந்து விலகியதிலிருந்தே விஜய், கதையை இயக்குநரை விட்டு வேறு எதையெதையோ நம்ப ஆரம்பித்துவிட்டார் என்பது தெரிந்தது தான்!

●●

★ தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளில் எழுதுகிறவர்கள் எல்லாம் புலிகளின் அவ்வப்போதைய கருத்துக்களுக்குப் பொழிப்புரை எழுதுகிறார்களே தவிர, தங்கள் கருத்தாக ஒன்றை எப்போதும் யாரும் எழுதுவதாகத் தெரியவில்லையே! நமது பிரச்சனைத் தீர்வுக்கு இரு தரப்பினரும் என்னென்ன செய்ய வேண்டும் என்ற பொதுக் கருத்துக் கொண்டவர்கள் யாருமில்லையா?

வே.குகன், கொழும்பு-06.

இருக்கிறார்கள். சொல்லி, உயிரைப் போக்கிக் கொண்டு விடுவதில் என்ன பிரயோசனம் ஏற்பட முடியும் என்று நினைத்து மௌனமாயிருக்கிறார்கள். உயிரோடு இருந்தால்தான் என்றாவது ஒருநாளாவது அந்தக் கருத்துக்களை எல்லாம் வெளிப்படுத்த வேணும் முடியும். ஆள் முடிந்து விடுவதால் அவர் கருத்து வெளியே உலவுவதற்கான அச்சச்சூழல் மேலும் பயங்கரமாக இறுகுகிறது என்பதை உணர்ந்து சும்மா இருக்கிறார்கள். மற்றவர்கள் எழுதுகிறார்கள்: பேசுகிறார்கள்.

●●

★ காதல் வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

மு.மாதவி, மன்னார்.

காதல் என்பது கண்நோய்: விழியிருப்பவர் விலக்க முடியாதது.




★ சினிமா காதல் பற்றி?

அ.பாயிலீன், மருதானை.

'இத்துனூண்டு முத்தத்தில இஷ்டமிருக்கா? அல்லது இங்கிலீசு முத்தத்தில கஷ்டமிருக்கா?' என்று தெருத்தெருவாய் விரட்டி ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காதலிக்கிறார்கள் என்று நாம் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது!

●●

★ உலகத்தின் மனசாட்சி, நாடுகளின் இறையாண்மை, மனித குலத்திற்கெதிரான யுத்தம், அந்நியத் தலையீட்டுக்கு ஐ.நா. அங்கீகாரம்... போன்ற கோஷங்களின் பொருளெல்லாம் என்னவாகி விட்டன?

கே.அக்கீத், செட்டிக்குளம்.

இனி எல்லாப் பொருளும் ஒரு சொல் குறித்தனவே! பு... உஉஉ!

●●

★ அந்த மாதிரி ஒரு ஜோக் சொல்லுங்கள் பார்ப்போம்?

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

ஒரு ராணுவ வீரன்: உனக்கு கல்யாணமாகி விட்டதா?

மற்றவன்: இல்லை.

முதல் வீரன்: ராணுவத்தில் ஏன் வந்து சேர்ந்தாய்?

மற்றவன்: போரை விரும்பினேன். அதற்காகத்தான் சேர்ந்து கொண்டேன்.

முதல் வீரன்: நான் அமைதியை விரும்பினேன். அதனால்தான் வந்து சேர்ந்தேன்.

மற்றவன்: அமைதிக்காகவா?

முதல் வீரன்: ஆமாம். எனக்கு மனைவி இருக்கிறாள்.

இது திருப்திப்படவில்லை என்றால் முஸம்மிலின் கேள்விக்கு வாருங்கள்.

●●

★ புலிகளுக்காக உளவு பார்த்தார் என்று சொல்லிக் கொல்லப்பட்ட நிமலராஜனுக்காக இன்றும் கண்ணீர் வடிப்பவர்கள் பலர். ஆனால் இந்த ஒருவருடப் புரிந்துணர்வுக் காலத்தில் ராணுவத்திற்கு உளவு பார்த்தனர் என்று சொல்லப்பட்டு இதுவரை 23 தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். அது குறித்த எந்த அபிப்பிராயமுமே தெரிவிக்காமல் கமுக்கமாக இருப்பது என்ன நாகரிகம்?

இ.அமுதா, மட்டக்களப்பு.

தமிழன் நாகரிகம்!

●●

★ பார்வை வேறுபடுவது என்றால் என்ன?

எம்.எம்.முஸம்மில், புத்தளம்.

நோயாளி டொக்டரிடம் சொன்னான்:

"முதலிலேயே நான் களைத்து விடுகிறேன். இரண்டாவதில் என் மார்பில் வலி எடுக்கிறது. மூன்றாவதில் அப்படியே மயங்கி விழுந்து விடுகிறேன்; ஒரே பெருமூச்சு வாங்குகிறது."

"முதலிலேயே நிறுத்திக்கொள்வது தானே" என்றார் டொக்டர்.

"என்வீடு மூன்றாவது மாடியில் இருக்கிறது; நான் என்ன செய்வது?" என்று கேட்டான் அவன்.

●●

★ குளுகுளு அலுமாரியைப் போல இருப்பதால் ஃபிரிட்ஜை 'குளுமாரி' என்று அழைத்தால் என்ன?

நா.விஜயன், கொழும்பு-13.

சூட்கேஸை துணிமாரி என்றும், வோஷிங் மெஷினை துவைமாரி என்றும் சொல்பவர்கள்தான் இனப்பற்றுள்ளவர்கள் என்று நீங்கள் அழுத்திச் சொன்னால் (சோமாரி, கேப்மாரி என்று வந்துவிடாமலிருந்தால் சரி) நம்மவர்கள் பயத்தில் மறுப்புச் சொல்லாமல் இருந்து விடுவார்கள். ஆனால், அலு மாரி என்பதே தமிழ்ச் சொல் இல் லையே விஜயன்! அதுபோல ஃபிரிட்ஜ் என்று சொல்கிறவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டுமே!

●●

# முத்தத்திற்குச் சில அடிப்படைக் குறிப்புகள்

ஈர உதடுகள்: முத்தமிடும் போது உங்கள் உதடுகள் ஈரப் பதத்துடன் இருக்க வேண்டும். வறண்ட உதடுகள் வளமான முத்தம் தராது. நாக்கை பயன்படுத்தி உங்கள் உதடுகளை ஈரப்படுத்திக் கொள்ளுங்கள். அதற்காக உதட்டுச் சாயம் எதுவும் பூச வேண்டாம். ஈர உதடுகள் இருவருக்குமே சுகமான அனுபவத்தைத் தரும்.

நெருக்கம்: முத்தம் தரப்படும் போது இருவரும் நெருங்கி இருக்க வேண்டியது அவசியம். உடல்கள் நெருக்கமாக இருக்கும் போது தலையை சற்று மேல் நோக்கி சாய்த்தபடி முத்தம் தாருங்கள் அல்லது பெறுங்கள். உங்கள் ஜோடி எந்தப் பக்கம் தலையை சாய்த்து வைத்திருக்கிறாரோ அதற்கு எதிர்ப்பக்கமாக நீங்கள் உங்கள் தலையை சாய்த்துக் கொள்ளுங்கள். உங்களால் இது முடியவில்லை என்றால் கவலைப்பட வேண்டாம். உங்கள் ஜோடி அவராகவே உங்கள் முகத்தை ஆர்வத்துடன் பிடித்து சாய்த்து முத்த மழை பொழிவார். இந்தச் சூழலில் உதடுகள் ஒன்று சேரும்போது உலகை நீங்கள் மறப்பீர்கள்.

கண்கள் கிறங்கும்: உதடுகள் சந்திப்பதற்கு முன்னரே உங்களுக்கு கிறக்கம் ஏற்படும். அந்த கிறக்கத்தில் உங்களை இழந்து கண்களை மூடிக் கொள்ளுங்கள். உதடுகள் சந்திப்பின்போது கண்



களும் சந்தித்தால் அது முத்த கவிதையின் உச்சம் என்பதும் உண்மைதான். அந்தநிலை மேலும் கிறக்கத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். இருவரிடையேயும் நெருக்கம் அதிகமாகும்போது அதை முயற்சித்து பாருங்கள்.

திறந்த உதடுகள்: உங்கள் வாயை மெதுவாகத் திறந்து உதடுகளை மெல்ல பிரித்து உங்கள் ஜோடியின் உதடுகளை உங்கள் உதடுகளால் பற்றுங்கள். மூச்சை நிறுத்த வேண்டாம். இருவரும் மற்றவரின் மூச்சுக் காற்றை உணருங்கள். உதடுகள் சந்திப்பின் போது, மெல்ல மற்றவரின் உதடுகளை அழுத்துங்கள். மெல்ல உதடுகளை மற்றவரின் உதடுகளின் மீது சுழற்றியபடி செய்யுங்கள். சொர்க்க வாசல் திறக் கப்படுவதை உணர்வீர்கள்.

மூடிய உதடுகள்: இந்த வகை முத்தம் உங்கள் அத்தை அல்லது பாட்டிக்கு கொடுப்பதை போன்றது. உதடுகள் சந்திப்பின்போது வாயைத் திறக்காமல் உதடுகளையும் சேர்த்து மூடி இருப்பது. காதலில் இந்தவகை முத்தம், நெருக்கம் இந்த அளவுக்கு மட்டும் தான் என்பதை உணர்த்தும். இது சாதாரணமாக ஹலோ சொல்வதைப் போன்றது. அதற்கு ஒரு படி மேல் சென்று உங்கள் அன்பை பரிமாற இது உதவும்.

கரங்கள்: முத்தம் தரும்போது உங்கள் கைகளைப் பல வழிகளிலும் பயன்படுத்தலாம். பொதுவாகப் பலரும் பின்பற்றும் வழி, ஒரு கையை மற்றவரின் பின் இடுப்பிலும் மற்றொரு கையை முதுகிலும் சேர்ந்து அரவணைத்தபடி முத்தம் தருவது. இன்னும் காதல் கவிதையாய் முத்தம் தர, உங்கள் கைகளால் அவரது முகத்தைப் பற்றி உங்களை நோக்கி லேசாக இழுத்தபடி உதடுகளுடன் உறவாட வேண்டும். இந்த முத்த உறவின்போது கைகளால் மற்றவரின் உடல் முழுவதும் தழுவி பரப்புவது ஆஹா... என்ற உணர்வைத் தரும். முத்தக் கலை பாடத்தை இப்போது கற்றுக் கொண்டு விட்டீர்கள், இனி கற்றதை சரியாகச் செயல்படுத்துவது உங்களின் பொறுப்பு.

# மினி ஸ்கேட் நோ என்ட்ரி

அந்த ஜகார்த்தா அரசஅலுவலகத்தின் முகாமையாளருக்கு மினி ஸ்கேட் அணிந்த பெண்களை கண்டால் கெட்ட கோபம் வருகிறது. அலுவலக நேரத்தில் சிகரெட் விற்பதற்காக மினி ஸ்கேட்டுடன் வரும் இளஞிகள் தமது பணியாளர்களின் கவனத்தை பல மணி நேரம் குழப்பி விட்டுச் செல்வதாக பொரிந்து தள்ளுகிறார் முகாமையாளர்.



மொபைல் சிகரட் விற்பனை பிரதிநிதிகளாக இந்தோனேசிய இளம் பெண்கள் மினி ஸ்கேட்டுகள், அரைகுறை ஆடைகளுடன் அரச, தனியார் அலுவலகங்களுக்குச் சென்று சிகரட் விற்பனை செய்து வருகின்றனர்.

ஜகார்த்தாவுக்கு மேற்கே உள்ள தாங்கெராங்கில் உள்ள ஓர் அலுவலகத்துக்குள் நுழைய மினிஸ்கேட் விற்பனைப் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆத்திரமடைந்த இந்த அலுவலகத்தின் முகாமையாளர் தன் ஊழியர்களின் 'கற்பை' பாதுகாக்கும் நோக்கில் இனிமேல் மினிஸ்கேட் அணிந்த பெண்களை உள்ளே வர அனுமதிப்பதில்லை என அறிவித்துவிட்டார்.







# ஆறுமனமே ஆறு!

## பாலியல் வன்முறைக்கு ஆளான ஆண்கள்....

"துரட்டினால் எனது ஆண்குறியை பல தடவை நசித்தார்கள். இரண்டு தடவை மின்சாரத்தை என் ஆண்குறியில் செலுத்தினார்கள். நான் வேதனையில் பல தடவை துடித்திருக்கிறேன். சில வேளைகளின் என்னை அடித்துத் துன்புறுத்தி சுய இன்பத்தில் ஈடுபடும்படி மிரட்டுவார்கள். அந்த மரண பயத்தில் எப்படிச் சுய இன்பம் காண முடியும்? அடி தாங்க முடியாமல் மணிக்கணக்கில் முயற்சி செய்வேன். வேதனை அடைவேன். எனது இரண்டு கைகளும் சோர்ந்து போகும் வரை முயற்சி செய்வேன். இப்படியாக பல வேதனைகளை அநுபவித்தேன்."

நகுலன் கலக்கமடைந்தவர் போல் காணப்பட்டார். சிறைச்சாலைச் சம்பவங்கள் அவரை மிகவும் பாதித்திருந்தது.

"தம்பி, நகுலன்! சிறைச்சாலைகளில் சித்திரவதை, பாலியல் வல்லுறவு என்பன எல்லா நாட்டிலேயும் நடைபெறுவது உண்மைதான். தமக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்காக வன்முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஒரு கைதியின் பாலுறுப்புக்களைத் தாக்கும்போது தகவலை வெளிப்படுத்துவான் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாலுறுப்புக்களைப் பல விதமாகச் சித்திரவதை செய்கிறார்கள். இது மட்டுமல்ல சிறைச்சாலைகளில் கைதிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் பயன்படுத்தப்படுகிறார்கள். பாலுறுப்பைத் தாக்குவது, பாலுறுப்பில் மின்சாரம் பாய்ச்சுவது, பாலுறுப்பில் காரமான பொடிகளைத் தூவுதல், தடி அல்லது கம்பிகளைச் செலுத்துவது போன்ற சித்திரவதைகளும், குதம் வழியே உறவுகொள்ளல், தமது பிறப்புறுப்பை உறுஞ்சும்படி கேட்டல் போன்ற பாலியல் வன்முறைகளும் இடம் பெறுவது அறியக் கூடியதாக உள்ளது"

"ஓம் ஐயா, நீங்கள் கூறுவதெல்லாம் நான் இருந்த சிறைச்சாலையிலும் நடந்தது. பலர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்,"

"தம்பி, பல நாடுகளில் இப்படியான சித்திரவதைகள் நடந்தாலும் நமது நாட்டில் தமிழ் இளைஞர்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே! சரிதம்பி. நீங்களும் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கிறீர்கள். இது உங்களை இப்போது எப்படிப் பாதித்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?"

"ஐயா! எனக்கு இப்போது 30 வயது. பெற்றோர்கள் எனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள். எனது மாமாவுடைய மகளைத்தான் பேசுகிறார்கள். அவள் அழகானவள். எனக்குத் திருமணம் செய்ய முழு விருப்பம். ஆனால்...."

"என்ன நகுலன்! சொல்லுங்கள். அவளுக்கு விருப்பமில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை, இல்லை. அவளுக்கு நான் என்றால் உயிர்." என்றான் அவசர அவசரமாக.

"அப்போ என்ன தயக்கம். திருமணத்தை நடத்த வேண்டியதுதானே."

நகுலன் அலுவலகத்தை ஒரு தரம் சுற்றிப் பார்த்தார். பின் இன்னும் நெருக்கமாகக் கதிரையை என் அருகில் இழுத்து கொண்டார்.

"ஐயா! உண்மையிலேயே திருமணம் செய்ய எனக்குப் பயமாக இருக்கின்றது. எனது பாலியல் உறுப்பு பல தடவை பாதிக்கப்பட்டதால் குடும்ப வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் என்று எனது மனச்சாட்சி கூறுகிறது.

இந்தச் சந்தேகம் என்னைச் சித்திரவதை செய்கிறது. திருமணம் செய்ய விருப்பம் இருந்தாலும் தயக்கம் ஏற்படுகிறது."

நகுலன் ஆதங்கத்துடன் காணப்பட்டார்.

"நகுலன்! நீங்கள் ஒரு முழுமையான ஆண்மகன். திருமணமாகக் கூடிய வயதில் இருக்கிறீர்கள், 10 வருடங்களுக்கு முன் சிறைச்சாலையில் ஏற்பட்ட தாக்கம், இன்று வரை உங்கள் உடலில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. உங்கள் மனதில் தான் தாக்கம் ஏற்பட்டுள்ளது. பால் உறுப்புக்களில் சித்திரவதை செய்யப் பட்டதால் நீங்கள் குடும்ப வாழ்க்கைக்குப் பொருத்தமற்றவர் என்று உங்களுக்கு யார் சொன்னார்கள்?"

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

(தொடரும்)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

மேதினம் வந்திட்டுது பாருங்கோ. வலு கொண்டாட்டம் தானே. மே தினத்தையும் தைப்பொங்கல், வருஷப்பிறப்பு, கிறிஸ்மஸ், ஹஜ்ஜுப் பெருநாள் போல ஒரு பண்டிகையாக் கொண்டாடுற காலம் பாருங்கோ இது.

ஓசியா வாகனத்தில கூட்டிக்கொண்டு போய் வலு ஷோக்கான கொண்டாட்டங்களையெல்லாம் திறந்த வெளி அரங்குகளில ஓசியாவே காட்டக்க, - இத விடத் தொழிலாளர் வர்க்கத்துக்கு என்ன சொர்க்கத்தைக் காட்டேலும் சொல்லுங்கோ. ஷோவெண்டால் சாதாரண ஷோவே? இந்தியாவிலயிருந்து இறக்குமதி செய்த பெரும்பெரும் பாட்டுக்காரர்களும், சினிமா நட்சத்திரங்களும், அதிலும் நல்லா மேக்கப் பண்ணி மினுங்கல் சட்டையுடுத்த நடிகைகளெல்லாம் கொத்துக் கொத்தாய் வந்து நிண்டு ஓப்பின் எயாரில ஃபிளையிங் கிஸ் தரேக்க ஒரு பெரிய வர்க்கப் புரட்சியையே நடத்தி முடிச்ச புல்லரிப்புக் கிளம்பாதோ பின்ன?

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டந்தான் அண்டைக்கு. சிவத்தச் சட்டை போட்ட ஒரு கூட்டம் ஒரு பக்கம், பச்சைச் சட்டை போட்ட ஒரு கூட்டம் மற்றப் பக்கம், நீலச் சட்டை போட்ட இன்னொரு கூட்டம் இன்னொரு பக்கம், சிலவேளை இந்தமுறை யூனிபோம் போட்ட கூட்டம் வேறொண்டாயும் ஏட்டிக்குப் போட்டி, லொட்டிக்கு லொட்டியெண்டு கலர் காட்டிக் கலக்கித் தள்ளப் போறாங்கள்.

மே தினத்தை எல்லாரும் தொழிலாளர் தினமெண்டுதான் சொல்லுறாங்கள். ஆனால் முதலாளிகள்தான் இதை இப்ப அமோகமாக் கொண்டாடுறாங்கள். இந்தப் பெரிய பாட்டுக் கோஷ்டிகளையும் சினிமா நட்சத்திரங்களையும் இறக்கித் தள்ளுறதெண்டால் அன்றாடங் காச்சிறதுக்கே திண்டாடுற தொழிலாளர் வர்க்கத்தால ஏலுமோ பாருங்கோ? அதுதான் முதலாளி வர்க்கமே வரிஞ்சு கட்டிக்கொண்டு இண்டைக்கு மேதினத்துக்கு உபயகாரரா நிக்குது.

உவை, மேதினமெண்டுட்டு மேடையேறிப் பேசிற பேச்சுக்களைக் கேட்டால், தேன் வந்து பாயுது காதினிலேயெண்டு எங்கட பாரதி சொன்னது போல,

காது குளிர்ந்து கண்ணீரும் கொட்டும். அந்தளவுக்கு வெளுத்து வாங்கிப் பேச்சு நடக்கும். லவுட்ஸ் ஸ்பீக்கரெல்லாம் தொண்டை கிழியக் கத்தும். கத்தலுக்கு நடுவில பாட்டுக்கச்சேரி. பிறகு இன்னொரு பிரபலம் வந்து இடிமுழங்கிட்டுப்போக, அடுத்ததா ஒரு குட்டி நாடகம், பின்னால கட்சித் தலைவர் ஒரு உணர்ச்சிகரப் பேச்சு, அதுக்குப் பின்னால நடிகர் நடிகைகளெல்லாம் பொம்மைகள் போல வந்து கைகாட்டி, செல்லக் குரலில நாங்களும் தலைவருக்குத்தான் சப்போட், நீங்களும் சப்போட் பண்ண வேணுமெண்டு அன்புக் கட்டளையிட, பூரிச்சுப்போய் கூட்டம் போடுற கோஷம் விண்ணைப் பிளக்கும். - இதெல்லோ மேடே.

அத விட்டிட்டு அண்டைக்கு அந்த அநியாயப் பாவிகள் ஏதோ எட்டுமணி நேர வேலை கேட்டு ஆர்ப்பாட்டஞ் செய்து சூடு வாங்கிச் செத்தாங்களே சிக்காக்கோவில. தேவையா இது?

இதுக்குப்போய் உயிரை மாய்க்கிறதவிட இப்ப நாங்கள், இடதுசாரிகளும் தொழிலாளர் வர்க்கமும் சேர்ந்து, ஒட்டு மொத்தக் குத்தகைக்கு மேதினத்தை முதலாளி வர்க்கத்துக்கு வித்துப்போட்டு என்ன ஷோக்காக் கொண்டாட்டம் நடத்திறம் பாத்தியளே. இந்தப் புத்தி அந்தக் காலத்தவருக்கு வரேல்லையே!

இப்ப முதலாளியே மேதினக் கூட்டத்துக்கு வரச்சொல்லி வண்டியனுப்பிச் சட்டையும் தொப்பியும் சொந்தக் காசில வாங்கித் தாறான் போட்டுட்டு வரச்சொல்லி. இதுக்கு மிஞ்சின ராஜபோகம் எப்ப வரும்?

அத விடுங்கோ. இப்ப யார் கண்டியளோ, தொழிலாளர் விடுதலை, வர்க்கப் புரட்சி எண்ட வார்த்தைகளை ஒரு பேச்சுக்குத் தன்னும் உச்சரிக்கிறான்? புரட்சி கிரட்சியெல்லாம் மலையேறிப்போன காலம், விட்டுத் தள்ளுங்கோ. சோவியத் யூனியனில மழை பெஞ்சாத்தான் இங்க குடை பிடிக்கிற எங்கட கொம்யூனிஸ்ட் தலைவர்களெல்லாம் சோவியத் யூனியனும் துண்டு துண்டாய் உடைஞ்ச பிறகு குடைய மடிச்சு மூலையில வைச்சிட்டு இப்ப வயதுபோய் ஈசிச் செயாரில படுத்திட்டினம். இப்ப இந்தக் கம்யூனிஸ்டுகள் புரட்சி யொண்டும் செய்யத் தேவையில்லை, சந்தர்ப்பவாதிகளாய் மாறித் தொழிலாளர் வர்க்கத்துக்குத் துரோகம் செய்யாமல் இருந்தாலே போதுமெண்ட நிலை. முந்தியெண்டால், கம்யூனிஸ்ட் தலைவர்கள் தொழிலாளர் வர்க்கத்தைத் தேடித் தேடிப் போவினம். இப்ப தொழிலாளர் வர்க்கம் எங்கடாப்பா எங்கட கம்யூனிஸ்டுகளெண்டு தேடிப் போனால் அவை கதவைச் சாத்திப் போட்டுச் சத்தம் போடாமல் படுத்திருக்கிற நிலைமை. முதலாளி வர்க்கக் கட்சிகள்தான் இப்ப தொழிற்சங்கங்களையும் நடத்துது.

எங்கட கம்யூனிட்டுகள் முதலில தாங்கள் தாங்கள் நேர்மையா வாழ்ந்தாலே போதும். உந்தக் கமலஹாசனின்ர அன்பே சிவம் படத்தில சிம்பிளாக் காட்டியிருக்கிறான் ஒரு கம்யூனிஸ்ட் எப்பிடி அக்கம் பக்கத்தில இருக்கிறவங்களோட அன்போடயும் பண்போடயும் வாழ்ந்திட்டுப் போறானெண்டு. இங்க எங்கட ஆக்களுக்கு கம்யூனிஸம் படிச்சவுடன, அறப்படிச்ச மேதாவித்தனம் செருக்கேறி அன்பும் பாசமும் அடுப்படிக்கு ஓடிடுது.

என்னவோ, எங்கட கம்யூனிஸ்டுகளுக்கும் தொழிற்சங்கவாதிகளுக்கும் டாட்டா காட்டிப் போட்டு நாங்கள் இப்ப மேதின மியூசிக் ஷோவுக்குப் போய் விசிலடிச்சிட்டு வாறம். இந்த ஒரு நாளாவது தொழிலாளருக்குச் சந்தோசமாப் பொழுது போக்க விட்டதுக்கு மெத்தப் பெரிய உபகாரம். இதுக்கு மேல நானும் நிண்டு எழுதிக் கொண்டிருந்தால் இந்தப் பெரிய சினிமா நடிகரெல்லாரையும் எனியெப் வெண்டு நேரில காணுறது? ஓ.கே. பாய்!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# நினைத்து, நினைத்து சிரிக்க

## வக்கீல் ஜோக்ஸ்

இரண்டு வக்கீல்கள் பேசிக் கொண்டு இருந்தனர். முதலாமவர் சொன்னார்,

"என் வீடு திடீரென தீப்பிடித்தது, இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இருந்து, இரு லட்ச ரூபாய் வீட்டிற்கு, ஐந்து லட்ச ரூபாய் வசூல் செய்தேன்" என்றார்.

உடனே அடுத்தவர்,

"என் வீட்டிற்கு வெள்ளம் வந்துவிட்டது. அதனால் இரண்டு லட்ச ரூபாய் வீட்டிற்கு, பத்து லட்ச ரூபாயை இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வசூல் செய்தேன்" என்றார்.

"நான் தீ வைச்சிட்டேன், நீங்க எப்படி வெள்ளம் வர வைச்சீங்க" எனக் கேட்டார் முதலாமவர்.

---

ஒரு இடத்தில் பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பேசிக் கொண்டிருந்த ஒருவர், "வக்கீல்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள்" என்றார். உடனே கூட்டத்தில் இருந்து ஒருவர் எழுந்து "எங்களை அவமானப் படுத்தாதீர்கள்" என்றார்.

"ஏன்... நீங்கள் வக்கீலா"

"இல்லை. கொஞ்ச நாள் பைத்தியக்காரனாக இருந்தேன்" என்றார்.

---

காதலர் தினத்தன்று ஆயிரம் வாழ்த்துக் கடிதம் வாங்கி வந்த ஒருவர், தபால் கந்தோர் வாசலில் உட்கார்ந்து டெலிபோன் டைரக்டரியில் முகவரி பார்த்துக் கடிதங்களில் பெயர் எழுதி தபாலில் சேர்த்துக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஒருவர் ஆச்சரியமடைந்து

"அடேங்கப்பா உங்களுக்கு இத்தனை காதலிகளா" எனக் கேட்டார்.

"இல்லை, நான் விவாகரத்துக்கு வாதாடுகிற வக்கீல்" என்றார் அவர்.

---

விசாரணை நடந்துகொண்டிருந்தது.

"நீதான் கொலை செய்தாயா" வக்கீல் கேட்டார்.

"இல்லை" சாட்சி பதில் சொன்னான்.

"பொய் சொன்னால் என்ன தண்டனை என்று தெரியுமா?"

"தெரியும், கொலைக்குத் தரும் தண்டனையை விட பொய்க்கு குறைவுதான்."

---

நீதிமன்றம் ஆரம்பமானது. முதல் வக்கீல் எழுந்து, "என்னுடைய எதிர்க்கட்சி வக்கீல் ஒரு மடையன், மூடன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்" என்றான். உடனே கோபப்பட்டு எழுந்த எதிர்க்கட்சி வக்கீல்,

"யுவர் ஆனர், இவன் ஒரு பைத்தியக்காரன், இவன் சொல்வதைக் கேட்காதீர்கள்" என்றார். உடனே நீதிபதி, "உங்களைப் பற்றிய அறிமுகங்கள் போதும், கேஸைத் தொடங்குங்கள்" என்றார்.

# இந்தவாரம் உங்கள் பலன்

04.05.2003 தொடங்கி 10.05.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

## கிரக நிலை

மேடம்- சூரியன், புதன், இடபம்- இராகு, மிதுனம்-சனி, கர்க்கடகம்-வியாழன், விருட்சிகம்-கேது, மகரம்-செவ்வாய், கும்பம்-வெள்ளி.
சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம்இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் மந்தம், பொருள் விரயம், உறவினர் பகை, நோக்கக் குறைவு, மனக் கலக்கம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக்குறை நீங்கும், காரியானுகூலம், தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பெரியோர் உறவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை. வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மிதுனம்:-**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) இனசன நன்மை, பெரியோர் உதவி, பொருள் வரவு, கௌரவம், வெளியிடப் பிரயாணம், உத்தியோகக் கஷ்டம், வீண்குறை கேட்டல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திய இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டம், வீண் அலைச்சல், மனக் கிலேசம், பண வரவு தடை, எதிர்பாராச் செலவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், மனவிரக்தி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**சிங்கம்:-**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன கூடல், புதிய தொழில் பேறு, பிரயாண மிகுதி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கன்னி:-**
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் உயர்ச்சி, பொருள் வரவு, உயர்ந்த நிலை, கௌரவம், மனக்குறை நீங்கும். உத்தியோக மேன்மை, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**துலாம்:-**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) மனக்குறை நீங்கும், தொழில் நன்மை, குடும்ப சுகம், உயர்ந்தோர் நட்பு,உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**விருட்சிகம்:-**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நிலை உயர்ச்சி, உறவினர் பகை, குடும்ப கலகம், பெரியோர் உதவி, பொருள் விரயம், உத்தியோகச் சிக்கல், வெளியிட வாழ்க்கை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**தனு:-**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) காரியானுகூலம்,தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பொருள் வரவு, பிரயாண மிகுதி, உத்தியோகச் சிக்கல், மனக் கலக்கம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) மனக் கலக்கம், குடும்பப் பிரச்சனை, பொருள் விரயம், வீண் குறை கேட்டல், உத்தியோக மகிழ்ச்சி, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கும்பம்:**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்,) தொழில் கஷ்டம், பொருள் விரயம், பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கவலை, பதவி மாற்றம், மாணவர் கல்வியில் உயர்ச்சி, மந்த நிலை நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி,) தொழில் நிலை உயர்ச்சி, பொருள் வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, உத்தியோக சிரமம், வீண் அலைச்சல், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்,
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O. (QD/81/News/2003)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்மாலை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

325657


# புத்தம் புதிது

ஐரோப்பிய சந்தையில்தான் அதிகம் விற்கிறது. 2001 ம் ஆண்டு செப்டம்பரில் ஜேர்மனியின் ஃபிராங் போட் நகரில் நடைபெற்ற கண்காட்சியில் இந்தக் கார் பார்வைக்கு வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில் 39 நாடுகளைச் சேர்ந்த 1000 வாகன உற்பத்தியாளர்கள் தமது கார்களை காட்சிக்கு வைத்திருந்தனர். பல நிறுவனங்கள் தமது புத்தம் புதிய தயாரிப்புகளை இதன்போது அறிமுகப்படுத்தியிருந்தன. படத்தில் உள்ள இந்த 'இத்தாலி' கார் பல முன்னணி நிறுவனங்களைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டுப் பலருடைய வரவேற்பையும் பெற்றது.




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


கண்காட்சியைக் காண வந்தவர்களுக்கு எந்தக் காரைத் தெரிவுசெய்வது என்று தீர்மானத்திற்கு வர முடியாத அளவு மனக்குழப்பம்! அத்தனையும் அழகான நவீனமான கார்கள். சூரிய வெளிச்சம் பட்டுத் தெறிக்கும் போது கண்கள் கூசிப்போகும் மினுமினுப்பு. படத்திலிருப்பது இத்தாலியத் தயாரிப்பு. "புகாட்டி வேரோன்" ரக கார். நம் நாட்டிலெல்லாம் இதைக் காண முடியாது.



# அசத்தல்



படு கவர்ச்சியாக ஆடை அணிவார். அதற்கேற்றாற்போல வளமான உடம்பும்தான். 'மரியா காரே' இந்தப் பசுமையான அமெரிக்கப் பாடகியின் பெறுமதி பல மில்லியன் டாலர்கள்.

குறைந்தளவு காலத்திற்குள் 80–100 மில்லியன் டாலர் பெறுமதியான ஒப்பந்தங்களை இசை நிறுவனங்களுடன் செய்துகொண்டதன் மூலம் உலகின் மிகவும் பணக்காரப் பாடகியாக மரியா புகழ் சூடிக்கொண்டார்.

எந்தக் காலத்துடன் ஒப்பிட்டாலும் உலக அளவில் அதிகூடிய விற்பனையுள்ள இசை அல்பங்களின் சொந்தக்காரி தான் என்று உறுதியாகக் கூறுகிறார் இவர். இவரது 15 கோடி இசை அல்பங்கள் இதுவரையில் விற்றுத் தீர்த்திருப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. தொடர்ச்சியாக 61 வாரங்கள் அமெரிக்கப் பாடகர் தேர்வு வரிசையில் முதலாம் இடத்தில் இருந்து சாதனை படைத்திருக்கிறார்.

இவருக்கு ஏகப்பட்ட ஆண் நண்பர்கள். இசையோடு சம்பந்தப்படாத ஒரு நண்பரின் வாரிசை இவர் வயிற்றில் சுமப்பதாகக் கடந்த நாட்களில் சர்ச்சை கிளம்பியது. மரியா சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னார் "எங்களுக்குள் போதும் என்ற அளவு செக்ஸ் உறவு நடக்கிறது உண்மைதான். ஆனால் நான் கர்ப்பமாகிவிடாதபடி இப்போதைக்குக் கவனமாக இருக்கிறேன்"

# அபாயம்



ஒரே கத்திதான். ஆனால் ஒரு கத்தியல்ல. ஒவ்வொரு கூறாகப் பிரித்துக் கொண்டே போகலாம், ஒன்றிரண்டல்ல; 1822 பிளேடுகள் இந்தக் கத்தியில் காணப்படுகின்றன. இந்தக் கத்திக்கு ஒரு சுவையான வரலாறு இருக்கிறது. இது ஒரே நேரத்தில் இப்படி ஒட்டு மொத்த பிளேடுகளுடன் செய்து முடிக்கப்பட்ட ஒன்றல்ல. பிரிட்டனின் ஜோசப் ரோஜர் என்ற நிறுவனம் 1822ம் ஆண்டு இந்தக் கத்தியின் ஆரம்ப வடிவத்தைத் தயாரித்தது. அதன் பின்னர் காலத்துக்குக் காலம் வெவ்வேறு விசேட நிகழ்வுகளை, சந்தர்ப்பங்களை முன்னிட்டுப் புதிய பிளேடுகள் இணைக்கப்பட்டன.

கடைசியாக 2000 ஆண்டு புதிய மிலேனியத்தின் உதயத்தை முன்னிட்டு ஒரு பிளேட் சேர்க்கப்பட்டது. இத்தனை பிளேடுகளையும் வெளியில் தெரியாதவாறு மறைத்து ஒற்றைக் கத்தியாக வைத்திருக்கும் விதத்தில்தான் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

# அதிரடி



இலங்கை கிரிக்கெட் அணிக்குள் அதிரடியான மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டதன் பின்னர் முதலாவது களப்பரீட்சையில் இறங்கும் வாய்ப்பு நியூஸிலாந்து அணிக்குக் கிடைத்திருக்கிறது.

ஒரு சிறிய துரதிர்ஷ்டத்துடன்தான் நியூஸிலாந்து அணிக்கு முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆட வேண்டி ஏற்பட்டிருக்கிறது. நெதன் அஸ்ரல் நியூஸிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர். இலங்கை வந்துள்ள போதிலும் காயம் காரணமாக அவரால் விளையாட முடியாத நிலை. இது அந்த அணிக்கு குறிப்பிடத்தக்க பின்னடைவு எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் அஸ்ரல் மிகச்சிறந்த டெஸ்ட் துடுப்பாட்டக்காரர். 2002 மார்ச் 17ம் திகதி இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டி ஒன்றில் இவர் 168 பந்துகளில் 222 ஓட்டங்களைப் பெற்றார். அவ்வாறிருந்தும் இப் போட்டியில் 98 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. ஆனாலும் கூட தோல்வி அடைந்த போட்டி ஒன்றில் வீரர் ஒருவர் பெற்ற அதி கூடிய தனிப்பட்ட ஓட்டம் என்ற சாதனையில் அஸ்ரலின் இந்த ஓட்ட எண்ணிக்கை தான் முதலிடம்!

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபாகரன்–றொபினா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரவீன், தனது முதலாவது பிறந்த நாளை 27.04.2003 அன்று ஜேர்மனியில் லிவகூசனில் (Leverkusen) மிக விமரிசையாகக் கொண்டாடினார்.

**செல்வன் பி.பிரவீன் 27.04.2003**

குட்டிப் பிரவீனை அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பூட்டி, தொட்டம்மா, தொட்டப்பா, அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்றுப் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ஜா. ஜதீஸ் (இத்தாலி)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, ... ஆம் இலக்கத்தில் ... லிமிடெட் ஸ்தாபனத்தால் ... சி.பி.டி. அச்சகத்தில் மே 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.